
1-3-1979 50 காசு.
SIVAGAMA SUNDARI






அகில இந்திய சுற்றுலா
வர்த்தகப் பொருட்காட்சி
-1979

(சில அரங்குகள்)








# கலாச்சாரத்தின் கண்ணாடி கைவினைப் பொருட்களே!

## முதல்வர் எம்.ஜி.ஆர்

"பரிசு பெற்றார்கள்-வெற்றி பெற்றார்கள்'' என்று நாம் சொல்லும்போது, வெற்றி பெற்றவர்கள் மட்டுமே திறமைசாலிகள் என்றோ, வெற்றி வாய்ப்பைத் தவறவிட்டவர்கள் இனி எப்போதுமே வெற்றி பெறமுடியாது என்றோ அர்த்தமல்ல. இங்கே நடைபெற்ற போட்டி குறித்து நான் ஒரு கருத்தினைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நமது கைவினைப் பொருட்களுக்கு வெளிநாட்டில் நல்ல மதிப்பும் வரவேற்பும் இருக்கிறது.

இந்த நேரத்தில் கைவினைக் கலைஞர்களுக்கு ஒரு யோசனையை வேண்டுகோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



ஆப்பிரிக்க நாடுகளில் எல்லாம் மகாத்மா காந்தியை மதிப்புடனும் மரியாதையுடனும் போற்றி வணங்குகிறார்கள். கறுப்பர்கள் மத்தியில் சுதந்திர உணர்வு பொங்கியெழ முக்கிய காரணகர்த்தாவாக விளங்கினார் என்பதற்காக மகாத்மா காந்தி அவ்வாறு போற்றி வணங்கப்படுகிறார். ஆனால், அதே நேரத்தில் இந்த ஆப்பிரிக்க நாடுகளில் வசிக்கும் மக்கள் இந்தியாவைப் பற்றிய உண்மை விவரங்களைத் தெரிந்து கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். நான் ஒருமுறை நைரோபி நாட்டுக்குச் சென்றிருந்தபொது, அங்கிருந்த பலர் என்னிடம் கேட்ட கேள்வி என்னைத் திகைப்பில் ஆழ்த்தியது. ''உங்கள் இந்தியாவில் பெரும்பாலோர் பாம்பாட்டி வித்தைகள் செய்து தான் பிழைக்கிறார்களா?'' என்று அவர்கள் கேட்டார்கள்.

ஆப்பிரிக்க நாடுகளில் மட்டும் அல்ல, பல உலக நாடுகளில் இந்தியாவைப் பற்றித் தவறான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இந்தத் தவறான அபிப்பிராயங்களைப் போக்கி, இந்தியாவில் நிலவும் உண்மையான சூழ்நிலை பற்றிய விவரங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்தியாவில் தயாரிக்கப்படும் கைவினைப பொருட்களை வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் மிகுந்த ஆவலுடன், ஆர்வத்துடன்



இரண்டாவது பரிசு :
ாம். சுப்பிரமணிய ஆச்சாரி



மூன்றாவது பரிசு :



முதல் பரிசு : ஆர். பி. ராஜு

வாங்கிக் கொண்டு செல்கிறார்கள். எனவே அந்த வெளிநாட்டுக்காரர்களுக்கு நம் நாட்டின் உண்மை நிலவரத்தை எடுத்துச் சொல்லும் வகையில், கைவினைப் பொருட்களை, கைவினைக் கலைஞர்கள் தயாரிக்க வேண்டும்.



சுதந்திரப் போராட்டம் போன்ற, இந்திய வரலாற்றில் இடம் பெற்ற முக்கியமான சம்பவங்களைப் பிரதிபலிக்கும் வகையில் கைவினைப் பொருட்களைத் தயாரிக்கலாம். இந்தக் கைவினைப் பொருட்களின் மூலம் வெளிநாட்டார் நம்முடைய வரலாற்றில் இடம் பெற்ற முக்கியமான நிகழ்ச்சிகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளக் கூடிய நிலைமை உருவாகும்.

புறநானூற்றுக் கவிதைகளில் சொல்லப்படும் முக்கியமான நிகழ்ச்சிகளை, சம்பவங்களை, காட்சிகளை எடுத்துச் சொல்கின்ற வகையில் கைவினைப் பொருட்களைத் தயாரிக்கலாம். மக்களின் நல்வாழ்வு எவ்வாறு மலரவேண்டும் என்று அமரர் அண்ணா அவர்கள் ஆசைப்பட்டாரோ, அந்த அண்ணாவின் இலட்சிய ஆசைகளை-கொள்கைகளை-கோட்பாடுகளை பிரதிபலிக்கும் வகையில் கைவினைப் பொருட்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

நம்முடைய நாட்டின் கலாச்சாரத்தை-பண்பாட்டை-பாரம் பாரியத்தை-நாகரிகத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் கைவினைப் பொருட்களை கைவினைக் கலைஞர்கள் உருவாக்க வேண்டும்.

பல்வேறு ஓவியர்கள் வரைந்த பல்வேறு ஓவியங்களைப் பரிசீலித்து சிறந்த ஓவியத்தை ஓவியக்காரரைத் தேர்ந்தெடுப்பதைவிட வேறொரு முறையை கடைப்பிடித்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும். ஏதாவது ஒரு குறிப்பிட்ட கருத்தை அடிப்படையாக்க கொண்டு ஓவியங்களை தீட்டும்படி ஓவியர்களை கேட்டுக் கொள்ளலாம்.

## இனிப்பான செய்தி



பெரும்பாலான வாசகர்களின் விருப்பத்திற்கிணங்க 'தமிழரசு' இதழில் விரைவில் 'வெண்பாப் போட்டி' துவக்கமாகிறது.



**விவரம் அடுத்த இதழில்.......**

*With Best Compliments From*

GRAMS : GARG

PHONE : 552912
552682

**INDIAN STEEL & ALLIED PRODUCTS**

118, T. H. ROAD, MADRAS—600 081

RE. ROLLERS OF MS ROUNDS, FLATS, ANGLES, GATE CHANNELS

*Manufacturers & Exporters of Quality*

M. S. BOLTS NUTS (ALL KINDS)

*OUR SISTER CONCERN*

**BHARAT STEEL WORKS**

679, T. H. ROAD, MADRAS—600 081

*2nd Unit* 34, G N T ROAD, MADHAVARAM.

ஒரே கருத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு ஓவியர்கள் தீட்டிய பல்வேறு ஓவியங்களைப் பரிசீலித்து, சிறந்த ஓவியம் எது? சிறந்த ஓவியக்காரர் யார்? என்பதைத் தேர்ந்தெடுப்பதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கும்.



ஒரு பெண் விறகை வெட்டி தலையில் சுமந்து கொண்டு செல்லுவதுபோன்ற காட்சியை . எடுத்துக்காட்டும் 'காற்று' என்னும் தலைப்பிட்ட கலைப்படைப்புக்கு முதற் பரிசு வழங்கப்பட்டுள்ளது. அது, ஓவியமா? சிற்பமா? என்று எண்ணி வியக்கும் வகையில்-இரண்டும் கலந்து உறவாடும் வகையில், ஓவியச் சிற்ப மான இந்தக் கலைப் படைப்பு புதுமையான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஓவியச் சிற்பம் நமக்கெல்லாம் புதுமையைச் சொல்லிக் கொண்டிருக்கிறது. இயற்கையையும்



முதல் பரிசு :



இரண்டாவது பரிசு :



மூன்றாவது பரிசு :

இளமைத் துடிப்பையும் அதே நேரத்தில் ஏழ்மைக் கோலத்தையும் பின்னிப் பிணைந்ததாக இந்த ஓவியம் அமைந்திருக்கிறது.

வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் ஏழைகளின் அவல நிலையை இயற்கையாக நேரடியாகப் பார்க்கும்போது, பலர் அதை அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை; கவனிப்பதில்லை; ஏழ்மையின் கொடுமைகளை நேரில் பார்க்கும்போது அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அதே காட்சி, ஓவியமாகவோ, சிற்பமாகவோ வடிக்கப்படுமானால் பலர் அதைப் பார்த்து ரசிக்கிறார்கள்.

''எவ்வளவு தத்ரூபமாக சித்திரிக்கப்பட்டிருக்கிறது!'' என்று திகைப்பு அடைகிறார்கள். அந்தக் காட்சிக்குப் பின்னணியில் இருக்கின்ற வாழ்க்கையின் பிரச்னைகளையும் அவர்களால் புரிந்துகொள்ள முடிகிறது.



இயற்கையை நேரடியாகப் பார்க்கும்போது, அதை முற்றிலும் உணர்ந்துகொள்ள முடியாத பலர், அதே இயற்கையின் வடிவம் செயற்கையாகச் சித்திரிக்கப்படும்போது அதை முற்றிலும் உணர்ந்து கொள்ள முடிகிறது என்ற திறமை வியப்புக்குரியதுதான்.

இரண்டாவதாகப் பரிசு பெற்ற ஓவியம் கடவுளைப் பற்றிய ஒரு கதையைச் சொல்லுவதாகக் குறிப்பிட்டனர். சிவனையும் விஷ்ணுவையும் மனத்தில் வைத்துப் புராணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதி இருப்பதாகவும் தெரிவித்தனர்.

சிவனை தீப்பிழம்பு என்றும், தூய்மைக்கும் சீற்றம் கலந்த வீரத்துக்கும் ஆண்மைக்கும் எடுத்துக்காட்டு என்றும், விஷ்ணுவை பெண்மை கலந்த அன்பு என்றும் குறிப்பிடுகிறார்கள். என்னைப் பொறுத்தவரை நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். கடவுளை வணங்குபவர்கள் வணங்கட்டும்; யார் யாருக்கு எது எது பொருத்தமாக இருக்கிறதோ அதை எடுத்துக்கொள்ளட்டும். நன்மை இருந்தால் வரவேற்போம். தீமைகள் இருந்தால் எதிர்ப்போம்.

இங்கே ஓவியத்துக்கென மூன்றாம் பரிசு பெற்ற திரு. மாதவன் பிள்ளை எனது நண்பர். நாடக உலகத்தைச் சார்ந்தவர்களுக்கு அவரை நன்கு தெரியும். நாடகக் காட்சிகளுக்கு எந்த இடம் தேவையோ அந்த இடத்தை இயற்கையாகவே திரைச்சீலை மூலம் உருவாக்கித் தரும் பேராற்றல் பெற்றவர். அப்படிப்பட்டவர், போப் ஆண்டவர் படத்தை எழுதி இருக்கிறார் என்றால் அது தனது எளிமையான அடக்கமான பண்பை மற்றவர்கள் மனத்தில் பதிய வைத்திருக்கிறார் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

நமது நாகரிகத்தை - பண்பாட்டை - வரலாற்றை விளக்கும் கைவினைப் பொருட்களை உருவாக்கித் தாருங்கள் என்று கைவினைக் கலைஞர்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு செய்தால், நீங்கள் உண்மையை உலகுக்கு உணர்த்தியவர்கள் ஆவீர்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[சென்னை விக்டோரியா நுண் கலைக் கூடம் நடத்திய ஓவிய-சிற்பப் போட்டியில் வெற்றி பெற்ற கைவினைஞர்களுக்கு 9-2-79-ல் பரிசுகள் வழங்கி, ஆற்றிய உரை.]

# குழந்தைகள் திரைப்பட விழா

உலகெங்கிலும் அனைத்து நாடுகள் குழந்தைகள் ஆண்டு கொண்டாடப்படுகிற இந்நேரத்தில், சர்வதேசக் குழந்தைகள் திரைப்பட விழாவினை நடத்துகிற 'பெருஞ்சிறப்பு' தமிழகத்திற்குக் கிடைத்தது பெருமைக்குரியதாகும்.

8-2-1979ல் சென்னை கலைவாணர் அரங்கில் குழந்தைகள் திரைப்பட துவக்கவிழா நடைபெற்றது. செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்தார். அமைச்சர் தமது வரவேற்பு உரையில் குறிப்பிட்டதாவது :

''செய்தித்துறை ஏற்பாடு செய்த விழாக்களில் இது பெரிதும் ஏற்றச் சிறப்புடையது; தலைசிறந்த விழா என்று நான் கருதுகிறேன்.

''இந்த விழாவில், கலையுலகின் இருபெரும் சிகரங்களாகத் திகழும் புரட்சித் தலைவரவர்களும், அவர்தம் மானசீக குருவாக விளங்கும் திரைப்பட இயக்குநர் திரு.சாந்தாராம் அவர்களும் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

''திரைப்படங்களின் மூலம் நல்லனவற்றையே காட்டவேண்டும்; தீயனவற்றை-தீமை பயப்பனவற்றைக் காட்டவே கூடாது என்ற கொள்கையில் புரட்சித் தலைவர் ஒருவர்தான் உறுதியாக இருந்து, நல்ல கொள்கைகளையும், கோட்பாடுகளையும், சொல்லி வருகிறார். எந்த ஒரு திரைப்படத்திலும் அவர் புகைபிடிப்பவராகக்கூட நடித்ததில்லை.

''குழந்தைகள் உள்ளங்களில் தீய கருத்துக்கள் பதிந்துவிடாமலி[illegible] வழி செய்ய வேண்டும். [illegible]வையற்ற தீய காட்சிகளைச் சித்திரிக்கும் திரைப்படங்களைத் தயாரிக்கும் போக்கைத் தயாரிப்பாளர்கள் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

அடுத்து, பல வெற்றிப்படங்களைத் தயாரித்தவரும் குழந்தைகள் திரைப்படக் கழகத்தின் தலைவராகப் பணியாற்றி வருபவருமான திரு.வி.சாந்தாராம் அவர்கள் தமது சிறப்புரையில், குழந்தைகள் திரைப்படத் தயாரிப்பில் தமிழக அரசு அளித்துவரும் ஒத்துழைப்பையும், ஆதரவையும் மனமாரப் பாராட்டியதுடன், இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு சிறந்த ஒரு முன் மாதிரியாக-வழிகாட்டியாக விளங்குகிறது என்றும் குறிப்பிட்டார்.

விழாவைத் தொடங்கி வைத்த மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தமது உரையில், அரிய பல கருத்துக்களை வெளியிட்டார்கள். அவர் தம் உரையில் குறிப்பிட்டதாவது:

''இங்கே நடைபெறுகிற நல்லதோர் விழாவில் என்னென்ன பேசவேண்டுமோ அவையனைத்தையும் இரத்தினச் சுருக்கமாக மானசீக ஆசானாக நான் கருதுகிற சாந்தாராம் பேசிவிட்டார்.

''இந்திய குழந்தைகள் திரைப்படக் கழகத்தின் தலைவர் என்கிற மாபெரும் பொறுப்பினை ஏற்றிருக்கிற சாந்தாராம் அவர்கள் இங்கே பேசும்போது தமிழக அரசு செய்தித் துறை வாயிலாகக் குழந்தைகள் திரைப்பட விழாப்பணிகள் செவ்வனே நடக்கின்றன என்று புகழாரம் சூட்டினார். அதை நினைக்கும்போது என் உள்ளம் பூரிக்கிறது. நாம் பெருமிதம் அடைகிறோம் என்று சொல்வதிலும் தவறு இல்லை எனக் கருதுகிறேன்.

''அமைச்சர் ஆர்.எம்.வீ. பேசும்போது பெரியவர்களைத் திருத்த முடியாது. எனவே குழந்தைகளைத் திருத்துகிறேன் என்று எண்ணித்தான் சாந்தாராம் குழந்தைகளுக்காகப் படமெடுக்கிறார் என்று குறிப்பிட்டார். அதிலே நான் ஒரு திருத்தத்தைச் சொல்லி யாக வேண்டும்.

''குழந்தைகள் கெடுவதே பெரியவர்களால்தான். எனவே குழந்தைகளைத் திருத்துவது பெரியவர்களைத் திருத்துவதற்குச் சமமானதாகும். குழந்தைகளைத் திருத்துவது என்பதைவிட, காப்பது என்று சொல்வதே பொருத்தமானதாக இருக்கும். குழந்தைகளைக் காப்பாற்றியாக வேண்டும். நல்லது எது? கெட்டது எது என்று பிரித்துப் பார்க்கத் தெரியாத காலம் குழந்தைப் பருவமாகும். நல்லனவற்றைக் குழந்தைகளுக்கு சொல்லித் தர வேண்டும். அதே நேரத்தில் கெட்டனவற்றைக் குழந்தைகளுக்குத் தெரியாமலேயே மறைத்துவிட வேண்டும். கெட்டது என்பது என்ன என்றே தெரியாமல் அல்லது கெட்டது பற்றியவற்றை குழந்தைகள் சந்திக்க வாய்ப்பே இல்லாமல் செய்திட வேண்டும். இப்படிச் செய்தால் அது மாபெரும் தொண்டு என்பதில் சந்தேகமில்லை.

''அரசியல் கூட்டங்களுக்குக் குழந்தைகளை அழைத்து வராதீர் என்று நான் அரசியல் கூட்டங்களில் அடிக்கடி சொல்வதுண்டு.

''சாதிமத தாழ்வு பேதம் பற்றிய கருத்துக்கள் குழந்தைகளின் காதுகளிலேகூடப் படக்கூடாது என்பது என் எண்ணம்.

''நான் எனது படங்களில் கூட புகைபிடிக்கும் காட்சிகளில் நடிப்பதில்லை என்று குறிப்பிட்டனர். பணத்தைப் போட்டுத் திரைப்படம் தயாரிப்பவர்கள் இத்தகைய தியாகத்தினைச் செய்வார்களா என்றால் சந்தேகம்தான். ஆனாலும் நல்ல கதைகளைப் படமாக்கினால் நிச்சயம் வெற்றி பெறமுடியும்.

''பெரியவர்கள் எத்தகைய பழக்க வழக்கங்களுக்குச் சொந்தக்காரர்களோ அதே பழக்க



வழக்கத்துக்கே அவர்களின் குழந்தைகளும் செல்லுகின்றன. தமிழனுக்குப் பிறந்த குழந்தை ஒன்று அனாதையாக்கப்பட்டு ஆங்கிலேயனால் வளர்க்கப்பட்டால் அந்தக் குழந்தை தமிழ்ப் பண்பாட்டின்படி இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டுமோ ஒழுங்காக வளர்க்க வேண்டுமோ அத்தகைய ஆற்றலைப் பெரியவர்கள் பெற்றிருந்தால்தான் குழந்தைகளும் ஆற்றல் உள்ளனவாக வளரும்.

''குழந்தைகள் திரைப்படக் கழகத்துக்கு தமிழக அரசு செய்த உதவியைப் பாராட்டினார், சாந்தாராம். அதை உதவி என்பதைவிட காணிக்கை என்றுதான் குறிப்பிட வேண்டும்.

''பண்பாட்டைக் காப்பதில் தமிழர்களை மிஞ்சியவர் யாருமில்லை. இந்த வகையில் நமக்கு மிகுந்த அக்கறை உண்டு. கிராம மக்கள் இன்னமும் பண்பாட்டைவிடத் தயாரில்லை. இப்படிச் சொல்லும்போது தங்கள் குழந்தைகளை சில பணக்காரர்கள் கெடுப்பதை நினைக்கும்போது என் மனம் வேதனைப்படுகிறது. தவறானவைகளை நாகரிகம் என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றிப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டிருக்கிறோம் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

''தூங்காதே தம்பி தூங்காதே'' என்ற பாட்டைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

''தூங்காதே தம்பி தூங்காதே'' என்ற தலைப்பில் ஒரு கதையையும் உரையாடலையும் நானே எழுதி, திரைப்படமாகத் தயாரிக்கத் திட்டமிருந்தேன். ஆனால் அதற்குள் நிலைமாறி இன்று, முதல்வராக இருக்கிறேன். ஆனாலும் என்றாவது ஒருநாள் நானே அந்த படத்தை நிச்சயம் எடுப்பேன்.

''எப்போது என்று கேட்டால் அது இப்போது சொல்லமுடியாது. நானே அந்தப் படத்தை இயக்கவேண்டும் என்பது என் ஆசை.

''பெரியவர்களை மதிக்கும் பண்பு நம்மிடம் இல்லை. இந்த நிலை மாறி நம் உழைப்பைத் தந்தாக வேண்டும். ஆம். நாமனைவரும் உழைத்தாக வேண்டும்.

நடிகர் நடிகைகளுக்குப் பாதுகாப்பான சூழ்நிலை—தேவையான வருவாய்—ஓய்வூதியம் இவற்றுக்கு அரசு. உத்திரவாதம் தந்தால்தான் கலைஞர்கள் மத்தியில் தேசிய உணர்வை — லட்சியப் பிடிப்பை உருவாக்க முடியும்.

''கலைஞர்களைத் திருத்தும் முன்பாக கதாசிரியர்கள் தங்கள் உரையாடல்களில் அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளைப் பாதுகாக்க அரசு விரும்புகிற நேரத்தில் குழந்தைகளை எப்படிப்பட்ட நற்பண்புகளுக்குச் சொந்தக்காரர்களாக்க வேண்டும் என்கிற உணர்வினையூட்டும் கதைகளை உருவாக்கிடக் கதையாசிரியர்கள் முயற்சிக்க வேண்டும். திரைப்படத்துறை நல்ல வலுவுள்ள விளம்பர- பிரச்சாரத் துறை.

''குழந்தைகள் உள்ளங்களில் ஏற்படுகிற முதிர்ச்சிதான் நாட்டை, வளப் படுத்தும். எனவே திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு எனது வேண்டுகோளாக விடுக்கிறேன். எப்படிப்பட்ட கதைகளை வாங்குவது, தயாரிப்பது என்று திட்டவட்டமாக முடிவு செய்தாக வேண்டும்.

''105 படங்கள் தயாரிப்பில் உள்ளன என்பதை எண்ணும் போது என்னைவிட மகிழ்ச்சி அடைபவர் வேறு யாரும் இருக்க முடியாது.

''எனவேதான் சொல்லுகிறேன். நாட்டுக்குத் தேவையான — கண்ணியமான படங்களை எடுங்கள். நட்டம் ஏற்பட்டால் அரசு எந்தெந்த வகையில் முடியுமோ அந்தந்த வகையில் நிச்சயம் உதவி செய்யும் என்கிற உத்தரவாதத்தினைத் தருகிறேன்.

''பணத்தை முதலீடு செய்யும் தயாரிப்பாளர்கள் நட்டமடைய வேண்டும்—ஏழையாக வேண்டும் என்பது எனது நோக்கம் அல்ல. நீங்கள் வாழுங்கள், பிறரையும் வாழவையுங்கள். நட்டம் ஏற்பட்டால் பாதுகாப்புத் தருவோம். நல்ல படங்களுக்கு நிச்சயம் வரிவிலக்குத் தருவோம்.''

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு என். கிருஷ்ணமூர்த்தி, ஐ.ஏ.எஸ்., அனைவருக்கும் நன்றி கூறினார்.

விழா முடிவில் குழந்தைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட 'கங்கா-பவானி' வண்ணத் தமிழ்ப் படம் திரையிடப்பட்டது.




# இந்தியாவிலேயே சிறந்த என்.சி.சி. மாணவி

தேசிய மாணவர் படைகளின் அனைத்து இயக்ககங்களிடையே நடைபெற்ற போட்டியில் கடந்த ஆண்டு தமிழ்நாடு தேசிய மாணவர் அணி முன்னணியில் நின்று வெற்றி வாகை சூடிவீர முதன்மை வெற்றிக் கொடியைப் பெற்றது.

இதனையொட்டி 16 மாநிலங்களைச் சேர்ந்த தேசிய மாணவர்படை இயக்ககங்கள் பங்கேற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற தமிழ்நாடு தேசிய மாணவர் படையைப் பாராட்டி, பரிசு வழங்கும் விழா கடந்த ஆண்டு (2.2.1978) சென்னை ராணி மேரிக் கல்லூரியில் நடைபெற்ற பொழுது பரிசுகளை அளித்துப் பாராட்டுரை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் குறிப்பிட்டார்கள்:

''எதிர்காலத்திலும் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழக மாணவர்கள் முதல் வரிசையில் நிற்க வேண்டும் என்ற நிலையை நாம் உருவாக்கி வரவேண்டும்.

''நம்முடைய மாணவர்கள் பெற்ற வெற்றி நமக்கு மட்டும் சொந்தம் அல்ல. நாட்டு மக்களுக்கும் நாட்டு வாழ்வுக்கும் சொந்தமானதாகும்.

''இந்திய மாணவர்கள் மத்தியில் முன்வரிசையில் நிற்பவர்கள் தமிழர்கள் என்று சொல்லும் அளவுக்கு வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.

"தொடர்ந்து தமிழகம் எதிலும் முன்னின்று தகுதி சேர்த்து, தமிழ்ப் பண்பை-தமிழ்நாட்டுப் பண்பைப் பாதுகாத்துத் தர வேண்டும்'' என்று முதல்வர் அவர்கள் எடுத்துரைத்ததை இவ்வாண்டு உண்மையாக்கி காட்டியிருக்கிறார் ராணிமேரிக் கல்லூரி மாணவியான செல்வி சிவகாமசுந்தரி.

இந்த ஆண்டு தேசிய மாணவர் படையில் அனைத்து இந்தியாவிலும் சீனியர் டிவிஷனில் சிறந்த பயிற்சிப் படைஞராக (All India Best Cadet—Senior wing) தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் செல்வி சிவகாமசுந்தரி.



ரோசரி மெட்ரிகுலேஷன் பள்ளியில் படித்த சிவகாமசுந்தரி கல்லூரியில் சேர்ந்த பிறகுதான், 1976ஆம் ஆண்டில் என்.சி.சியில் சேர்ந்தார். இவருடைய தந்தை டாக்டர் நச்சினார்க்கினியன் தாயார் டாக்டர் வத்சலா.

முறைப்படி நாட்டியம் கற்றிருக்கும் சிவகாமசுந்தரி ஆப்பிரிக்க நாடுகளுக்குச் சென்றிருக்கிறார் அங்கே அவருடைய நாட்டிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றிருக்கின்றன. சத்துணவை முக்கிய பாடமாகக் கொண்டு பி.எஸ்சி மூன்றாம் ஆண்டு படிக்கும் சிவகாமசுந்தரி 'நியூட்ரிஷன்' பாடத்திலேயே எம்.எஸ்சி., பட்டம் பெறவேண்டும் என்று ஆர்வம் உடையவராக இருக்கிறார்.

## அனைத்து இந்தியப் போட்டி

ஒவ்வொரு மாநிலத்திலு[...]
தேசியமாணவர் படையி[...]
சிறந்தவராகத் தேர்ந்தெடுக்க[...]
பட்ட பயிற்சிப் படைஞர்களு[...]
கிடையே இப்போட்டி நடை[...]



என்.சி.சி. இளம்நிலைப் பிரிவில் இந்தியாவிலேயே சிறந்த கேடட்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செல்வி ஆர். ராதிகாவுக்கு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் பரிசளிக்கிறார்.

பெறுகிறது. பதினாறு மாநிலங்களிலிருந்தும்தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்கின்றனர். எல்லாப் போட்டிகளிலும் அதிக 'பாயிண்ட்' எடுத்தவரே அனைத்து இந்தியாவிலும் சிறந்த பயிற்சிப் படைஞராகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்.

1974ஆம் ஆண்டுக்குப் பிறகு இப்பொழுதுதான் என்.சி.சி யில் சீனியர் டிவிஷனில் அனைத்து இந்தியாவிலும் சிறந்த மாணவியாக தமிழ்நாட்டுமாணவி தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்

**ராணிமேரிக் கல்லூரிக்குப் பெருமை**

ராணிமேரிக் கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியரும் என்.சி.சி., பயிற்சி ஆசிரியருமான திருமதி ஜமுனா கல்யாணி ஸ்ரீதரன் அவர்கள், அனைத்து இந்தியாவிலும் என்.சி.சி யில் சிறந்த மாணவியாக சிவகாமசுந்தரி தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதைப் பற்றி குறிப்பிட்டதாவது:

''சிவகாம சுந்தரி, போட்டியில் கலந்து கொள்ளும் பொழுதே நிச்சயமாக முதல்பரிசுகிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். அது உண்மையாகிவிட்டது. அதுமட்டுமல்ல இந்த ஆண்டு குடியரசு விழா அணிவகுப்பில் கலந்து கொண்ட எட்டுப் பெண்களில் நான்கு பேர் ராணிமேரிக் கல்லூரி மாணவிகள். செல்வி சிவகாமசுந்தரி. செல்வி ஆர்.சுனி. செல்வி ரஜினி ராமகிருஷ்ணா, செல்வி என். சுவர்ணலதா ஆகிய நால்வரும் அணி வகுப்பில் கலந்து கொண்டார் அங்கு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் பரிசு பெற்றனர்.

கடந்த ஆண்டு ராணிமேரி கல்லூரியில் 140 மாணவியர் என்.சி.சியில் சேர்ந்தனர். இவ்வாண்டு 145 மாணவியர் உள்ளனர். இப்பொழுது எங்கள் கல்லூரி மாணவியே சிறந்த மாணவியாக தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது எங்கள் மாணவியரிடையே மேலும் ஊக்கத்தை வளர்க்கும்''.

கடந்த ஆண்டு எங்கள் கல்லூரியில் பேசிய முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படைப் பயிற்சியைக் கட்டாயப் பாடமாக்கினாலும் நல்லது என்ற நிலை வளர்ந்து வருகிறது என்றார்கள். அதை உறுதிப்படுத்தும் வகையில் எங்கள் கல்லூரி மாணவி தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது பெருமை அளிக்கும் செய்தியாகும்''

ராணிமேரிக் கல்லூரியின்முதல்வர் (பொறுப்பு) திருமதி லட்சுமி துரைபாண்டியன் அவர்களும் ''செல்வி சிவகாமசுந்தரி அகில இந்தியாவிலும் தேசிய மாணவர் படையில் சிறந்த மாணவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது எங்கள் கல்லூரிக்கு பெருமை தரும் செய்தியாகும்'' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

**யார் காரணம்?**

சிவகாமசுந்தரியோ நான் சிறந்த தேசிய மாணவர் படை மாணவியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதற்கு நான் காரணமில்லை. அந்தப் போட்டியில் கலந்து கொள்ளச் செல்லும்போது கூட நான் வெற்றி பெறுவேன் என்று நம்பவில்லை. ஆனால் எனக்குப் பயிற்சி அளித்த அதிகாரிகள்தான் நான் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குக் காரணம். அவர்கள் என் மீது வைத்திருந்த நம்பிக்கையும்



ராணி மேரி கல்லூரியில் என்.சி.சி. பயிற்சி அளிக்கும் பேராசிரியை திருமதி ஜமுனா கல்யாணி ஸ்ரீதரன் அனைத்து இந்தியாவிலும் சிறந்த என்.சி.சி. கேடட்டாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள செல்வி சிவகாமசுந்தரி, முதல்வர் பொறுப்பு) திருமதி லட்சுமி துரைபாண்டியன்.

## முதல்வரின் முத்துக்கள்

நாட்டின் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாகக் வேண்டிய கடமையும் பொறுப்பும் தங்களுக்கு இருக்கிறது என்பதை, உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கின்ற மாணவ மாணவியர்கள் உணர்ந்து கொண்டு செயல்பட வேண்டும்.

மனிதர்களிடம் இயல்பாக இரக்க உணர்ச்சி அமைந்திருக்க வேண்டும். எதிர்கால நன்மைகளுக்காக ஒவ்வொருவரும் இரக்க உணர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டும்.

தீயதைச்சந்திக்கும்வாய்ப்பைக் குழந்தைகளுக்கு இல்லாது செய்தால்,அதுவே நாம் சமுதாயத்திற்குச் செய்யும் பெரிய தொண்டாக இருக்கும்.



என ஆர்வமும்தான் எனக்கு இந்தப் பெருமையைத் தேடிக் கொடுத்தது.

''மாணவிகள் தேசிய மாணவர் படையில் சேருவதால்-பயிற்சி முகாம்களுக்குச் செல்வதால் படிப்பில் கவனம் குறையும் என்று சொல்வது தவறாகும். முழுநேரத்தையும் என்.சி.சி பயிற்சியில் செலவிட நேரும் பொழுது அதற்கு ஈடாக கொஞ்சம் கவனத்துடன் படிக்க வேண்டும். இது கடினமானது அல்ல! தேசிய மாணவர் படையில் சேர்ந்த பெண், தேர்வுகளில் நல்ல மதிப்பெண்களைப் பெற முடியும். என்னைப் பொறுத்த வரையில் எல்லாரும் தேசிய மாணவர் படைப் பயிற்சிக்குப் போய்ப் பயிற்சி பெறவேண்டும் என்று நினைக்கிறேன்'' என்று சொல்லும் சிவகாமசுந்தரிக்கு, தேசிய மாணவர்படையின் சிறந்த பயிற்சிப் படைஞராகத் தேர்வு பெற்றமைக்காக கல்வி உதவிப்பணமாக ரூ.1200 கிடைத்துள்ளது.

டில்லியில் நடைபெற்ற முகாமில் இவருக்குப் பரிசு வழங்கியவர் பாதுகாப்பு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்கள்,

**கடந்த ஆண்டில் பெற்ற வெற்றி!**

கடந்த ஆண்டில் தமிழ்நாடு-புதுவை மாநில தேசிய மாணவர் படை வீரமுதன்மை வெற்றிக் கொடியைப் பெற்றது. ஆனால், இவ்வாண்டு 24 புள்ளிகள் குறைவால் வெற்றிவாய்ப்பை இழந்தது. கருநாடக மாநிலம் தேசிய மாணவர் படை இயக்ககம் அவ்வெற்றியைப் பெற்றது. எனினும் தமிழ்நாட்டுக்கு அடுத்த நிலையிலுள்ள மாநிலத்துக்கும் உள்ள புள்ளிகளின் வித்தியாசம் 120க்கு மேலாகும். குறைந்த நிலையிலேயே தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்ககம் வெற்றி வாய்ப்பு நிலையை இழந்துள்ளது.

இதுவரை எட்டுமுறை வெற்றி பெற்று இந்தியாவிலேயே எந்த தேசியமாணவர்படை இயக்ககமும் பெறாத பெருமையைப் பெற்ற தமிழ்நாடு என்.சி.சி. இயக்ககம், அடுத்த ஆண்டு அந்தப் பெருமையைப் பெறும் என்று எதிர்பார்ப்போம்!

**இன்னொரு இனிக்கும் செய்தி-**

சென்னை செயிண்ட்தாமஸ் மவுண்ட்டில் உள்ள டாமினிக்ஸ் ஆங்கிலோ இந்திய மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவி செல்வி ஆர். ஜாதிகா அனைத்து இந்தியாவிலும் தேசியமாணவர் படையின் இளம் பிரிவில் சிறந்த மாணவியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.



குடியரசு நாள் விழா அணிவகுப்பில் கலந்து கொண்ட ராணி மேரிக் கல்லூரி மாணவிகள் செல்வி ஆர். சுனீ, செல்விரஜினிராமகிருஷ்ணா செல்வி என். சுவர்ணலதா செல்வி சிவகாம சுந்தரி.

தமிழ்நாட்டுக்குப் புகழ் சேர்க்கும் மாணவச் செல்வங்களை வாழ்த்தி மகிழ்வோம்! திறமையான தேசியமாணவர் படையை உருவாக்கி வரும் ஆற்றல் மிக்கவர்களைப் பாராட்டுவோம்! பெருமை கொள்வோம்!!

—மாமுலன்



# சிறைவாசிகளுக்கு சிறந்த சிகிச்சை

தமிழகத்தில், காசநோயின் கோரப்பிடிக்கு ஆளானவர்கள் ஏறத்தாழ ஆயிரத்தில் இருபது பேராகவும், அவர்களில், தொற்று நோய்த் தன்மை உடையோர் நான்கு பேராகவும் இருப்பதாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நோய்த் தடுப்புக்கான தேசிய இயக்கம் 1964 முதலாக நடந்து வருகிறது. அரசாங்க மார்பு நோய் மருத்துவ நிலையத்தாலும், மற்றும் அதைச் சார்ந்து பணியாற்றும் அரசு மருத்துவ மனைகள் மற்றும் தனியார் துறை மருத்துவமனை காசநோய்ப் பிரிவுகளாலும் சீரும் சிறப்புமாக இவ்வியக்கம் நடத்தப்பெற்று வருகிறது.

இத்தகையதொரு திட்டம் மத்திய சிறைச்சாலைகளில் உள்ள சிறைவாசிகளுக்கும் பணியாளர்களுக்கும் பயன்படுகிற விதத்திலே 20-2-79 அன்று சென்னை மத்திய சிறைச்சாலையில் துவக்கப்பட்டது.

சென்னை, சேத்துப்பட்டில் உள்ள காசநோய் மற்றும் மார்பு நோய் மருத்துவ நிலையத்தின் சார்பில் சென்னை மத்திய சிறைவாசிகளுக்கும் பணியாளர்களுக்கும் மருத்துவப் பரிசோதனைத் திட்டத்தை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ஆர். சவுந்தரராஜன் அவர்கள் துவக்கிவைத்தார்.

இவ்விழாவிற்குச் சட்டத்துறை அமைச்சர் திரு கே. நாராயணசாமி அவர்கள் தலைமை தாங்கினார்.

சிறைத்துறைத் துணைத் தலைவர் திரு கோ. முத்து வெங்கடாசலம் வரவேற்புரைக்குப் பின், மார்பு நோய் மருத்துவ நிலைய இயக்குநரான டாக்டர் கி. வ. கிருட்டிணசுவாமி, காசநோய்த் தடுப்புக் குறித்தும் சிகிச்சையளிக்கப் போகும் விதம் குறித்தும் விளக்கினார்.

**நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேச்சு:**

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தன்னுடைய துவக்க உரையின்போது குறிப்பிட்டதாவது:

மருத்துவமனைகளுக்கெல்லாம் நான் அடிக்கடி சென்று பரிசோதிப்பது பற்றி இங்கே வரவேற்புரையிலே குறிப்பிட்டார்கள். அரசின் திட்டங்கள் அடித்தள மக்களுக்குத் தங்கு தடையின்றிப் போய்ச் சேருகிறதா? அதன் பலனை அவர்கள் அடைய முடிகிறதா என்பதை அறியவே நாங்கள் அப்படிச் செய்கிறோமே தவிர வேறில்லை.

உணவு, உடை நோயற்ற வாழ்வு என்பது எல்லோருக்கும் தேவைப்படுவதேயாகும்.

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசையை வெறுக்கும் துறவிகள்கூட நோயற்ற வாழ்வு வாழவே விரும்புவார்கள்.

கொடிய நோய்க்கு ஆளான நக்கீரர் அந்நோய் நீங்க மன முருகி இறைவனைத் தொழுதார் என்று சொல்லுவார்கள்.

இராமலிங்க அடிகள்கூட, நோய் பிடியாதிருக்க வேண்டும் என்று பாடியிருக்கிறார்.

நோயற்ற வாழ்வு எல்லோராலும் எப்படி விரும்பப்படுகிறது என்பதற்காகவே இவற்றை நான் குறிப்பிடுகிறேன்.

சிறைவாசிகளான நீங்கள் ஒதுக்கப்பட்டவர்களாக உங்களைக் கருதிக் கொண்டிருக்கலாம். ஆனால், இந்த அரசு உங்களை உடன் பிறந்தவர்களாகவே கருதுகிறது. உங்களுடைய நலம் கருதித்தான் அரசின் ஆலோசனையோடு இக்குழுவின் சிகிச்சைமுறை இங்கே துவங்கி வைக்கப்படுகிறது.

இராஜராஜ சோழனின் தமக்கையாரான குந்தவை நாச்சியார் அந்நாளில் சிறைக்கைதிகளையெல்லாம் தானே நேரில் போய்ப் பார்த்து ஆறுதல் கூறினார்; நோய்வாய்ப்பட்டோரின் சிகிச்சைக்கு ஆவன செய்தார் என்று வரலாறு கூறுகிறது.

அந்த வகையிலே இந்த அரசு உங்களைப் பராமரிக்கும்; உடல் நலம் காக்கும் என்று நான் அரசின் சார்பிலே-முதலமைச்சர் அவர்கள் சார்பிலே உறுதி கூறிக் கொள்கிறேன்.

கண்நோய், மருத்துவர், சிறைவாசிகளுக்குச் சிகிச்சையளிக்க வருவதில்லை என்ற குறை இருப்பதாகச் சொன்னார்கள். இனி, அந்தக் குறையும் உங்களுக்கு நீங்குகிறது.

வாரம் ஒருமுறை, சிறந்த கண் நோய் மருத்துவர்கள் இங்கு வந்து, சிறைவாசிகளாகிய உங்களுக்கெல்லாம் சிறப்புற உதவுவார்கள்—சிகிச்சையளிப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குடும்பநலத் திட்டத்திற்கும் இங்கே ஐந்து பேர் ஒத்துழைப்புத் தர முன்வந்திருப்பதாக அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

காசநோய்த் தடுப்புக்காக இந்த அரசு நிறையச் செலவிடுகிறது. இந்த நோயின் கோரப் பிடியிலிருந்து தப்ப மருத்துவர்கள் கொடுக்கிற மருந்தைத் தவறாமல் உட்கொள்ளுங்கள். அப்படிச் செய்தால் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய அவசியமே இல்லை. வீட்டிலிருந்தவாறே தொடர்ந்து மருந்து சாப்பிட்டு வந்தால் ஐம்பதே நாளில் இந்நோயிலிருந்து குணம் பெறலாம்.

கொடுக்கிற மருந்தைச் சாப்பிடாமல், மருத்துவர்களை ஏமாற்றலாம் என்று மட்டும் கருதிவிடாதீர்கள்; அது உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்வதாகிவிடும்.



இந்தியாவிலேயே திறமையுள்ள, ஆற்றல்மிக்க மருத்துவர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள நாம் தவறிவிடக்கூடாது.

இவ்வாறு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சவுந்தரராசன் பேசினார்.

சட்ட அமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டதாவது:

'நாம் இருவர் நமக்கு இருவர்' என்று இங்கே நாம் சொல்கிறோம். ஜெர்மனியிலோ, 'நாம் இருவர் நமக்கு ஒருவர்' என்று சொல்கிறார்கள். அவ்வாறான குடும்பநலத் திட்டம் இங்கும் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

சிறைவாசிகளுக்கு அதற்காகச் சில சலுகைகளும் அளிக்கப்படுகின்றன.

வாசக்டமி செய்து கொள்கிற குறைந்த காலத் தண்டனை பெற்ற சிறைவாசிகளுக்கு (மூன்றாண்டுக்காலம்) தண்டனையில் மூன்று மாதம் குறைக்கப்படுகிறது.

நீண்டகாலத் தண்டனை பெற்ற சிறைவாசிகளுக்கு (மூன்றுக்கு மேல் இருபது ஆண்டுக் காலம்) 6 மாதத் தண்டனை குறைக்கப்படுகிறது.

ஆயுட்காலச் சிறைவாசிகளுக்கு ஓராண்டுத் தண்டனை குறைக்கப்படுகிறது.

இந்த சிறப்புத் தள்ளுபடிக் காலத்தை இன்னும் அதிகரிப்பது குறித்து ஆலோசித்து வருகிறோம்.

—இவ்வாறு சட்ட அமைச்சர் பேசினார்.

சிறைக் கண்காணிப்பாளர் திரு பகவதிமுருகன் நன்றி கூறினார்.

இப்புதிய திட்டத்தின் மூலம், மார்புநோய் மருத்துவ நிலையத்தின் நடமாடும் நுண்கதிர் இயந்திரத்தால் நுண்கதிர்ப் பரிசோதனை செய்யப்படும். இரத்தப் பரிசோதனையும் செய்யப்படும். காசநோயாளிகளுக்கும், மற்றும் குடிப்பழக்கத்தால் ஈரல் நோய்வாய்ப்பட்டோருக்கும் இதர நோய் உள்ளோருக்கும் தகுந்த சிகிச்சைகளுக்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் சுமார் இரண்டாயிரம் சிறைவாசிகளும் இருநூறு பணியாளர்களும் மருத்துவப் பரிசோதனை பெற இருக்கிறார்கள். இத்திட்டத்திற்காக அரசின் மதிப்பீட்டு செலவு ஐயாயிரம் ரூபாய் ஆகும்.

—"ராஜு"



# தமிழ்த் திரைப்பட உலகின் பொற்காலம்

டி. இராமானுஜம்,
பொதுச்செயலாளர்,
தமிழ்நாடு திரையரங்கு
உரிமையாளர் சங்கம்.

தமிழ்த் திரைப்பட உலகம் இன்று புதிய பொலிவுடன் மகிழ்ச்சியை அனுபவித்துக் கொண்டிருக்கிறது - காரணம் 1974-ம் ஆண்டில் மாநிலஅரசின் திடீர் வரித் தாக்குதலுக்கு உட்பட்டு அதனால் ஏற்பட்டதொரு குழப்பமான நிலை மாறி தற்போது செழிப்பாக இயங்கி வரும் படஉலகம் வருங்காலத்திலும் வளமாக இயங்கும் என்ற புதிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளது தான்!

1974-ல் அப்போதைய தி.மு.க. அரசு யாருமே எதிர்பாராத வண்ணம் திடீரென்று காட்சி வரியினை ரூ. 10-ல் இருந்து ரூ. 150 என்று ஏற்றிவிட்டது. கிராமப்புறத் திரை அரங்குகளுக்குக்கூடத் காட்சிவரி மிகவும் அதிகமான அளவில் ஏற்றப்பட்டது. ஏற்கெனவே இருந்த வரியினால் அனுமதிச் சீட்டு (ticket) விலையும் ஓரளவு அதிகமாக்கப்பட்டது.

இதன் காரணமாகத் திரைப்படம் பார்ப்போர் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்து வசூலும் குறைய ஆரம்பித்தது. எனவே ஏற்கெனவே நலிந்திருந்த திரைப்படத்துறை - இந்த மாற்றத்தின் காரணமாக வெளியிடப்படும் புதிய படங்கள்கூட குறைந்த வசூலையே தர முடிந்தது. மேலும் படங்கள் பல வசூலில் தோல்வியையே தழுவின. தமிழ்த் திரைப்பட உலகின் 'மூச்சு' திணற ஆரம்பித்தது. ஆகவே படஉலகம் துரிதமாக தெளிவான ஒரு முடிவுக்கு வந்தது.



திரைப்படத் துறையில் ஈடுபட்டிருந்த படத்தயாரிப்பு நிலைய உரிமையாளர்கள், தயாரிப்பாளர்கள், வெளியீட்டாளர்கள், திரை அரங்க உரிமையாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து அதிகமான வரி விதிப்பினை எதிர்க்கும் வண்ணம் குறுகிய காலத்திற்குத் திரை அரங்கங்களை மூடிவிட்டனர்.



இந்த நிலையில் மாநில அரசு திரைப்படத் துறையுடன் கலந்து ஆலோசித்து ஒரு சமரச முடிவுக்கு உட்பட முடிவு செய்தது. காட்சி வரி பெரிதும் குறைக்கப்பட்டது. அதே சமயம் ஒவ்வொரு அனுமதிச் சீட்டிலும் கூடுதல் வரி (additional surcharge) விதிக்கப்பட்டது. திரைப்பட உலகம் குறிப்பிடும் அளவுக்குப் புதிய பெரிய மாற்றமாக இது அமையாவிட்டாலும் "மூச்சு"த் திணறல் மட்டும் ஓரளவு குறைந்தது.

தமிழக அரசின் வருமானம் இந்த வரி விதிப்பினால் ஆண்டுக்கு ரூ. 2 கோடி அளவுக்கு அதிகரித்தது. திரைப்படத்துறையின் வருமானமோ ஆண்டுக்கு ஆண்டு மிகவும் குறைய ஆரம்பித்தது. 1973-74 ஆம் ஆண்டில் அரசுக்கு வந்த வருமானம் கேளிக்கை வரியினால் ரூ. 13 கோடி என்றிருந்தது. 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 21 கோடி என்ற அளவுக்கு உயர்ந்தது என்பது குறிப்பிடப்பட வேண்டும். திடீரென்று ஏற்பட்ட வரி அதிகரிப்பினால் அதன் கொடுமைகளால் திரை உலகம் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதனை

அ.தி.மு.க. வும் அதனுடன் உடன்பாடு கொண்டிருந்த கட்சிகளும் மாநில சட்டமன்றத்தில் விளக்கி உரிமைக்குரல் எழுப்பின.



மாநில அரசு உடனே திரைப்பட உலகின் இந்தப் பிரச்சனைகளை ஆராயும் பொருட்டு திரை உலகின் அனுவபம் வாய்ந்த திரு. பி. நாகிரெட்டி, திரு. ஏ. வி. மெய்யப்பன் உட்பட முக்கியமான தயாரிப்பாளர்கள், வெளியீட்டாளர்கள், திரைஅரங்க உரிமையாளர்கள் போன்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு ஒரு குழு அமைக்க முடிவு செய்தது. இந்தக் குழுவின் முக்கியமான பணிகளில் வரி விதிப்பினை எவ்விதம் ஒழுங்குபடுத்தலாம் என்பது ஒன்றாக இருந்தது.

இந்த ஆலோசனைக் குழு பஞ்சாயத்துக் கிராமங்களில் உள்ள திரை அரங்குகளில் குறிப்பிட்ட சதவீதம் காட்சி வரியினை மட்டும் வசூல் செய்தால் போதும் என்று தன் யோசனைகளில் ஒன்றாகக் கூறியது. இவ்வாறு செய்தால் வரி ஏய்ப்பு இல்லாது போய்விடும் என்றும் அதே சமயம் அரசுக்கும் அதன் பங்கான வரியும் கட்டாயம் வந்துவிடும் என்றும் திரை அரங்க உரிமையாளர்கள் பிற தொல்லைகளுக்கு உட்படாது சுதந்திரமாகச் செயல்பட உதவும் என்றும் இந்தக் குழு கருதியது.



இந்தக் குழுவின் ஆலோசனைகளை அப்போது இருந்த தி.மு.க அரசும் அதன் பிறகு வந்த குடியரசுத் தலைவரின் ஆட்சியில் ஆளுநர் திரு. மோகன்லால் சுகாதியாவும் இவைகளை ஏற்றுச் செயல்படுத்தவில்லை. இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டிய ஒன்று திரு. எம். ஜி. ஆர். அப்போது முதல் அமைச்சராக இல்லாது இருந்தாலும் அப்போதைய ஆளுநர் திரு. சுகாதியா அவர்களைச் சந்தித்து ஒருங்கிணைந்தவரி (Compounding Tax) விதிக்கப்பட வேண்டும் என்று



வற்புறுத்தியது ஆகும். இருந்தபோதும் இந்தக் குழுவின் பரிந்துரைகள் ஆலோசிக்கப்பட்டு ஏற்கவோ செயல்படுத்தப்படவோ இல்லை. ஆனாலும் திரைப்பட உலகம் மீண்டும் மீண்டும் பலமுறை இதனைச் செயல்படுத்த வலியுறுத்திக்கொண்டே வந்தது.

தென்னகத் திரைவானில் மங்காது ஒளிவீசும் நட்சத்திரமான திரு. எம். ஜி. ஆர். முதல்வரானதும் அவரது அ. தி. மு. க. அரசு பதவி ஏற்றதும்-திரைப்பட உலகின் எல்லாவிதமான துன்பங்களை-பிரச்னைகளை நன்கு உணர்ந்திருந்த முதல்வர் தமிழ்ப்பட உலகின் இந்தப் பிரச்சினைகளைக் கவனித்து அதன்மீது நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தார்.

கலைவாணர் அரங்கில் 1977 அக்டோபர் முதல்நாள் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் முதல்வர் திரு. எம். ஜி. ஆர். குறிப்பிட்டார்: ''அரசும் தன் வரி வருமானத்தை இழக்காமல், திரைப்படத்துறையும் அதிகமான வரித் தொல்லைகளுக்கு ஆளாகாமல் இருக்கும் வண்ணம்'' ஒருங்கிணைந்த வரி'' (Compounding Tax) முறை விரைவில் செயல்படுத்தப்படும்'' என்பதாகும். தமிழ்த் திரைப்படத் துறையினை நல்லதொரு நிலைக்கு உயர்த்திடவும் இழந்துவிட்ட பொலிவினை மீண்டும் பெற்றிடச் செய்திடவும் தன்னால் இயன்ற அளவுக்குப் பாடுபடுவதாக முதல்வர் அவர்கள் உறுதி கூறினார்.

அவரது உறுதியினைச் செயலாக்கிடும் விதத்தில் 1977-ஆம் ஆண்டு டிசம்பர் 26-ஆம் நாள் முதல் ''ஓட்டுமொத்த வரி'' அல்லது ''ஒருங்கிணைந்த வரி'' யாக வசூல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.




ஏற்கெனவே ஆலோசனைக் குழுவின் பரிந்துரை பஞ்சாயத்து கிராமங்கள் வரை ஒருங்கிணைந்தவரி முறை அமலாக்கப்படவேண்டும் என்றிருந்தபோதும் இந்தப் புதிய ஒருங்கிணைந்த வரி முறை இரண்டாவது நிலை (Second Grade) நகராட்சிகள் உள்ள ஊர்கள் வரை சுமார் 1,200 திரை அரங்குகளிலும் அமலாக்கப்பட்டது. இந்தப் புதிய வரி முறைக்கு உட்படாத சுமார் 300 திரைஅரங்குகள் முதல்நிலை நகராட்சிகள் மேலும் மாநகராட்சிகள் உள்ள் பெரிய நகரங்களில் உள்ளவையாகும். மற்ற இடங்களில் செயல்படும் முறையினை நன்கு ஆராய்ந்த பின்னர் இந்த ஊர்களிலும் புதிய வரி முறை செயல்படுத்தப்படும் என்று அரசு அறிவித்தது.



புதிய வரிவிதிப்பின் மாற்றத்தினால், நலிந்திருந்த தமிழ்த் திரைப்பட உலகம் புத்துணர்ச்சி பெற்று ஒளிர்ந்து வலிவுற்று வளம் பெற ஆரம்பித்தது.

1978 ஜனவரி முதல் தேதிக்குப் பிறகு ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் இருந்த ஆண்டுக்கு 50 படம் என்பது 150 என்று உயர ஆரம்பித்தது. 700 டூரிங் அரங்குகள் என்றிருந்த நிலை 1,000-க்கு மேல் என்ற அளவுக்கு இன்று வளர்ந்துள்ளது. இந்தத் துறையிலிருந்து வரும் வருமானம் மீண்டும் இந்தத் தொழிலிலேயே முதலீடு செய்யப்பட்டது.




குறிப்பிட்ட பகுதிக்குக் குறிப்பிட்ட தொகையினைக் கொண்டு பட விநியோக உரிமை பெற்று வந்த விநியோகஸ்தர்கள் கொடுத்து வாங்கிய விலையினைப் போலத் தற்போது இரண்டு மடங்கு கொடுத்துப் படங்களும் அதிகம் வாங்கும் அளவுக்கு அவர்கள் நிலை உயர்ந்துள்ளது.

நடிக நடிகையர்களிடம் 1978 ஜனவரிக்கு முன் ''இனாமாக'' தயாரிப்பாளர்கள் கால்ஷீட்டுகள் பெற்றார்கள் என்ற நிலை முற்றிலும் மாறி தற்போது எல்லா நடிக நடிகையரும் ஒரு நாளில் ஒரு படப்பிடிப்புக்குச் சில மணி நேரங்களே ஒதுக்கித் தர இயலும் என்ற அளவுக்கு மிகவும் சுறுசுறுப்பு அடைந்து ஓய்வின்றி உள்ளனர். பட உலகின் எந்தப் பிரிவிலும் கதவடைப்போ, வேலை நிறுத்தமோ ஏற்படவில்லை. நாள்முழுதும் ஓயாது பல மணி நேரம் எல்லாப் பிரிவினரும் சுறுசுறுப்பாகப் பணியாற்றி வருகின்றனர்.

புதிய பல குறிப்பிடப்பட வேண்டிய நல்ல மாறுதல்கள் அடைவதற்குக் காரணமாக இருந்த ''ஒருங்கிணைந்த வரி'' முறையினால் இன்னும் பல புதிய நன்மைகளும் கூட விளைந்துள்ளன. (1) வரி ஏய்ப்பு நடைபெறவில்லை. (2) வரி ஏய்ப்பினைக் கண்டுபிடிக்க அரசு செலவு செய்து வந்த தொகை முழுதும் தற்போது அரசுக்கு மிஞ்சுகிறது. (3) அரசுக்கு ஏற்கெனவே கிடைத்து வந்த வரித் தொகை எந்த வகையிலும் குறையவில்லை. (4) திரை அரங்க உரிமையாளர்கள் வாரத்துக்கு 21 காட்சிகள் என்பதற்குப் பதில் 28 காட்சிகள் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளனர். (5) வணிக வரி நிர்ணயிப்பதையும், செலுத்துவதையும் பற்றி அஞ்சிக் கொண்டிருந்த நிலை இப்போது இல்லை!




தற்போது ஒரு திரை அரங்கின் 21 காட்சிகளுக்கு ஆகும் மொத்த வசூல் தகுதி என்னவோ அதில் இத்தனை சதவீதம் 'ஒருங்கிணைந்த வரி' யாக கட்டாயம் வாராவாரம் செலுத்திட வேண்டும் என்றும் எஞ்சியுள்ள காட்சிகளுக்கு வரி செலுத்திட வேண்டிய அவசியம் இல்லை, என்பதனால் அதில் வரும் தொகை திரை அரங்க உரிமையாளர்கள் விநியோகஸ்தர்கள்-ஏன் திரைப்படத் தயாரிப்பாளர் படப்பிடிப்பு நிலைய உரிமையாளர் என்று எல்லோருக்குமே பயன் படுகிறது.

படங்கள் நல்ல வசூலுடன் ஓடி விநியோகஸ்தர்களுக்கு அதிக வருமானம் வரும்போது அவர்கள் தயாரிப்பாளர்களுக்கு அதிகத் தொகை கொடுக்க முன் வருவதும், தயாரிப்பாளர்கள் நடிக-நடிகையர்களுக்கு அதிகத் தொகை கொடுக்க ஒப்புக் கொள்ளுவதும் இயற்கையே.



இந்த ஒருங்கிணைந்த வரி முறை என்பது ஆலோசனைக் குழுவினரால் நன்கு தீவிரமாகப் பகுத்து, அலசி ஆராயப்பட்ட ஒன்று ஆகும். எத்தனை சதவீதம் வரி விதிக்கலாம் என்ன முறையில் விதிக்கலாம் என்பதனைக் கீழ்க்கண்டவாறு அறியலாம்.

ஒரு பகுதியில் எத்தனை அரங்கங்கள் உள்ளன. அதன் வசூல் நிலைமை ஒரு ஆண்டுக்கு எவ்வளவு என்பதனை ஆய்ந்து அந்த ஒரு ஆண்டுக்காலத்திற்குச் செலுத்தப்பட்டுள்ள கேளிக்கை வரி என்ன என்பதனைக்கொண்டு வகுத்து முடிவு செய்யப்பட வேண்டும் என்பதாகும்.

உதாரணத்துக்கு ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள ஒரு திரை அரங்கின் ஒரு ஆண்டின் மொத்த வசூல் 10 ஆயிரம் ரூபாய் ஆகவும் அதே ஒரு ஆண்டில் செலுத்தப்பட்டுள்ள கேளிக்கை வரி ஆயிரம் ரூபாயாகவும் இருந்தால் அந்தத் திரை அரங்கம் செலுத்தப்பட வேண்டிய வரி பத்து சதவீதம் என்ற அடிப்படையில் முடிவு செய்யப்பட்டது. இந்த முறையினால் தற்போது திரை உலகம் வளர்ச்சியும் வலிவும் பெற்றுள்ளது. திரை உலகின் அனுபவம் நிறைந்த திரு எம். ஜி. ஆர். அவர்களின் திறமைமிக்க வழிகாட்டும் தன்மையினாலும், அவரது திறமைமிக்க தளபதி திருஇராம.வீரப்பன் அவர்களின் ஒத்துழைப்பாலும் தற்சமயம் தமிழ்ப்பட உலகம் செழிப்புற்று வருகிறது. முதல்வர் அவர்களைப் போலவே திரு. வீரப்பன் அவர்களும் இத்துறையின் துன்பங்களை நன்கு அறிந்துள்ள கடுமையானதொரு உழைப்பாளி ஆவார். திரையரங்குகள் கட்டுவதற்கான கடுமையான விதிமுறைகளை அவர் வெகுவாகத் தளர்த்தியுள்ளார். இதனால், புதிய திரை அரங்கங்கள் கட்டப்பட்டன. கட்டப்பட்டு வருகின்றன. கடந்த 10 மாத காலத்தில் 300—400 டூரிங் அரங்குகள் புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எத்தனையோ பல நன்மைகளைத் திரை உலகுக்கு செய்துள்ள அண்ணா தி. மு. க. அரசு இன்னும் பல புதிய நன்மைகளைத் தமிழ்ப்பட உலகம் பெற்றிட வேண்டும் என்று பாடுபடுகிறது என்ற உண்மை திரை உலகில் உள்ள எல்லோருமே அறிந்த ஒன்று.

தமிழ்ப்பட உலகும் நன்றி உணர்வோடு அரசின் நடவடிக்கைகளை நோக்கி வருவதுடன் எப்போதும் அரசு செய்யும் பல நல்ல காரியங்களுக்கு உறவுக் கரங்கள் நீட்டக் காத்திருக்கிறது.

நன்றி: ஸ்கிரீன். 19-1-79.



அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டினை ஒட்டி, 'இந்தியக் குழந்தைகள்' என்ற புகைப்படப் பொருட்காட்சியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 19.2.79 அன்று சென்னையில் திறந்து வைத்தார்கள்.

# படமும் செய்தியும்

சென்னை சேப்பாக்கத்தில் மூன்றாவது சம்பளக் கணக்கு அலுவலகத்தை 3.2.1979 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் கி. மனோகரன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.








தேசிய குடும்பநல முத்தமிழ் விழா அலங்கார அணிவகுப்பை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் 22.2.1979 அன்று சென்னை நேரு விளையாட்டரங்கத்தில் துவக்கி வைத்தார்.

சிறிய கைத்தொழில்கள் மற்றும் கிராமத் தொழில்கள் குழுவின் அறிக்கையை, அக்குழுவின் தலைவரான டாக்டர் நாயுடம்மா அவர்கள் 22.2.1979 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தலைமைச் செயலகத்தில் அளித்தார்.





தெற்குப் பகுதிப் படையினரின் தலைமை அலுவலரான லெப்டினன்ட் ஜெனரல் திரு அப்ஹிமன்யூ வோஹ்ரா (Lt. Gen. Abhimanyu Vohra) தலைமைச் செயலகத்தில் முதல்வர் அவர்களை 20.2.1979 அன்று சந்தித்தார்.

சென்னையில் 23.2.79 அன்று நடைபெற்ற விழாவில் நேதாஜியும் நவீன இந்தியாவும் என்ற நூலை திரு. மூக்கையாத்தேவர் எம்.எல்.ஏ. வெளியிட மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.



# தாய்மொழி

பேரறிஞர் அண்ணா

(மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா வில் (7-9-1967) பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரையிலிருந்து)

நாட்டிலே ஒற்றுமை வேண்டும்—இது குறிக்கோள்-அனைவரும் ஏற்கத்தக்கது; இதன் வெற்றிக்காக அரும்பணியாற்றுவது நமது கடன்.

'நாட்டின் ஒற்றுமைக்காக-உன் மொழி உன் மரபு, அழிந்திடவும் ஒருப்பட வேண்டும்; பிறமொழியின் ஆதிக்கத்தை ஒப்புக் கொள்ள வேண்டும்'—இஃது அறிவுள்ள எவரும் ஏற்க முடியாதது. தன்மான முள்ள எவரும் எதிர்த்தாக வேண்டியது—இதனை இலட்சியம் என்றோ திட்டமென் றோ கூறுவது, இலட்சியம் என்பதற்கே களங்கம் தேடுவதாக முடியும்.

நாட்டுப் பொதுச் செல்வம் நாளும் வளர வேண்டும்; அதற்கான முறையில் அனைவரும் உழைத்திட வேண்டும்—இஃது எல்லோரும் ஒப்புக் கொள்ளத்தக்க இலட்சியம்—நாட்டுச் செல்வம் பெருகட்டும், அது நாலாறு பேர்களிடம் சென்று சிக்கிக் கிடப்பினும் கவலை வேண்டாம் என்றுரைப்பது, இலட்சியமாகாது—அதனைக் கேலிக் கூத்தாக்குவதாகும்.

கூடி வாழ்ந்தால் கோடி இன்பம்—இனிய எளிய இலட்சியம்.

கூடி வாழ்வோம், உன்னிடம் உள்ளது எனக்கு, என்னிடம் உள்ளதும் எனக்கு—என்று முறைவகுத்திடல், கூடி வாழ்வதாகாது. ஆட்டுக்குட்டியைத் தின்றுவிட்ட ஓநாய், ''என்னோடு ஒன்றாக ஆடு இணைந்துவிட்டது, நாங்கள் இணைபிரியாச் சகோதரர் ஆகிவிட்டோம்'' என்று கூறுவது போன்ற முறையில் 'ஒற்றுமை' வேண்டுவோர் நடந்திடக் கூடாது என்பதனை அறிவுறுத்த வேண்டும்.

பயிற்றுமொழி, பாடமொழி, ஆட்சி மொழி, இணைப்புப் மொழி என்ற சொற்றொடர்கள் வேகமாக உலவிடக் காண்கின்றோம்.

'தாய்மொழி என்னும் தகுதிக்கு ஈடாக, வேறு எந்தத் தகுதியையும் ஒரு மொழி பெற்றிடத் தேவையில்லை. ஆயினும் நமது தமிழ்மொழி, நமது தாய் மொழி என்பதால் மட்டுமன்று, வளமிக்கது என்பதாலும் எவரும் வியந்து பாராட்டத்தக்கதாகிறது. அந்த வளம் கெடாமலும், மேலும் வளரவுமான செயல்களைச் செம்மையாக்கித் தருவது உமது கடமையாகும். தமிழ், ஆட்சிமொழியாக எல்லாத் துறைகளிலும் திகழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் வெற்றி பெற்றிட உமது நல்லார்வம் நிரம்பத் தேவை.

உலகுடன் ஒட்டி வாழ்ந்திட, உலகின் அறிவுக் களஞ்சியத்தின் துணை பெற, ஆங்கில மொழியறிவு இன்றியமையாததாகிறது.

இந்தியாவின் பல பகுதிகளுக்கு இணைப்பு மொழியாகவும், இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்கும் இணைப்பு மொழியாகவும் ஆங்கிலம் இருந்திடட்டும் என்பதனை, நாட்டுப்பற்று அற்ற தன்மை என்றும் தேசியத் தன்மானம் அற்ற நிலை என்றும் கூறுவார் உளர். கூறுவார் என்று மட்டுமே குறிப்பிட்டேன்; கருதுவார் என்று கூறவில்லை, காரணத்தோடு.

ஆங்கிலம் முன்பு ஆதிக்கம் செலுத்தியவரின் மொழி என்பதாலே, அதனை இணைப்பு மொழியாகக் கொள்வது தேசியத் தன்மானமற்றது என்று கூறுபவர், அந்த ஆங்கில நாட்டுப் பணத்தைக் கடனாகவும் இனாமாகவும் பெற்றுத் தொழில் வளர்ந்திட முனைவதை, தேசியத் தன்மானத்தைக் கெடுப்பது என்று கூறிடக் காணோம். தொழில் நுட்ப அறிவு பெற்றிட ஆங்கிலேயரின் துணை தேடும்போது இந்தப் பேச்சு எழக்காணோம். மொழிப் பற்று என்னும்போது மட்டும்தான் இப் பேச்சு பேசுகின்றனர். எனவேதான் அவர்கட்கு ஆங்கிலம் கூடாது என்ற கருத்து இல்லை; கூறமட்டும் செய்கிறார்கள் என்றுரைத்தேன்.



கூறுபவரின் உண்மை நினைப்பும் வடிவமும் நன்றாகத் தெரிகிறது.

இந்தப் போக்கு வெற்றிபெற விடமாட்டோம் என மாணவருலகு உறுதியுடன் நிற்பதனை அறிந்திருக்கிறேன். மொழிப்பற்றின் எடுத்துக்காட்டாகத் திகழும் மாணவர்கட்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோது, மொழிப் பிரச்சினையிலே உள்ள சிக்கல்களை—புகுத்தப்பட்டுள்ள சிக்கல்களை நீக்குவதற்கான முயற்சிகளை, மொழிப் பற்றிலே முழு நம்பிக்கை கொண்டுள்ள தமிழக அரசிடம் ஒப்படைக்க வேண்டும், நம்பிக்கையுடன், என்று கேட்டுக் கொள்கின்றேன்.

# கடன் இல்லாத கூட்டுறவுச் சங்கம்

ஒருவருக்கு உடல்நலமில்லாதிருந்தது. நடக்கவே தள்ளாடினர். தடியூன்றி நடந்தார். ஒரு நாள், இருநாள் என்று சில காலம் ஆயிற்று. எப்பொழுது பார்த்தாலும் அவர் கையில் தடி இருந்தது. தடி இல்லாமல் அவரால் நடக்க முடியவில்லை. ஏன் இப்படி என்று கேட்டதற்கு, "உடம்பு சுகமில்லாமல் இருந்தபொழுது தடியூன்றி நடந்தேன், அதுவே இப்பொழுது பழக்கமாகி விட்டது...." என்று பதில் சொன்னார். இதைக் கேட்டதும் நமக்குச் சிரிப்பு வருகிறது அல்லவா?

கூட்டுறவுத் துறையின் மூலம், ஒரு தனிப்பட்ட நபரோ, நிறுவனமோ அல்லது ஒரு பெரிய அமைப்போ கடன் பெறுவது என்பது அபூர்வமான காரியமல்ல. அந்தக் கடனைப் பெற்று, அதன் மூலம் வளர்ச்சி கண்டு, அதற்குப் பிறகு இனிமேல் கடன் வசதி அவசியம் இல்லையென்றுசொல்லி விடுவது அபூர்வமான செய்தியாகும்.

இந்தச் சாதனையைச் சாதித்துள்ள சேலம் கூட்டுறவு பால் வழங்கு யூனியனைப் பாராட்டாமல் இருக்க முடியாது. 1976 ஜூன் மாதம் 11-ந் தேதி நிலவரப்படி, அரசு மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் இந்த யூனியன் பெற்றிருந்த கடன் தொகை நிலுவை ரூ. 85,700. ஆனல் 1978 நவம்பர் 20ந் தேதி நிலவரப்படி இந்தக் கடன் முற்றிலுமாக அடைக்கப்பட்டு, இப்பொழுது எங்கும் யாரிடமும் எந்தக் கடனும் பெறாத யூனியனாக இது திகழ்கிறது.

இன்று தமிழ்நாட்டில் மொத்தம் 21 கூட்டுறவு பால் வழங்கு யூனியன்கள் இருக்கின்றன. இவற்றில் 1975-76-ம் ஆண்டின் சிறந்த யூனியனாகத் தமிழ்நாடு அரசினரால் சேலம் கூட்டுறவுப் பால் வழங்கு யூனியன் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடந்த நவம்பர் 18-ந் தேதி சென்னையில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவின் போது வெள்ளிக் கேடயமும் வெள்ளிப் பதக்கமும் பெற்றது. தமிழ்நாடு உணவு அமைச்சர் மாண்புமிகு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள், யூனியன் தனி அலுவலர் திரு கே. குப்புசாமியிடம் அவற்றை வழங்கினார்கள். இவ்வாறு சிறந்த யூனியனுக்கான பரிசை சேலம் நகர கூட்டுறவு பால் வழங்கு யூனியன் பெறுவது இரண்டாவது தடவை. ஏற்கெனவே 1972-73-ம் ஆண்டின் சிறந்த யூனியனுக்கான கேடயத்தைத் தமிழ்நாடு கூட்டுறவு யூனியனிடமிருந்து இது பெற்றது.

சேலம் நகரத்து மக்களுக்குத் தரமான பால் கிடைக்க வேண்டும் என்பதற்காக, 1939-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த யூனியன், துவக்க காலத்தில் 300 பட்டணம்படி அளவிற்குப் பால் சேகரித்து, மக்களுக்கு வழங்கியது. இதற்காக கெஜ்ஜல் நாய்க்கன்பட்டி, உடையாப்பட்டி, கந்தம்பட்டி, சிவதாபுரம், பள்ளப்பட்டி, குமாரசாமிப்பட்டி ஆகிய இடங்களில் கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆயிரம் விவசாயிகள் சங்கத்திற்குப் பால் வழங்கி வந்தனர். யூனியன் படிப்படியே வளர்ந்து இன்று 117 பால் உற்பத்தியாளர் சங்கங்களைக் கொண்டதாக விளங்குகிறது. பத்தாயிரத்துக்கும் அதிகமான விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். நாள்தோறும் 20,000 லிட்டர் பால் திரட்டப்படுகிறது. பாலுக்குக் கொழுப்புச் சத்து அடிப்படையில் லிட்டருக்கு ரூ. 1.40 முதல் ரூ. 2.58 வரை வழங்கப்படுகிறது. பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குத் தகுந்த விலை கிடைக்கச் செய்வதுடன், கால்நடைகளுக்கான கலப்புத் தீவனத்தைக் குறைந்த விலையில் வழங்கி வருகிறது.

யூனியன் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து, சைக்கிள்கள் மூலம் நகரின் பல்வேறு பகுதிகளுக்குப் பால் சப்ளை செய்யப்பட்டு வந்தது. இதனல் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு சில வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே பால் சப்ளை செய்ய முடிந்தது. இம்முறை தற்போது மாற்றியமைக்கப்பட்டு, பொதுமக்கள் நேரில் வந்து வாங்கிக் கொள்ள வசதியாக நூறு 'பூத்துகள்' திறக்கப்பட்டுள்ளன. இந்த நூறு பூத்துகளுக்கும் 'வேன்கள்' மூலம் பால்கேன்கள் அனுப்பி வைக்கப்படுவதால் பொதுமக்கள் அதிக அளவில் தங்களுக்குத் தேவையான பாலை வாங்கிக் கொள்ள முடிகிறது. இதனல் இப்பொழுது 16,000 லிட்டர் பால் பொது மக்களுக்குச் சேலம் நகரில் விநியோகிக்கப்படுகிறது. உபரி பால் மற்ற இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. சேலம் நகரில் கொழுப்புச் சத்து நீக்கப்படாத பால் லிட்டருக்கு ரூ. 1.90 வீதம் விற்கப்படுகிறது. 1977-78-ஆம் ஆண்டில் பாலின் விற்பனை மதிப்பு ஒரு கோடி ரூபாயைத் தாண்டி விட்டது!

யூனியனைச் சார்ந்த உறுப்பினர்களின் கால்நடைகளைக் கவனத்துடன் பார்த்துக் கொள்வதற்காக, தனியாக ஒரு கால்நடை மருத்துவக் குழுவை, தமிழ்நாடு பால்வள நிறுவனம் அமைத்துள்ளது. இம் மருத்துவக் குழுவுக்கு



உதவியாக இருந்து செயல்பட, கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள்தோறும் கிராம விரிவாக்கப் பணியாளர்கள் பணி புரிந்து வருகின்றனர்.

கால்நடைகளை அன்றாடம் பரிசோதித்தல், தக்க தருணத்தில் உயர்ரகக் கன்று பிறந்திட செயற்கை முறையில் கருவூசி போடுதல், அவசர நேரங்களில் மருத்துவப் பணி செய்தல் போன்ற காரியங்களை கவனிக்க சேலத்திலும், ஆத்தூரிலுமாக இரண்டு மருத்துவக் குழுவினர் செயல்பட்டு வருகின்றனர்.

மருத்துவப் பணிகளைக் கவனிப்பதற்கென இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவ வேன்கள், சிறுநில உழவர்கள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வாங்கப்பட்டு, இந்த இரு குழுக்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த இரு வண்டிகளின் மதிப்பு ரூ. 1.58 இலட்சம். இதில் ரூ. ஒரு இலட்சத்தை யூனியன் மானியமாகப் பெற்றுள்ளது. இந்தியாவிலேயே ஆஜ்மீரும், சேலமும்தான் இந்த மானியம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சேலம் கூட்டுறவுப் பால் வழங்கு யூனியன் 39 ஆண்டுகளுக்கு முன்னால் துவக்கப்பட்டபொழுது ரூ. 20 மாத வாடகையில் ஒரு கட்டடத்தில் இயங்கி வந்தது. இப்பொழுது ரூ. 1.66 இலட்சத்தில் அலுவலகக் கட்டடமும், ரூ. 4.02 இலட்சத்தில் பால் குளிர்ச்சி இயந்திரங்களும், ரூ. 2.96 இலட்சத்தில் மோட்டார் வாகனங்களும் இருக்கின்றன.

நிர்வாகமும் தொழிலாளர்களும் சுமூகமாக இருந்தால் எந்தத் தொழிலும் சிறப்படையும் என்பதற்குச் சேலத்தில் சிறந்ததோர் எடுத்துக் காட்டாக சேலம் கூட்டுறவுப் பால் வழங்கு யூனியன் திகழ்கிறது.

அலுவலர்கள், டிரைவர்கள், பால் விற்பனையாளர்கள், கிளீனர்கள், பால்கோவா தயாரிப்பாளர்கள் என்று இருநூற்றுக்கும் அதிகமாக ஊழியர்கள் யூனியனின் நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு கடுமையாக உழைக்கிறார்கள். இவர்களுக்கு இந்த ஆண்டில் 20 சதவிகித போனசாக ரூ. 90,000 வழங்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் அனைவருக்கும் ஆண்டுக்கு மூன்று முறை சீருடை இலவசமாக வழங்கப்படுகிறது. அவர்களுடைய குழந்தைகளுக்குப் பள்ளிப் பாட நூல்கள் இலவசமாகத் தரப்படுகின்றன.

எனவே—

சேலம் கூட்டுறவுப் பால் வழங்கு யூனியன் அனைவர் உள்ளத்திலும் சிறப்பிடத்தை பெற்றிருப்பதில் வியப்பில்லை!

## தமிழ்நாட்டில் வனவிலங்குப் புகலிடங்கள்

தமிழ்நாட்டில் மொத்தம் 8 இடங்களில் வனவிலங்கு சரணாலயங்கள் உள்ளன.

முதுமலை வனவிலங்கு சரணாலயம் (நீலகிரி மாவட்டம்).

களக்காடு வனவிலங்கு சரணாலயம் (திருநெல்வேலி மாவட்டம்).

முண்டந்துறை வனவிலங்கு சரணாலயம் (திருநெல்வேலி மாவட்டம்).

கோடியக்கரை பறவைகள் சரணாலயம் (தஞ்சை மாவட்டம்).

ஆனைமலை வனவிலங்கு சரணாலயம் (கோவை மாவட்டம்).

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் (செங்கை மாவட்டம்).

வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் (இராமநாதபுரம் மாவட்டம்).

கிண்டி தேசியப் பூங்கா பறவைகள் சரணாலயம் (செங்கை மாவட்டம்).



# மக்களுக்கு வழி காட்டும் மாதிரிப் பண்ணை!

"போதாலூர், காய்கறிப் பண்ணையைக் காணும் வாய்ப்புப் பெற்றேன். முன்பு பயனற்றுக் கிடந்த இடம் இன்று வளம் தந்திடும் இடமாக எழில் பெற்றிருக்கிறது. இதற்கான திட்டமிட்டு செயலாற்றியோருக்கு என் பாராட்டுதல். முறையுடன் கவனித்திடின், பயனற்றது என்று சொல்லத்தக்க இடமே எதுவும் இருந்திட முடியாது என்பதற்கு இந்தப் பண்ணை ஒரு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது இதன் வளர்ச்சியை நான் பெரிதும் விரும்புகிறேன். இதனையொத்த முயற்சிகள் மேலும் பல அமைய வேண்டுமென விரும்புகிறேன்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப் பெற்ற இந்தப் பண்ணை அமைந்துள்ள போதாலூர், திருச்சியிலிருந்து 12-வது கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

இந்தச் சிற்றூருக்கு ஒரு சிறப்பு உண்டு. தமிழகத்திலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில் வேறெங்கும் இல்லாத, அந்த-நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு மட்டுமே தனி, சிறப்பாக உள்ள வேளாண்மைப் பண்ணை இங்குதான் உள்ளது.

சிறப்புப் பண்ணை என்று பெயரளவில் இல்லாமல், இலாபம் ஈட்டிச் சிறப்பாகச் செயல்படும் பண்ணை இந்த போதாலூர் பண்ணையாகும். பசுமை நிறப் போர்வை விரித்தாற்போல் பரந்து கிடந்த நெற்பயிர் நம்மை ஆடி அசைந்து வரவேற்கிறது.

சுமார் 90 ஏக்கர் நில பரப்புள்ள இந்தப் பண்ணை ஒரு காலத்தில் புல்லும் புதருமாகவுள்ள புறம்போக்காக இருந்தது. 1965-ம் ஆண்டில் பண்ணையாக மாற்றப்பட்டது. 1966-67-ல் சுமார் 10 ஏக்கர் நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டது. கரும்புச் சாகுபடியும் நெல்லும் நல்ல இலாபகரமாக மகசூல் கண்டு வருவதால் தற்போது சுமார் 6.5 ஏக்கர் நிலம் நஞ்சையில் நெல்லும் கரும்பும் விளைவிக்கப்படுகின்றன.

''முன்பு கரும்பு ஏக்கருக்கு 35 டன் கிடைத்தது. இந்த ஆண்டு ஏக்கர் ஒன்றுக்கு 40 டன் வீதம் கரும்பு மகசூல் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மண்ணின் வளமையை அதிகப்படுத்தினால்-அதாவது தொழு எரு, அல்லது கலவை எரு, அல்லது கரும்பு கழிவு மூலம் வளமைப் படுத்தினால்-ஏக்கருக்கு 50 டன் கரும்பு விளைவிக்கலாம்'' என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் இந்தப் பண்ணையின் பொறுப் பேற்றிருக்கும் நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த துணை வேளாண்மை அலுவலர்.

தற்போது தாளடியில் 23 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆடுதுறை 31, ஐ. ஈ. டி. 1722, 4786, ஐ. ஆர். 20 ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. சம்பாவில் பொன்னி, ஐ. ஆர். 20, கோ. 40, ராஜராஜன் பயிரிடப்பட்டுள்ளது.

கோ. 419 கரும்பு பயிரில் மறுகாம்புப் பயிராக விடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சுமார் 880 டன் கரும்பு விளையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்குப் பயிரிடப்படும் கரும்பை எவ்வாறு விற்பனை செய்கிறார்கள்?

அருகிலுள்ள பேட்டைவாய்த் தலையில் காவேரி சர்க்கரை ஆலை உள்ளது. அங்குக் கரும்புகள் விற்கப்படுகிறது.

கரும்பு ஆலைக்குச் செல்கிறது நெல்.

இந்தப் பண்ணையைப் பொறுத்தவரையில் நெல் விதைக்காகவே உற்பத்தி செய்யப்படுகிறது. அறுவடையானதும் விதை நெல்லை வேளாண்மைத் துறைக்கும், போரடி நெல்லை- அதாவது விதைக்குப் பயன்படாத நெல்லை நுகர்பொருள் வழங்கு துறைக்கும், வைக்கோலை கால்நடைப் பராமரிப்புத்துறைக்கும் தரப்படுகிறது.

இவை தவிர, இவ்வாண்டு 2 ஏக்கரில் வெண்டையும், கம்பும் போட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பண்ணையின் மூலம் எத்தனை பேர் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர்?

நாற்று நடுதல், களை பிடுங்குதல் போன்ற வேளாண்மைக்காகச் சுமார் 5 அல்லது 6 மாதத்திற்குச் சராசரி 60 பெண்களுக்கும், 10 ஆண்களுக்கும் வேலை கிடைக்கும். இது தற்காலிக வேலைவாய்ப்பு, நிரந்தரமாக ஒரு துணை வேளாண்மை அலுவலர், ஒரு வேளாண்மை உதவியாளர், 2 காவல்காரர்கள் வேலையில் உள்ளனர். வேளாண்மை அலுவலர் ஒன்றியத்திலுள்ள பிற பணிகளுடன் இதனையும் பார்க்கிறார்.

இந்தப் பண்ணையின் வருவாயை அதிகப்படுத்த மகசூலை மேலும் அமோகமாக்க, முதலில் மண் வளம் முக்கியம். இந்தப் பகுதி கடினமான களி மண்ணாகும். அமிலத் தன்மையுள்ளது. பண்ணை தோன்றிய காலம் முதல் இதில் இரசாயன உரங்களே பயன்படுத்தப்படுகின்றன. எனவே, நிலத்தை வளப்படுத்த தொழு எரு, அல்லது கலவை எரு போட வேண்டும்.

தற்போது 2 கிணறுகள் உள்ளன. சாதாரணமாக கால்வாயில் பாசனத்திற்காக ஜூலை 15 வாக்கில் தண்ணீர் விடுவார்கள். ஜூன் மாதத்தில் நாற்றங்கால் தயாரிக்க இந்தக் கிணற்றுத் தண்ணீரைப் பயன்படுத்துகிறார்கள். தண்ணீர் போதவில்லை. இன்னும் அதிகக் கிணறுகள்-ஆழக் கிணறுகள்! குழாய்க்கிணறுகள் அமைத்தால் பெருமளவு நாற்றங்கால் தயாரிக்கலாம்.

தற்போது (1977-78-க்கு) நிகர இலாபம் ரூ. 61,308 கிடைத்துள்ளது. 1975-76-ல் ரூ. 58,521-ம், 1976-77-ல் ரூ. 58,667-ம் ஆக இருந்தது. இதனை ஆண்டுக்கு நிகர இலாபம் ஒரு இலட்சமாக உயர்த்த வேண்டும் என்ற நம்பிக்கையும் உள்ளது.

அந்த நம்பிக்கை நிச்சயமாகப் பயன்பெறும் என்பதற்கு அடையாளமாக, பசுந்தழையைப் பலமாக ஆட்டிக் கொண்டிருந்தன நெல்வயல்களும், கரும்புத் தோட்டங்களும்!

**கே. நடராசன்**
**மாவட்ட ஆட்சியரின் தனி உதவியாளர்**
**(செய்தி-மக்கள் தொடர்பு).**

# மதுவின் தீய விளைவுகள்!

“எனது வாழ்க்கை பாழாகிவிட்டது. நான் சிறைக்குச் சென்றுவிட்டு வந்தவுடன் எனது மனைவி, குழந்தைகள், நண்பர்கள் என்னை ஒதுக்கி வைத்துவிட்டார்கள். புதிதாக வாழ்க்கையை என்னால் துவங்க முடியாது. என்னுடைய வாழ்க்கையைத் திறமையுடன் சமாளிக்க எனக்குத் தைரியம் இல்லை. என்னுடைய பிரச்சினைகளை மறக்க நான் குடிக்கிறேன்.''

''தயவு செய்து வெற்றுரைகளை எனக்குக் கூற வேண்டாம். எனக்கு அது உதவாது. என்னை விழுங்கும் இந்த நோய் தரும் தாங்க முடியாத வலி உனக்கு தெரியாது. மதுவினால்தான் எனக்கு இதமளிக்க முடியும்.''

நம்பிக்கையாகவும், கடுமையாகவும் சில சமயம் கஷ்டப்பட்டும் எனது வேலையில் நான் ஈடுபட வேண்டியுள்ளது என்று நரம்புகள் வேலை செய்ய ஏற்றதாக இல்லை ஒன்று, போதிய அளவு தைரியத்துடன் எல்லாவற்றையும் சமாளிப்பது அல்லது என்னால் செய்ய முடியவில்லை என்று தள்ளிவிடுவது, என்னுடைய மது பாட்டில் கள் இல்லாமல் நான் என்ன செய்திருப்பேன் என்பது எனக்கே தெரியாது.''

மற்றவர்களது துன்பத்தை அறியாத நாம் ஒரு அனுதாப தலையசைவுடன் இம்மாதிரியான வாசகங்களைத் தினமும் கேள்விப்படுகிறோம். எந்தவித மேதாவியும் இம்மாதிரி வாசகங்களைக் கூறவில்லை!

மனோதத்துவ சிகிச்சை எளிதில் கிடைக்க முடியாது நம்நாட்டில் மனிதனைக் கெடுக்கும் இந்தக் குடிப்பழக்கம் அதிகமாக உள்ளது. மது மற்றும் போதைப் பொருட்கள் மனவேதனையைத் தற்காலிகமாகப் போக்கவல்லதே தவிர, அமைதியான நிலையைத் தராது. பழைய மனவேதனை நம்மைச் சூழ்கிறது. மனித முன்னேற்றத்திற்குக் கவலை ஒரு முட்டுக்கட்டை என்பதை மக்கள் மறந்துவிடுகின்றனர்.

மது அருந்தியவுடன் உடல் வலியை ஒருவன் மறக்கலாம் ஆனால் மயக்கத்திற்குப் பிறகு பழைய கலக்கம் மீண்டும் மனிதனைச் சூழ்கிறது. மதுவினால் நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோமே தவிர, கவலைகள் தீரவில்லை என்பதை அதற்குப் பின் மனத்தை வருத்தும்.

சோர்வு அடைந்தவர்களுக்கு மதுவினால் எந்தவித நம்பிக்கையும் அளிப்பதில்லை. உணர்ச்சி வசப்படும் மக்களே குடிப்பழக்கத்திற்கு ஆளாகிறார்கள். நம்முடைய உட்திறன், சிந்திக்கும் திறன், சுயநம்பிக்கை ஆகியவற்றை மது பாதிக்கிறது.

நரம்புமண்டலம், சிறு நீரகம், ஈரல் ஆகியவைகள் மதுவினால் அதிக அளவு பாதிக்கப்படுகிறது. மறதியினாலும், தன்னைத் தானே அறிந்து கொள்ளும் திறமையையும் குடிகாரர்கள் இழக்கிறார்கள். மது ஆயுட்காலத்தைக் குறைக்கிறது.

உடம்பு வலியைத் தீர்ப்பதற்காக ஏழை மக்கள் அதிக அளவு மதுப்பழக்கத்திற்கு ஆளாகிறார்கள். பணக்காரர்களிடமிருந்து அதிகப்பணத்தையே மது எடுத்துச் செல்கிறது என்றாலும் ஏழைக் குடும்பங்களில் உள்ள பரிதாபத்திற்குரிய பெண்களிடமிருந்தும், குழந்தைகளிடமிருந்தும் அவர்களது உணவைப் பறித்துச் செல்கிறது.



# இரத்த சோகை

செவ்வணுக்குறைவு அல்லது செவ்வணுச் செந்நிறமிகக் குறைவால் இரத்த சோகை ஏற்படுகின்றது. இதனால் உடலின் பல்வேறு திசுக்களுக்கும் போதிய உயிர்வளி (பிராணவாயு)கிடைப்பதில்லை.

எனவே, களைப்பு, மூச்சு வாங்குதல், தலைவலி, பசியின்மை, படபடப்பு, மசக்கை, குறைவான மாதவிலக்கு போன்ற நோய்க்குறிகள் தோன்றுகின்றன. ஓரளவு முற்றிய நிலையில் நாக்கும், நகங்களும் வெளுத்து, சோம்பல் ஏற்பட்டு, நடக்கும் போதோ ஓடியாடி விளையாடும் போதோ பேசும்போதோ மூச்சிரைத்தலும் ஏற்படுகின்றன. மிகக் கடுமையான இரத்த சோகையால் இதயத் தளர்வு தோன்றி இறப்பும் நேரிடலாம். பலவகைக் காரணங்களால் இரத்த சோகை தோன்றலாம்.

**குறைவான இரும்புச்சத்து**

குழந்தைகளின் முக்கிய உணவு பால். பாலில் இரும்புச் சத்து மிகவும் குறைவு. எனவே, பாலை மட்டுமே அதிக நாள் குழந்தைகட்குக் கொடுப்பதால் இரத்த சோகை தோன்றலாம். கேழ்வரகு போன்ற தானியங்கள், பசுக் கீரைகள், மஞ்சள்கரு, புலால் ஆகியவற்றில் இரும்புச் சத்து அதிகமுண்டு.

எனவே இவற்றுள் ஏதாவதொன்றை மூன்று அல்லது நான்கு மாதம் முதலே குழந்தைகட்குக் கொடுப்பது மிகவும் முக்கியம். தாய்ப்பால் கிடைக்காத குழந்தைகட்கு இரண்டாம்மாதம் முதலே இரும்புச் சத்தடங்கிய ஊட்ட மருந்து கொடுக்கலாம்.

**இரத்த இழப்பு**

நாட்பட்ட இரத்தபேதி, கொக்கிப் புழுத் தொற்று ஆகியவற்றால் குழந்தைகளின் உடம்பிலிருந்து இரத்த இழப்பு ஏற்படுகிறது. இதனால் இரத்தசோகை தோன்றலாம். கொக்கிப்புழுத் தொற்றுள்ள ஒருவர் மண்ணில் மலங்கழித்தால், அதிலுள்ள கொக்கிப் புழுக்கள் மண்ணிற்குச் செல்கின்றன. அப்படிப்பட்ட மண்ணில் குழந்தைகள் நடக்கும் போது அல்லது விளையாடும் போது, கொக்கிப் புழுக்கள் காலின் தோலை துளைத்து இரத்தத்தை அடைந்து, இதயம், நுரையீரல் வழியாகக் குடலை அடைகிறது.

நன்றாக வளர்ச்சியடைந்த ஒரு கொக்கிப்புழு, ஒரு நாளில் சுமார் அரை மில்லி லிட்டர் இரத்தத்தை உறிஞ்சுகிறது. கண்ட இடங்களில் மண்ணில் மலங்கழிக்காது கழிவறைகளில் மட்டும் மலங்கழிக்கும் பழக்கத்தை மேற்கொண்டால் கொக்கிப் புழுத்தொற்றலையும் அதனால் விளையும் இரத்தசோகை நோயையும் தடுக்கலாம்.

**பிற நோய்கள் :**

மலேரியாக் காய்ச்சலால் செவ்வணுச் சிதைவு ஏற்படுகிறது. அதனால் இரத்த சோகை தோன்றலாம். இத்துடன், நாட்பட்ட சிறுநீரக நோய்கள், இரத்தப்புற்று நோய், மற்றும் சில தொற்றுநோய்களும் இரத்தச் சோகையைத் தோற்றுவிப்பதுண்டு. இவற்றில் அடிப்படை நோயைக் குணப்படுத்தினாலன்றி, இரும்புச் சத்துள்ள ஊட்டமருந்துகளால் மட்டும் இரத்தசோகை குணமடையாது.

கீரைவகைகள் குறிப்பாக முளைக்கீரை, அரைக்கீரை, கம்பு, ராகிகூழ், நாட்டுச் சர்க்கரை, பேரீச்சம் பழம், பால், முட்டை, ஈரல், பயறுவகைகள், நிலக்கடலை, துவரம் பருப்பு, பால், மீன், முட்டை புரதம் செறிந்தவை! வைட்டமின் நிறைந்தவை!!

இரத்த சோகைக்கான பல காரணங்களை வருமுன்னரே தடுத்துவிடலாம். அல்லது வந்த பின்பும் அதை முற்றவிடாது எளிதில் குணப்படுத்திவிடலாம். ஆனால், இரத்தசோகை மிகக் கடுமையாகி விட்டால் அது உயிருக்கே ஆபத்தாக முடியலாம். அந்நிலையில் புதிய இரத்தம் செலுத்தி, உயிரைக் காக்க வேண்டி நேரிடும். அந்நிலை ஏற்படவிடாமல், இரத்த சோகையை வருமுன் தடுத்தலே மிகவும் முக்கியம்.



# ரல் சப்பும் பழக்கம்...

பல பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் விரலை வாயில் வைத்து அதைச் சப்பிக்கொண்டு இருப்பது குறித்து மருத்துவரிடம் ஆலோசனை கேட்கிறார்கள்.

வீட்டில் இருக்கும்பொழுதை விட வெளியில் செல்லும்பொழுது குழந்தைகள் வாயில் குறிப்பாகப் பெருவிரலை வைத்துச் சப்ப, அதை மற்றவர்கள் சுட்டிக்காட்டும் பொழுது பெற்றோர் பெரிதும் மனக்கவலை அடைகிறார்கள். இப்பழக்கம் பெரும்பாலும் குழந்தை பிறந்த ஆறுமாதங்களுக்கு மேல் 2 வயது வரை இருக்கும். அதிகம் போனால் ஆறு வயதுவரை இருக்கும்; பெருவிரல் தவிர சில சமயங்களில் மற்றவிரல்கள், கால்விரல்கள் சூப்பான்கள், போர்வையின் ஒரு மூலை இவற்றைக் குழந்தைகள் சப்பும். விரல் சப்பும் குழந்தை அந்த நேரத்தில் மகிழ்ச்சியுடனும் தன்னைச் சுற்றியிருக்கும் சூழ்நிலையை மறந்து இருக்கும்.

**இப்பழக்கத்தினால் விளையும் இடர்கள் :**

1. பல் ஒழுங்காக முளைக்காது.

2. வாய்ப்புண் ஏற்படும்.

3. அடிக்கடி வயிற்றுப்போக்கு உண்டாகும்.

4. விரல் சூம்பிப்போய் புண் உண்டாகும்.

**இப்பழக்கத்தைத் தடுக்கும் வழி முறைகள் :**

1. இப்பழக்கம் தவறான பழக்கம் தானேயொழிய உட லுக்குத் தீமை பயக்கும் பழக்க மல்ல என்பதைப் பெற்றோர் களுக்கு விளக்கிக் கூறி அவர் களின் பயத்தையும், அய்யத்தை யும் போக்க வேண்டும்.

2. விரலில் வேப்பெண்ணெய் மருந்து முதலியவற்றைத் தடவக் கூடாது.

3. குழந்தையைத் திட்டவோ அடிக்கவோ கூடாது.

4. பசியாக இருக்கும் நேரத் தில் திரவ உணவுக்குப் பதிலாக திட உணவு தர வேண்டும்.

5. அன்புடனும், ஆதரவுட னும் பாதுகாக்க வேண்டும்; குறிப்பாக நோயுற்ற காலத்தில்.

6. தாய் தந்தையரின் கவனம் முழுதும் குழந்தையின் பேரில் இருப்பதைக் குழந்தை உணரு மாறு நடந்து கொள்ள வேண்டும்.

7. விளையாடுவதற்குக் குழந் தைக்கு அதிக வாய்ப்புத் தர வேண்டும்.

8. பொறுமையாகவும், அன்பு டனும் ஒவ்வொரு தடவையும் குழந்தையின் வாயிலிருந்து விரலை எடுத்துவிட வேண்டும்.

9. குழந்தை இதுபோல் செய் யாமலிருந்தால் அதற்குச் சிறுசிறு பரிசுகள் தரப்படவேண்டும்.

**—டாக்டர் என். சுந்தரவல்லி,**
**டாக்டர் எஸ். எம். உமாகாந்தன்.**



# தாயைப் போல பிள்ளை....

நல்ல ஆரோக்கியமுள்ள தாயே ஆரோக்கியமான குழந்தை களைப் பெற முடியும். வயிற்றில் வளரும் குழந்தையும், பிறந்த குழந்தை முதல் ஒன்பது மாதங் களுக்கும், தன் வளர்ச்சிக்குத் தேவையான உணவையும், இதர உயிர்ச்சத்துக்களையும், தாயிட மிருந்தே பெறுகிறது.

எனவே, கருவுற்ற தாய், உட லுக்கு இன்றியமையாத மூன்று வகையான உணவுப் பொருட் களை உட்கொள்ளுதல் வேண் டும்.

உடல் வளர்ச்சிக்கு உதவும் புரதச்சத்து நிறைந்த உணவு வகைகளையும், சக்தி தரக்கூடிய உணவுப் பொருட்களையும், உடலை நோயினின்று பாதுகாக் கும் உயிர்ச் சத்துக்கள், இரும்புச் சத்து முதலியவை நிறைந்த உணவுகளையும் உட்கொள்ள வேண்டும்.

பால், நிலக்கடலை, முட்டை, மீன், இறைச்சி, அவரை, பருப்பு வகைகள் முதலியவற்றை உண்ண லாம். பச்சைக் காய்கறிகள், பழங்கள், பப்பாளி, உருளைக் கிழங்கு, கீரை வகைகள் முதலிய வற்றையும் தினசரி உணவில் சேர்த்துக் கொள்ளுதல் வேண் டும்.

நல்ல ஓய்வும், போதுமான சூரிய ஒளியும் நல்ல காற்றும் கருவுற்ற தாய்மார்களின் அவ சியத் தேவைகள், கருவில் வள ரும் குழந்தைக்கு ஊறு விளை விக்கும் கொடிய பழக்கங்களான புகைபிடித்தலும், மது அருந்துத லும் மேலைநாடுகளில் காணப் படுதல்போல் நம் நாட்டுத் தாய் மார்களிடம் இல்லாதிருத்தல் நாம் பெருமைப்படுவதற்குரிய தொன்றாகும்.

கருவுற்றிருக்கும் காலத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை யாவது தகுந்த மருத்துவ ஆலோ சனை பெறுதல் இன்றியமை யாததாகும். பிறக்கப்போகும் குழந்தைக்கு இரண ஜன்னி வரா மல் தடுக்கும் பொருட்டு, கரு வுற்ற ஏழாவது, எட்டாவது மாதங்களில் 'டெடனஸ்' தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள வேண் டும்.

**—டாக்டர் ஏ. மேகநாதன்**














# கலைமாமணி விருது வழங்கு விழா!




ஜனவரி 26ஆம் நாள்!

இந்தியக் குடியரசின் 30 ஆம் ஆண்டுத் துவக்க நாளான இந் நன்னாளில், தமிழகத்தில், 19வது 'கலைமாமணி' விருது வழங்கும் விழா கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கலைவாணர் அரங்கத்தின் உள்ளும் புறமும் எண்ணற்ற பொதுமக்கள் அணி திரண்டிருந்தார்கள். கலை இலக்கியப் பெருமக்களைச் சிறப்பிக்கும் விழாவைத் தங்கள் சொந்தக்காரர்களுக்கு நடத்தும் பாராட்டு விழாவாகவே கருதிக் குழுமியிருந்தார்கள் பொதுமக்கள்.

மங்கல இசையாம் நாயன இசையைப் பொழிந்து, இனிய சூழ்நிலையை உருவாக்கித் தந்தார்கள்.

காலை 10.30 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடக்கம் ஆகியது. கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழாவைப் பார்த்து மகிழ்வதற்கும் தங்களது பாராட்டுகளை அவர்களுக்கு வழங்குவதற்காகவும் திரண்டிருந்த பொதுமக்களையும் அமைச்சர்களையும், முத்தமிழ்த் துறையைச் சேர்ந்த கலைஞர்களையும் வரவேற்றுப் பேசினார், மன்றத் தலைவர் மாண்புமிகு நீதிபதி திரு பு.ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள். தமது உரையில் குறிப்பிட்டதாவது:

''தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் 25 ஆண்டுகளாகக் கலை உலகிற்குச் சிறந்த பணி ஆற்றி வருகிறது. இந்த ஆண்டு அதன் வெள்ளிவிழா ஆண்டு ஆகும். இயல், இசை, நாடக மன்றம் கலை உலகுக்கு ஆற்றிவரும் பணி எத்தகையது என்பதையும், அதன் பணியினால் கலையுலகம் எத்தகைய மேம்பாடு அடைந்துள்ளது என்பதையும் நான் எடுத்துச் சொல்லத் தேவையில்லை. சிறந்த கலைஞர்களை உறுப்பினர்களாகப் பெற்று அவர்களின் அரிய ஆலோசனைகளுடனும் அரசின் ஆதரவுடனும் பணி புரிந்து வருகிறது இம் மன்றம்.

''கிராமியக் கலைகளை நமது நாட்டின் சாதாரண மக்கள் கண்டு களிக்கும் வகையில் திறந்தவெளி அரங்கங்கள் பலவற்றை உருவாக்க வேண்டும் என்ற நமது முதல்வர் அவர்கள் தெரிவித்ததற்கு இணங்க, அதற்குரிய திட்டத்தை இயல் இசை நாடக மன்றம் செய்து வருகிறது.

''இங்கே உள்ள கலைஞர்கள் தான் தமிழகத்தில் கலைமாமணிகள், இவர்களைத் தவிர வேறு எவரும் கிடையாது என்று நான் சொல்லமாட்டேன். பல கலைஞர்களுக்கு நாங்கள் விருது வழங்க முடியவில்லை. அவர்கள் எங்களை மன்னிப்பார்களாக! இருக்கின்ற நிதி உதவியை வைத்துக் கொண்டு எங்களால் இயன்ற பணியை நாங்கள் செய்து வருகிறோம்''.

பின்னர் மன்றச் செயலாளர் 'கலைமாமணி' திரு டி. வி. நாராயணசாமி அவர்கள் மன்றத்தின் ஆண்டு அறிக்கையை வாசித்தார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''உலகம் புகழும் நமது நாட்டுக் கலைகளைப் பேணி வளர்த்து வரும் தலை சிறந்த கலை நிறுவனம் தமிழ்நாடு




















இயல் இசை நாடக மன்றம். இன்று விருது பெறும் கலைஞர்களையும் சேர்த்து இதுவரை கலை விற்பன்னர்கள் 463 பேருக்குக் கலைமாமணி விருதுகளை வழங்கியுள்ளது.

''எதிர்காலத்தில் மன்றத்தின் பணிகள் மிகப் பெரிய அளவுக்கு விரிவுபட வேண்டுமெனக் கருதுகிறோம். மாவட்டங்களின் தலைநகரங்களிலும் கலையரங்கங்கள் அமைக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளோம்.

''மன்றத்தின் நோக்கம் பெரிது; அதைப் போன்றே வாய்ப்புகளும் பெருக வேண்டும் என விரும்புகிறோம்''

மறைந்த கலை-இலக்கிய மேதைகள் 14 பேர்களின் திருஉருவப்படங்களை முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் திறந்து வைத்தார். செயலாளரின் ஆண்டு அறிக்கை வாசிப்புக்குப் பின்னர் 37 கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' விருது வழங்கப்பட்டது. மேதகு ஆளுநர் கலைஞர்களுக்குத் தங்கப் பதக்கத்தை அணிவித்தார். முதல்வர் திரு எம்.ஜி.ஆர். கலைஞர்களுக்குக் கதராடை போர்த்திச் சான்றிதழை வழங்கினார். சிறந்த கலை நிறுவனத்திற்குரிய சிறப்புப் பரிசு கும்பகோணம் வாணி விலாச சபைக்கு வழங்கப்பட்டது.

கலைமாமணி விருது பெற்ற கலைஞர்களில் மிகவும் நலிந்த நிலையில் உள்ள 12 கலைஞர்களுக்குப் பொற்கிழி வழங்கினார் முதல்வர்.

கலைமாமணிகளுக்குரிய தங்கப் பதக்கங்களை வழங்கிய மேதகு ஆளுநர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''கலைத் துறையிலும் இலக்கியத் துறையிலும் பணி ஆற்றிய பெருமக்களைச் சிறப்பிப்பதிலும் அவர்களின் பணிகளைப் பாராட்டுவதிலும் நமது உள்ளம் மிகவும் மகிழ்ச்சியடைகிறது. கலைத் துறையினரைப் பாராட்டும் பணியில் நமது தமிழகம் முன்னணியில் இருக்கிறது. என்னைப் போன்றவர்கள் இந்தக் கலைஞர்களின் மொழியைப் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், அவர்கள் ஆற்றிவரும் கலைப் பணியைக் கொண்டு அவர்கள் என்ன சொல்ல எண்ணுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. என்னைச் சந்தித்த வெளிநாட்டவர்கள் சிலர் இதையேதான் என்னிடம் தெரிவித்தார்கள். இந்தக் கலைஞர்களின் மொழி அவர்களுக்குப் புரியாவிட்டாலும், இவர்களது கலைத் திறம் அவர்களுக்குத் தெளிவாகப் புரிகிறது. எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கே விருது பெறும் கலைஞர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்''

ஆளுநர் உரைக்குப் பின்னர், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள், கலைமாமணி விருது பெற்றவர்களைப் பாராட்டிப் பேசினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''தமிழின் முத்துறை வளர்ச்சியினை நாம் இங்கே பாராட்டிக் கொண்டிருக்கிறோம். கலைத் துறையினரைப் பாராட்டுவது-அவர்களுக்கு உற்சாகத்தை உருவாக்க-ஊக்கத்தை நல்க! அவ்வாறு செய்வதன் மூலம் கலை வளர்ச்சிக்கு நாம் வழி வகுக்கின்றோம்.

''தமிழ்நாட்டுக் கிராமியக் கலைகளைச் சொல்லித் தருவதற்கு ஒரு பள்ளி ஏற்படுத்த வேண்டும் என்று நமது முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட கருத்தைச் செயலாக்கும் திட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம்.

''கலைஞர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே உள்ள இடைவெளியை அகற்ற வேண்டும்-போக்க வேண்டும்-அப்போதுதான் நாம் வெற்றியடைந்தவர்களாக ஆவோம்!''

அடுத்து, மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள், விருதுபெற்ற கலைஞர்களைப் பாராட்டிப் பேசினார். அவர், தமது உரையில் குறிப்பிட்டார்:

''தமிழ்ச் சமுதாய கலைக்கும், தமிழுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் எடுத்துவரும் இந்த விழா-தமிழ்த் தொண்டர்களைப் பாராட்டும் வகையில் அமைந்துள்ள இந்த விழா-அவர்களுக்கெல்லாம் வாழ்த்துக்களை வழங்கும் விழாவாக நடந்து கொண்டிருக்கிறது.

''கலை உலகின் முன்னோடிகளாகத் திகழ்ந்து வந்த மேதைகளின் உருவப் படங்கள் இங்கே திறந்து வைக்கப்பட்டுள்ளன. உண்மையில் தமிழ்க் கலை உலகை-தமிழை-தமிழ்க் கலைஞர்களை-காப்பாற்றும் வகையில் இது தமிழ்ப் பாதுகாப்பு விழாவாக இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

''மக்களும் மத்திய அரசும் இதனைச் சாதாரண விழாவாகக் கருதவேண்டாம். இந்தக் தமிழ்க் கலைப் பணியைக் காப்பதில் இந்த அரசு மாபெரும் தொண்டாற்றத் தயங்காது!

''தமிழைப் பாதுகாப்பது-தமிழ்க் கலையைப் பாதுகாப்பது தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாப்பது என்பது வெறும் போராட்டங்களினால் மட்டும் வந்துவிடுவதில்லை.

''நாடகம் தாய், அது பெற்ற சேய்தான் திரைக்கலை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். சேய்கள், முதிர்ந்த நிலையில் உள்ள தாயைக் காப்பாற்ற வேண்டும் என்பதை இந்த விழா நினைவுறுத்துகிறது.

''நாடகம் இல்லையென்றால் திரைக்கலைக்குக் கலைஞர்கள் எப்படிக் கிடைப்பார்கள்'' என்று கேட்டார் அண்ணா. நாடகக் கலைக்கு ஆக்கம் தரும் சிறந்த திட்டத்தை விரைவில் உருவாக்க இருக்கிறார் நமது முதல்வர்.

''இப்படிப்பட்ட உணர்வுகளின் பின்னாலேதான் இந்த விழாவை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இதை ஆண்டுதோறும் நடைபெறும் சடங்கு என்று சிலர் கருதுவார்களேயானால், அவர்களுக்குச் சொல்கிறோம். இது தமிழ் இலக்கிய விழா-



தமிழ்ப் பாதுகாப்புவிழா-தமிழை அழிக்க யாரும் பிறந்துவரவில்லை என்பதை அறிவிக்கத்தான் இந்த விழா என்பதைத் தெரியப் படுத்திக் கொள்கிறேன்!''

விருதுபெற்ற கலைமாமணிகளின் சார்பில், மதுரைப் பல் கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் நன்றி கூறினார். நன்றி உரையில் அவர் குறிப்பிட்டார்:

''தமிழ்க் கலைஞர்கள் தமிழை வளர்த்தார்கள்; கலையை வளர்த்தார்கள். என்றாலும் அவர்கள் வறுமையில் உள்ளார்கள். அப்படிப்பட்டவர்களை வாழவைக்கும் பணியில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது என்ற உண்மையை இங்கே காட்சி பூர்வமாகப் பார்த்தோம். தமிழ் இனிமேல் நாளும் வளரும் என்பது உறுதி''.

அடுத்து, திரைப்பட நடிகை செல்வி லதா நன்றி தெரிவித்துப் பேசியபோது குறிப்பிட்டார்:

''எங்களைப் பாராட்டுவதை விட, வயது முதிர்ந்த கலைஞர்களைப்பாராட்டுவதுபொருத்தம் என்பேன். அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். என்னைப் பொறுத்தவரை, கலை உலகத்திற்கு நான் அறிமுகம் ஆவதற்குக் காரணமாக இருந்த புரட்சித் தலைவர் அவர்களின் கையாலேயே நான் விருதுபெறுவதைச் சிறப்பாகக் கருதுகிறேன்''.

அடுத்து நன்றி உரையாற்றிய திரைப்பட நடிகர் திரு கமலஹாசன் குறிப்பிட்டார்:

''பெரியவர்களின் மத்தியிலே இளைஞர்களான எங்களையும் பெருமைப்படுத்தியதைப் பார்த்துப் பூரிப்பு அடைகிறேன். யாருக்கும் இவ்வளவு பெருமை - சாதாரணமாகக் கிடைத்து விடுமா? சகோதரி லதா குறிப்பிட்டார்கள்- எங்களைப் பாராட்டுவதை விட பெரியவர்களைப் பாராட்டுவதுதான் தகும் என்று! இப்படிப் பெரியவர்களுக்குப் பாராட்டு வழங்கும்போது எங்களையும் அடிக்கடி நினைத்துக் கொள்ளுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழ் இசை வாழ-இயல் வாழ இந்த மன்றம் செய்யும் பணியைப் பாராட்டுகிறேன். இந்த வாய்ப்புத் தந்தவர்களுக்கு ஒரு சேய் நன்றி சொல்கிறது''.

பின்னர், மன்றச் செயலாளர் திரு டி. வி. நாராயணசாமி அவர்கள் நன்றி உரை கூறியதுடன், உருவப் படங்களில் இடம் பெற்றிருந்த மறைந்த மேதைகளின் பெயர்களை வரிசைக் கிரமமாகக் குறிப்பிட்டார்:

அதன்பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் சிறப்புரையாற்றினார். தமது உரையில் அவர் குறிப்பிட்டார்:

''குடியரசு நாளான நல்ல நாளிலே இந்த நல்ல விழா நடைபெறுகிறது. குடியரசு உரிமை பெற்ற நாளில், கலைஞர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டிய கலைவாணர் அரங்கில் கலைஞர்களுக்குப் பாராட்டுவிழா நடப்பது பொருத்தமானது. சிலருக்கு, காலம் கடந்து பரிசளிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்கிறேன்.

''இளம் கலைஞர்கள் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பெரியவர்கள் சொல்லும் அறிவுரையைக் கேட்க வேண்டும். யாரோ எதற்கோ சொல்லியது என்று அலட்சியப் படுத்தாத எண்ணம் கலைஞர்களுக்கு வரவேண்டும்.

''கலைவாணர் ஒருமுறை குறிப்பிட்டார்; புகழோடு இருக்கும்போது மறைந்து விடவேண்டுமென்று! ஆனால் புகழ் எங்கே தொடங்குகிறது? எங்கே போய் முடிகிறது என்பதை யாராலும் நிச்சயம் செய்ய முடியாது. கடமையைச் செய்தால் புகழ் வரும்; அதில் தவறினால் புகழ் எங்கோயோ ஓடிச்சென்று விடும்.




''கலைஞர்கள் தம் உள்ளத்தில் உள்ள எண்ணத்திற்கும் கலையின்மீது வைத்துள்ள ஆர்வமான தொடர்புக்கும் உறவு வைத்துக் கொள்ள வேண்டும். மக்கள் பின்பற்ற வேண்டிய கொள்கையை-நீதியை-தமது கதைகளில் சொல்ல வேண்டும். இங்கே விருதுபெற்ற முதிய கலைஞர்கள், நமது தொழில் முடிந்துவிட்டது, இனி நமக்கு எதைப் பற்றியும் கவலை இல்லை என்றிருக்கக்கூடாது. தேவைப் படுகின்றபோது - சந்தர்ப்பம் வாய்க்கும்போது-தங்களது கருத்துக்களைக் கூறவேண்டும்.

''தமிழகத்தில் நிறைய நாடகக் கொட்டகைகள் உருவாக்க வேண்டும் என்பதில் அக்கறை உள்ளது இந்த் அரசு. தமிழகம் எங்கும் திறந்தவெளி அரங்கங்கள் பலவற்றை அமைக்க வேண்டும் என்று அரசு திட்டமிட்டு வருகிறது. எப்போது என்று கேட்டுவிடாதீர்கள்! விரைவில் இந்தப் பணியைத் தொடங்குவோம்!

''கலைஞர்கள் வாழ்ந்தாக வேண்டும். ரஷ்யாவில் முதிய கலைஞர்களின் வாழ்வுக்கு உதவி செய்கிறது அரசு. அங்கே விஞ்ஞானிகளுக்கு முதல் மரியாதை கிடைக்கிறது. அடுத்ததாக, கலைஞர்களுக்குத்தான் சிறப்பு செய்யப்படுகிறது.

''எனவே கலைஞர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். அவர்கள் அச்சம் தவிர்க்க வேண்டும்! உண்மையை வெளியிடுகின்ற துணிச்சல் வேண்டும்! ஆய்ந்து பார்க்க வேண்டும்-ஆழமாக ஆய்ந்து பார்க்க வேண்டும்-இந்த அரசு கலைஞர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யும்''.

முதல்வரின் சிறப்புரைக்குப் பின்னர், நாட்டுப் பண் வணக்கத்துடன் விழா இனிது முடிவுற்றது; அரங்கத்தை விட்டு வெளியே சென்ற மக்களின் நெஞ்சங்கள். விழாக் காட்சியிலேயே நிலைத்திருந்தன என்பதை அவர்களின் பாராட்டு வார்த்தைகள் தெரிவித்தன.

நிகழ்ச்சித் தொகுப்பு

—எஸ். சண்முகசுந்தரம்,



## விழாவில் திருவுருவப்படங்கள் திறந்துவைக்கப் பெற்ற கலைமேதைகள்

இசைமேதை விளாத்திகுளம் சுவாமிகள்

புல்லாங்குழல் மேதை பல்லடம் சஞ்சீவிராவ்

வயலின் மேதை கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை

இசைமேதை முசிறி சுப்பிரமணிய அய்யர்

கதாகாலட்சேப மேதை எம்பார் ஸ்ரீரங்காச்சாரியார்

இசை மேதை பெங்களூர் நாகரத்தினம்மாள்

திரையுலக மேதை எஸ். எஸ். வாசன்

நாடகமேதை எட்டயபுரம் காசி விஸ்வநாத பாண்டியன்

பெருங்கவிஞர் உடுமலை முத்துசாமி கவிராயர்

இணையற்ற நடிகர் ராஜா எம். ஆர். கோவிந்தசாமி

தனிப்பெரும் நடிக மேதை பி. எஸ். வேலு நாயர்

சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர்

நகைச்சுவைக் கலைச்செம்மல் காளி என். ரத்தினம்

திரையுலக முதற் கதாநாயகி டி. பி. ராஜலட்சுமி

## பொற்கிழி பெற்ற கலைஞர்கள்

திருமதி சாட்டியக்குடி எஸ். ஆர். மீனாட்சி சுந்தரம்மாள் (இசைக் கலைஞர்)

திருநகரி திரு. நடேச பிள்ளை (தவில் கலைஞர்)

கும்பகோணம் திரு. கே. ஏ. தங்கவேல் பிள்ளை (தவில் கலைஞர்)

திருக்கோகர்ணம் திருமதி டி. எஸ். ரங்கநாயகி (மிருதங்கக் கலைஞர்)

தஞ்சை திருமதி ஆண்டாள் அம்மாள் (பரதநாட்டியக் கலைஞர்)

திரு. சீரங்கம் செட்டியார் (கரக ஆட்டக் கலைஞர்)

திரு. வீரநாதக் கோனார் (நாடகப் பாடலாசிரியர்)

சித்தாமூர் திரு. க. தங்கவேல் நாயுடு (தெருக்கூத்துக் கலைஞர்)

திரு. ஆர். சின்னப் பொன்னுச்சாமி (நாடகத் தயாரிப்பாளர்)

திரு வி. சி. மாரியப்பன் (நாடக நடிகர்)

திரு சி. வி. வி. பந்துலு (பழம்பெரும் நாடக நடிகர்)

திரு. வி. எஸ். நடேசன் (நாடக நடிகர்)

# 'கலைமாமணி' விருதுபெற்ற கலைஞர்கள் (1978-1979)

| | |
|---|---|
| பேராசிரியர் திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் ... | இயற்றமிழ்க் கலைஞர் |
| திருவாரூர் திருமதி பி.ஆர். திலகம் ... | இசைக் கலைஞர் |
| லால்குடி திரு ஜி. ஜெய்ராமன் ... | வயலின் கலைஞர் |
| திரு. ஸ்ரீராமுலு ... | மிருதங்கக் கலைஞர் |
| திருமதி வீணை ரங்கநாயகி ராஜகோபாலன் ... | வீணைக் கலைஞர் |
| திரு டி. விசுவநாதன் ... | புல்லாங்குழல் கலைஞர் |
| திருவீழிமிழலை திரு. எஸ். கோவிந்தராஜ பிள்ளை ... | நாதசுரக் கலைஞர் |
| திருவீழிமிழலை திரு. எஸ். தட்சிணாமூர்த்திபிள்ளை ... | நாதசுரக் கலைஞர் |
| நாச்சியார் கோவில் திரு. என். கே.ராஜம் பிள்ளை ... | நாதசுர ஆசிரியர் |
| தேன்கனிக்கோட்டை திரு. ஆர். முனிரத்தினம் ... | தவில் கலைஞர் |
| தஞ்சாவூர் திரு. மு. ராமசுப்பிரமணிய சர்மா ... | கதா காலட்சேபக் கலைஞர் |
| சைதை திரு. தேவாரம் த. நடராசன் ... | அருட்பா இசைக் கலைஞர் |
| பந்தநல்லூர் திருமதி டி. கே. ஜயலட்சுமி (ராணி ஜயலட்சுமி நாச்சியார்) ... | பரதநாட்டியக் கலைஞர் |
| பந்தநல்லூர் திரு. சொ. சுப்பராயபிள்ளை ... | பரதநாட்டிய ஆசிரியர் |
| மெலட்டூர் திரு. எஸ். நடராசன் | பாகவத மேளா நாட்டியக் கலைஞர் |
| திரு. டி. கே. சம்பங்கி ... | நாடக நடிகர் |
| செல்வி ஷோபா ... | நாடக நடிகை |
| திரு. ராஜா. எம்.ஜி. தண்டபாணி | பழம்பெரும் நாடக நடிகர் |
| திருமதி சி. டி. ராஜகாந்தம் ... | பழம்பெரும் நாடக நடிகை |
| திரு. டி. என். சுகி சுப்பிரமணியம் | நாடக ஆசிரியர் |
| திரு. டி. எம். ராஜநாயகம் ... | நாடகத் தயாரிப்பாளர் |
| திரு தஞ்சை பாலு ... | நாடகப் பாடலாசிரியர் |
| திரு. டெல்லி குமார் ... | தொழில்துறையல்லாத நாடக நடிகர். |
| திரு. எஸ். எஸ். சாப்ஜான் ... | இசை நாடக நடிகர் |
| திருமதி டி. ஏ. சுந்தரலட்சுமி ... | இசை நாடக நடிகை |
| திரு. ஏ. எம். பேச்சிமுத்துப் பிள்ளை ... | இசை நாடக மிருதங்கக்கலை கலைஞர் |
| திரு. கிளவுன் எம். எஸ். சுந்தரம் | இசை நாடகப் பாடலாசிரியர் |
| திரு. கமலஹாசன் ... | திரைபபட நடிகர் |
| செல்வி. லதா ... | திரைப்பட நடிகை |
| திரு. வி. சி. குகநாதன் ... | திரைப்பட வசனகர்த்தா |
| திரு. எஸ். பி. முத்துராமன் ... | திரைப்பட இயக்குநர். |
| திரு. சி. ஆர். சங்கர் ... | திரைப்பட இசையமைப்பாளர் |
| திரு. சி. எஸ். கணேஷ் ... | திரைப்பட இசையமைப்பாளர் |
| திருமதி பி. சுசீலா .. | திரைப்பட பின்னணிப் பாடகி |
| திரு. ஜி. என். வேலுமணி ... | திரைப்படத் தயாரிப்பாளர் |
| திரு. பஞ்சு அருணாசலம் ... | திரைப்படப் பாடலாசிரியர் |
| தஞ்சை திரு. வி. பாபு ... | புரவிநாட்டியக் கலைஞர் |



மிகவும் நம்பிக்கையூட்டும் இணையற்ற ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ்
அறிமுகப்படுத்தும்
ஈடு இணையற்ற
புதியவகை
பாலியஸ்டர்
சர்ட்டிங்குகள்
எமது பிரசித்திபெற்ற விற்பனை நிலையங்களில் கிடைக்கும்
100% பாலியஸ்டர்
80X20 பாலியஸ்டர் பிளண்டட்
80X20 பாலியஸ்டர் பிளண்டட்
67X33 பாலியஸ்டர் பிளண்டட்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



# பால் உற்பத்தித் திறனும் பசுப் பெருக்கமும்

வளமான நிலம், உயர் ரகப் பசுக்கள், திறமையான அனுபவம் மிக்க பண்ணையாளர் ஆகியவையே பாற்பண்ணைத் தொழில் இலாபகரமாக இயங்க அடிப்படைத் தேவைகளாகும்.

பாற்பண்ணையின் நிகர வருமானம் அதன் பால் உற்பத்தி அளவைப் பொறுத்தும், பராமரிக்கும் பசுக்களிடமிருந்து கிடைக்கும் சராசரி நிகர வருவாயைப் பொருத்துமே அமையும்.

பசுக்கள் உயர்ந்த மரபியல் தன்மைகளைக் கொண்டிருந்தால் பாற்பண்ணையின் வருமானமும் உயர்ந்த அளவிலேயே இருக்கும். மரபியலின் தத்துங்களின்படி திறன் வாய்ந்த இனத் தேர்வு, இனச் சேர்க்கை ஆகிய முறைகளைக் கையாண்டால் உயர்ந்த மரபுத் தன்மைகள் கொண்ட பசுக்களை உருவாக்க இயலும்.

பசுவின் மரபுப் பண்புகளில் மிகவும் முக்கியமான பண்பு அதிகப் பால் உற்பத்திப் பண்பாகும். குறைந்த வயதில் கன்று ஈனுதல், அதிக நாட்கள் கறவையில் இருத்தல், குறிப்பிட்ட காலத்திற்குள் கருத்தரித்தல், நீண்டநாட்கள் வாழும் திறன் போன்ற மற்ற பண்புகள் அதிகப் பால் உற்பத்திக்குத் துணை செய்கின்றன.

பசுக்கள் பல ஆண்டுகள் வாழ்ந்து பல ஈத்துக்கள் கொடுத்திருந்தால் நிச்சயமாக அப்பசுக்களின் ஆயுட்கால பால் உற்பத்தி மிகவும் உயர்ந்த அளவிலேயே இருக்கும். முதல் ஈத்து பால் உற்பத்திக்கும், ஆயுட்கால மொத்த பால் உற்பத்திக்கும் நெருங்கிய ஒருமைப்பாடு உள்ளது. எனவே, நல்ல பசுக்களை அவைகளின் முதல் ஈத்து பால் உற்பத்தியின் அளவைக் கொண்டே மதிப்பிட்டு இனத் தேர்வு செய்யலாம். இம்முறையின் மூலம் ஒரு சில தலைமுறைகளில் உயர்ரகப் பசு மந்தையை உருவாக்க இயலும்.

பாலின் விலை அதில் அடங்கியுள்ள கொழுப்புச்சத்து போன்ற மற்ற பொருட்களின் அளவைப் பொருத்தே நிர்ணயிக்கப்படுகின்றது. இன்றுவரை கொழுப்புச் சத்து அதிகம் உள்ள பாலுக்கு அதிக விலை கிடைகின்றது.

எனவே, கொழுப்புச்சத்து பண்பு முக்கியத்துவம் பெற்றிருப்பதால் அதை இனவிருத்தி மூலம் உயர்த்த வேண்டும். ஆனால் மொத்த பால் உற்பத்திக்கும் மொத்த வெண்ணெய் உற்பத்திக்கும் நெருங்கிய நேரிடைத் தொடர்பு இருப்பதால் பசுக்களின் மொத்த பால் உற்பத்தியைப் பெருக்கினாலே மொத்த வெண்ணெய் உற்பத்தியையும் பெருக்க முடியும். ஆனால், வருங்காலத்தில் இந்நிலைமை மாறக் கூடும். ஏனென்றால், தற்போதைய சூழ்நிலையில் பெருகி வரும் இருதய நோய்கள் காரணமாகப் பாலின் அதிகக் கொழுப்புச் சத்தை மக்கள் விரும்ப மாட்டார்கள். புரதம், மாவுச்சத்து, தாதுப்பொருட்கள் போன்ற மற்ற கொழுப்பற்ற பொருட்கள் அதிகம் அடங்கிய பாலையே பெரிதும் ஏற்பார்கள். எனவே இப்பொருட்கள் பாலில் அதிகம் உள்ளவாறு பசுக்களின் பாரம்பரியத் தன்மையை மாற்ற வேண்டுமென்றால் பசுக்களின் இனத் தேர்வு முறையில் ஓர் புதிய முறையைக் கையாள வேண்டும். அதற்குத் தேர்வு மதிப்பெண் குறியீடு முறை என்று பெயர். இம்முறையில் ஒவ்வொரு பசுவின் பால் உற்பத்தி, புரதச் சத்து முதலிய மற்ற பொருட்களின் விகிதங்கள் ஆகிய பண்புகளை ஒருங்கிணைத்து மதிப்பெண் குறியீடு மூலம் நிர்ணயம் செய்ய வேண்டும். பிறகு அதிக மதிப்பெண் குறியீடுகள் உள்ள பசுக்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பால் மடியின் பிடிப்புத்தன்மை பசுக்களின் கால், பாதம் இவைகளில் குறைபாடுகள் இல்லாமை போன்ற பால் உடல் இயல் தன்மைகளையும் சேர்த்துக் குறியீடு செய்தால் திறன் மிக்க பசுக்களைப் பெருக்கலாம்.

பசுவின் உடல் பருமன் அதிகமாக இருந்தால் பால் உற்பத்தித் திறனும் அதிகம் இருக்கும் என சிலர் எண்ணுகின்றனர். இக்கூற்று தவறாகும். பசுவின் உடல் எடைக்காக இனத் தேர்வு செய்யக்கூடாது. அதிகப் பால் உற்பத்தித் திறனுக்கு இனத் தேர்வு செய்தாலே பசுவிற்கு அளவான உடல் பருமன் அமையும். பால் உற்பத்தியும் அதிகமாக இருக்கும். பசுவின் நிறம், கொம்பின் அழகு போன்ற குணங்களுக்காக இனத் தேர்வு செய்தல் கூடாது.

சில சமயங்களில் நீண்ட நாட்கள் கறவையில் இருந்து அதிகம் பால் கொடுத்த பசுக்களில் சில கருப்பைக் கோளாறுகள் ஏற்படுவதுண்டு. இக்கோளாறுகளை முன்கூட்டியே அறிந்து ஆவன செய்யும் முறையில் அன்றாட நடைமுறையில் கடைப்பிடித்தால் பசுக்களை ஆரோக்கியமாக நீண்ட காலம் வைத்திருக்க முடியும். மடிவீக்க நோய் வராமல் பார்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

பசுக்களின் அதிகப் பால் உற்பத்தித் திறன் பெருக உயர்ரக வீரிய பொலிக் காளைகளைப் பயன்படுத்த வேண்டும். மரபியல் படி கன்றுகளின் பாரம்பரியத் தன்மை காளை, பசு ஆகியவைகளின் தன்மைகளின் சராசரி அளவாக அமைகின்றது. தற்சமயம் கையாளும் செயற்கை இனவிருத்தி முறையில் ஒரு பொலி காளை பல நூறு பசுக்களை கருத்தரிக்கப் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, சில காளைகளே தேவைப்படுவதனால் அக்காளைகள் உயரிய அதிகபால் உற்பத்தித் திறன் கொண்டவைகளாக அமைதல் மிகவும் இன்றியமையாததாகும்.


**டாக்டர் நா. நடராசன்,**

**இணைப் பேராசிரியர்,**

**கால்நடை மருத்துவக் கல்லூரி.**

# தருமபுரி மாவட்டத்தில்....!

தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். சிவகப்பிரமணியம் அய்.ஏ.எஸ்., அவர்கள் ஜனவரி 16 ஆம் நாள் செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல்களில் சில இங்கே சுருக்கித் தரப்படுகின்றன:

ஜனவரி மாதம் கிருஷ்ணகிரி அணையிலிருந்து பாசன வாய்க்கால் மூலம் இரண்டாம் போக சாகுபடிக்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இப்பாசனத்தால் 9000 ஏக்கருக்கு மேல் உள்ள ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை இந்த மாவட்டத்தில் கிராமத்திற்கு ஒரு கடை என்ற திட்டத்தின்கீழ் 504 நியாயவிலைக் கடைகளைத் திறந்துள்ளது.

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி கலைக் கல்லூரிகளில் படிக்கும் 594 கல்லூரி மாணவர்களுக்கு உதவித்தொகையாக 91,471.50 இதுவரை வழங்கப்பட்டு இருக்கிறது.

தருமபுரி மாவட்டத்திலுள்ள 16 முதல் 30 முடிய வயதுடைய ஆண்டு வருமானம் ரூ. 3000-க்குட்பட்ட ஏழைப் பெண்களுக்குத் தட்டச்சுப் பயிற்சி அளிக்க 70 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பயிற்சிக் காலம் 10 மாதங்கள் ஆகும். பயிற்சிக் காலத்தில், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாதமும் ரூ. 15 தட்டச்சுப் பயிற்சிக்காக அரசு ஊக்க நிதி வழங்கும்.

விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு உதவுவதற்கு 70 பேர்களுக்குத் தையல் எந்திரம் இலவசமாக வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இம்மாவட்டத்தில் சிறுதொழில் அதிபர்களால் நிறுவப்படும் சிறிய கிராமத் தொழில்களுக்குத் தேவையான வசதிகளை இம் மாவட்ட தொழில் மையம், தொடங்கப்பட்ட 12-6-78 தேதியிலிருந்து அளித்து வருகிறது. தொழில்கள் துவங்கக் கீழ்க்கண்ட உதவிகள் தேவைப்படுகிறது.

(1) மூலப்பொருள்கள்

(2) நிதிவசதி

3. கட்டட நிர்மாண வேலைகள்; அதற்குத் தேவையான பிற துறைகளின் அனுமதிகள்.

இம்மாவட்டத்தில் 35ஸ்டார்ச் தொழிற்சாலைகள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டுக்கு 90 கிலோ மூட்டை கொண்ட 2,000 மூட்டைகள் உற்பத்தி செய்ய முடியும்.

சில்க் ட்விஸ்டிங் தொழில்கள், ஒசூர் வட்டத்தில் குறிப்பாக பாகலூர் பேரிகை என்ற இடங்களில் வெகுவாக நிறுவப்படுகின்றன.

கிராமப்புற வேலை வாய்ப்பளிக்கும் தொழில் திட்டங்களுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்ற மாவட்ட ஆட்சியர் அவர்களின் கொள்கைப்படி, தருமபுரி மாவட்டத் தொழில் மையம் கீழ்க்கண்ட எட்டு இடங்களில் பட்டுக் கூடுகள் கிடைப்பதன் மூலம் அடிப்படையில் சில்க் ரீலிங் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவ முயற்சித்து வருகின்றது.

1. பேரிகை; 2. பாகலூர்; 3. பாப்பாரப்பட்டி 4. தேவிரஹள்ளி 5. ஜருகு; 6. நம்மாண்டஹள்ளி 7. கெலமங்கலம்; 8. முதுகுருக்கி.

மேற்கண்ட எல்லா இடங்களிலும் கூட்டுறவு முறையில் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

100 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில், காவேரிபட்டணத்திலும், ஒசூரிலும் தையற் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

சுமார் 50 பேர்களுக்குத் தீப்பெட்டித் தொழில் மூலம் வேலை வாய்ப்பளிக்கும் வகையில் தருமபுரியில் ஒரு தொழில்கூட்டுறவுச் சங்கம் நிறுவி, அதனைப் பதிவு செய்வதற்காகச் சென்னைத் தொழில் வணிகத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மிக ஏழையான, பின்தங்கிய சுமார் 50 பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்க ஒரு பாலீதின் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மூங்கிலால், வர்ணம் பூசியும், வர்ணம் பூசப்படாமலும் பாய்கள் தயாரிக்கும் பயிற்சிக் கூடங்களை அமைத்தல் குறித்து மாவட்டத் தொழில் மையம் ஆலோசித்து வருகிறது.

1978-79-ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைத்திட்டம் தயாரித்து, பொருளாதாரத்தில் பின்தங்கி குறிப்பாக கிராமக் கைவினைஞர்கள் சொந்தத்தில் தொழில் தொடங்கி நடத்துதலுக்குப் பயின்றும் வகையில் அவர்களுக்கு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் 75 தொழிற்கூடம் கட்டிக் கொடுப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. தொழிற்கூடத்தின் நிர்ணய விலை ரூ. 7,600. நிர்ணய விலை குறைந்த மாதத் தவணைகளில் செலுத்த வேண்டும்.

முதற்கண், கிராமக் கைவினைஞர்களும் ரூ. 160 சேவை செலவுக்காக ரூ. 380 வைப்புத் தொகையாகச் செலுத்த வேண்டும். முழுக்கடன் தொகையும் மாதங்களில் செலுத்தப்பட வேண்டும். அதன்பின், தொழிற்கூடம் கைவினைஞர்களுக்குச் சொந்தமாகும்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் இத்திட்டத்தினை ஏற்று நடத்த எடுத்தனர். கீழ் வரும் இடங்களில் முதற்கட்டமாகச் சிறுதொழில் கூடங்கள் கட்டப்படுவதாக உள்ளது:

1. காரிமங்கலம்: 10 சிறு தொழிற் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

2. பாப்பிரெட்டிப்பட்டி: 1 சிறு தொழிற்கூடம் கட்டுவதற்குத் தொடங்கப்பட்டுள்ளது.

3. கிருஷ்ணகிரி: 10 சிறு தொழிற்கூட கட்டடங்கள்.

மேலும், சிறுதொழிற்கூடங்கள் பென்னாகரம், ஊத்தங்கரை, பேரிகை மற்றும் இதர இடங்களில் கட்டுதல் குறித்துத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# அரசின் அறிவிப்புகள்- ஆக்கப் பணிகள்

## 1—2—1979

* புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அறந்தாங்கியில், முப்பத்தாறு இலட்சம் ரூபாய் செலவில் 22 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்குத் துணை சபாநாயகர் திரு. திருநாவுக்கரசு அடிக்கல் நாட்டினார்.

* "சிறையில் உள்ள கைதிகளுக்குத் தோல் பதனிடும் பக்குவத்தைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் விடுதலை பெற்று வெளியே வந்தபிறகு மறுவாழ்வு பெறமுடியும். நாணயமாகத் தொழில் செய்து வாழ முடியும்" என்று சட்ட அமைச்சர் திரு. நாராயணசாமி கூறினார்.

*தாழ்த்தப்பட்டோர், மலைசாதியினருக்கு மனைகள்—வீடுகள் தனியாக ஒதுக்கப்படும்போது மொத்தத் தொகையில் பத்து சதவீதம் முன்பணம் போக பாக்கித் தொகையை விருப்பப்படி நீண்டகாலத் தவணையில் செலுத்தலாம் என்று வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. செல்லையா அறிவித்தார்.

*துப்புரவுப் பணியாளர்களுக்கு உதவ ரூ. 50 இலட்சம் செலவில் இயந்திரம் வாங்கப்படுகிறது. இதனால், அசுத்தத்தை மனிதன் அள்ளுகிற முறை ஒழியும் என்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. இராகவானந்தம் தெரிவித்தார்.

## 2—2—1979

* முழுக்க முழுக்க மக்களின் நலன் கருதி செயல்படும் கூட்டுறவுச் சங்கக் கடைகளுக்கு, வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று டில்லியில் நடந்த கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டில் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி வலியுறுத்தினார்.

* குடிசைப்பகுதி மக்களுக்குத் தேவையான குளியலறை சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்கும்படி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. இராகவா

*அரசு கார்ப்பரேஷன் பஸ்கள் அனைத்திலும் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்தப்படும் என்றும் படிக்கட்டுப் பயணத்தைத் தடுக்க, தானியங்கிக் கதவுகள் பொருத்தப்படும் என்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பொன்னையன் தெரிவித்தார்.

* சென்னை, அண்ணா நகரில், திறந்த வெளிக் கலையரங்கம் அமைக்கப்படவிருக்கிறது என வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. ஏ. இ. செல்லையா தெரிவித்தார்.

## 3—2—1979

* வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் பெரிய தொழிற்சாலைகளைத் தொடங்க யார் முன் வந்தாலும் கழக அரசு வரவேற்கிறது. அவர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் அரசு செய்யும் என்று நிதி அமைச்சர் திரு. கி. மனோகரன் கூறினார்.

*தமிழ்நாட்டில் உள்ள செமி பர்மனென்ட் தியேட்டர்கள் ஐந்தாண்டுக் காலம் வரை நடத்தப்படலாம் என அளிக்கப்பட்டு வந்த அனுமதி, ஏழாண்டுக்காலம் நடத்தப்படலாம் என நீட்டிக்கப்பட்டது.

* தமிழ்நாட்டில், தனிப்பட்டவர்கள் பொருட்காட்சி நடத்தத் தடை விதித்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

* சென்னை நகரில் ஓடும் ஆயிரக்கணக்கான சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார்களைப் பொருத்தி அவற்றை எந்திரமயமாக்குவதற்குத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

## 4—2—1979

* ஆதிதிராவிடர் நலத் திட்டங்களை நிறைவேற்ற நடப்பு ஆண்டில் 16 கோடியே 95 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக, அரிசன நலத்துறை அமைச்சர் திரு. சவுந்தரபாண்டியன் கூறினார்.

## 5—2—1979

*தங்க நகைகள் மீது கூட்டுறவு பாங்குகள் கொடுக்கும் கடன் தொகையை உயர்த்திக் கொடுக்குமாறு அரசு உத்தரவிட்டது.

## 6—2—1979

சேலம் அருகே தாத்தையங்கார்பட்டியில், மாக்னசைட் தொழிற்சாலை உற்பத்தியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். சில காலம் வேலையில்லாமல் இருந்த தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 300 முன்பணம் தரப்படும் என்றும்

**மூலதன லாபத்தில் வரியை சேமிக்கவும்**

# தேசிய வளர்ச்சிப் பத்திரங்கள் அல்லது தேசிய சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்யவும்

## தேசிய வளர்ச்சிப் பத்திரங்கள் அல்லது தேசிய சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்தால் மூலதன லாபத்தில் வரிச்சலுகை பெறலாம்

### கிடைக்கும் நன்மைகள்

குறைந்தது மூன்று வருடங்களுக்கு முன் வாங்கப்பட்ட வீடு, நிலம், இயந்திரக் கருவிகள், ஆபரணங்கள், பங்குகள், ஸ்டாக்குகள் போன்ற மூலதன சொத்துக்களை விற்பனை செய்திருந்தாலும் அல்லது விற்க இருந்தாலும் அவ்வாறு விற்றதன் மூலம் கிடைத்த தொகையை ஆறு மாதங்களுக்குள் தேசிய வளர்ச்சிப் பத்திரங்களில்/ தேசிய சேமிப்புப் பத்திரங்களில் முதலீடு செய்தால் தொடர்ந்து முழு வரிச்சலுகை பெறலாம்.

இந்தப் பத்திரங்களை வாங்குவதால் உங்கள் பணத்தை நல்லபடி முதலீடு செய்கிறீர்கள்.

| முதலீடு | வருமானம் | |
|---|---|---|
| 5 வருட தேசிய வளர்ச்சிப் பத்திரங்கள் | காலாவதியில் 13 சதவிகித வட்டி, ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டிக்கு – வருமான வரிச் சலுகை | வருடம் ரூ. 3,000 வரையிலான வட்டிக்கு வருமான வரிவிலக்கு உண்டு. |
| (ரூ. 100 வளர்ந்து ரூ. 165 ஆகிறது) | | |
| 7 வருட தேசிய சேமிப்புப் பத்திரங்கள் | காலாவதியில் 10.25 சதவிகிதத்தில் கூட்டு வட்டி. | |
| V-வது வெளியீடு | வருட வட்டி வருமான வரிச் சலுகை பெறுகிறது. | |
| (ரூ. 100 வளர்ந்து ரூ. 200 ஆகிறது) | | |
| IV-வது வெளியீடு | வருடம் 10.25 சதவிகிதம் வருடா வருடம் கொடுக்கப்படுகிறது | |
| III-வது வெளியீடு | வருடம் 6 சதவிகிதம் வருடா வருடம் கொடுக்கப்படுகிறது. | முழுத் தொகையும் வரிவிலக்குப் பெறுகிறது |
| II-வது வெளியீடு | வருடம் 6 சதவிகிதம் காலாவதியில் கொடுக்கப்படுகிறது. | |
| (ரூ. 100 வளர்ந்து ரூ. 150 ஆகிறது) | | |

இதர விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

- அங்கீகாரம் பெற்ற ஏஜண்ட் அல்லது
- மாவட்ட சேமிப்பு அதிகாரி அல்லது
- அருகிலுள்ள அஞ்சலகம் அல்லது
- பிராந்திய டைரக்டர் (தேசிய சேமிப்பு)

**தேசிய சேமிப்பு இயக்கம்**

டி.ஏ.வி.பி. 78/1



தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வு குடும்ப நலப் பணிகளுக்காக 'டானிடா' உதவித்தொகை அளிப் பதன் பொருட்டு சென்னை வந்த குழுவினர் தமிழக முதல்வர் அவர் களையும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் 8.2.1979 அன்று தலைமைச் செய லகத்தில் சந்தித்தனர்.

**7—2—1979**

*இந்த ஆண்டு அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு என்பதனை யொட்டி-குழந்தைகளுக்கு ஏற்ற திரைப் படங்களைத் தயாரிக்கவும், டப்பிங் செய்யவும் குழந்தைகள் திரைப்படச் சங்கத்திற்கு தமிழக அரசு நான்கு இலட்சம் ரூபாய் உதவுவதாக அறிவித் துள்ளது.

**8—2—1979**

* சென்னையில் பெரிய அளவில், புதி தாக விளையாட்டு மண்டபம் (Indoor Stadium) ஒன்று அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

* சேலத்தில், கிராமப் புறமக்கள் மருத் துவ வசதி பெறும் வகையில் இதய நோய் சிகிச்சைப் பிரிவு ஒன்றை மாண்பு மிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத் தார்.

*தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த பஸ் ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு தரும்படி தமிழ்நாடு அரசு உத்தரவிட் டது.

*போக்குவரத்து ஊழியர்களுக்கு மோட் டார் பந்தயப் பயிற்சி அளிக்க சென்னை மோட்டார் பந்தய சங்கத்தினர் முன் வர வேண்டும் என மின்துறை அமைச் சர் திரு. எஸ். இராமச்சந்திரன் யோசனை தெரிவித்தார்

*சென்னை நகரில் அண்மையில் ஏற் பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் 7 ஆயிரத்து 726 பேருக்கு வரு வாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அரிசி, சேலை, லுங்கி ஆகியவற்றை வழங்கினார்.

**9—2—1979**

*நெல்லுக்கு அதிக விலைபெறத் தொடர்ந்து பாடுபடுவோம்; உபரி நிலத் தைக் கைப்பற்றி ஏழைகளுக்கு வழங்கு வோம்; உப்பு-கனிவளம்-கரும்புச் சக்கை ஆகியவற்றைக் கொண்டு புதிய தொழிற் சாலைகள் அமைப்போம்; மின்சார உற் பத்தியைப் பெருக்குவோம்; இந்தி மொழி எவர்மீதும் சுமத்தப்படலாகாது என்பதிலும், இருமொழிக் கொள்கை தமிழ்நாட்டில் பின்பற்றப்பட வேண்டும் என்பதிலும் இந்த அரசு அசையாத நம் பிக்கை கொண்டுள்ளது என்று சட்ட மன்றக் கூட்டுக் கூட்டத்தில் நிகழ்த்திய உரையில் தமிழக ஆளுநர் அறிவித்தார்.

*நாட்டுக்குத் தேவையான கண்ணியம் மிக்க தரமான படங்களைத் தயாரித்து, அந்தப் படத்தில் நட்டம் ஏற்பட்டால் அரசு உதவும். அத்தகைய நல்ல படங் களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும்.

* மரணமடைந்த அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்குப் பென்ஷன் வழங்குவ தற்குரிய வயது வரம்பைத் தமிழக அரசு உயர்த்தியிருக்கிறது. தற்போது அரசு ஊழியர் இறந்தால் அவர்களின் பெண் குழந்தைகளுக்கு 21 வயது வரையும், ஆண் குழந்தைகளுக்கு 18 வயது வரை யும் பென்ஷன் என்றிருப்பதை முறையே இனி 24 ஆகவும், 21 ஆகவும் உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

* தமிழ்நாடு அரசின் பல்வேறு அலுவ லகங்களில் பயன்படுத்தப்படும் 'மஸ்டர் ரோல்' பதிவேடுகளில் தொழிலாளர் களுடைய நிரந்தர அல்லது தற்காலிக முகவரியை முழு அளவில் கட்டாயம் குறிக்க வேண்டும் என்று அரசு உத்தர விட்டுள்ளது.

**12—2—1979**

*தமிழகக் கரை முழுவதும், கடல் அரிப் பைத் தடுக்கும் பெரிய திட்டமொன் றைத் தமிழக அரசு தயாரித்து வருவ தாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

**13—2—1979**

*தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கன் சல்டன்சி செல்' எனப் புதிதாக ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வாரியத் தின் நிர்மாணத் திட்டங்கள் குறித்து இந்தப் பிரிவு தக்க ஆலோசனைகளை வழங்கும்.

**14—2—1979**

*தஞ்சை மாவட்டத்தில், தொழில்களைத் துவக்கிட மானிய உதவியும் இதர அனு கூலங்களும் கிடைப்பதற்காக அம்மாவட் டத்தைத் தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்குமாறு தமிழ்நாடு அரசு, மத்திய அரசைக் கேட்டுக்கொண் டிருக்கிறது.

**15—2—1979**

* கூவம் நதியைச் சீர்படுத்துவதற்கான பெரிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது எனத் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. இராகவானந்தம் சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.



# சுற்றுலாப் பொருட்காட்சியை சுற்றி வருகையிலே...

ஆறாவது அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி சென்னை காமராசர் சாலையில் போர் நினைவுச் சின்னத்தின் எதிரில் 25 ஏக்கர் நிலப்பரப்புள்ள தீவுத்திடலில் 7.1.1979ல் தொடங்கி, தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாமல்லபுரத்தில்-காட்சிக்கினிய 'புலிக்குகை'யின் வடிவமைப்புள்ள, நுழைவாயிலையுடைய இந்தப் பொருட்காட்சியில், தமிழக அரசுத் துறைகளைச் சார்ந்த 23 அரங்குகள் இடம் பெற்றுள்ளன. மற்றும் தமிழக அரசுச் சார்புடைய 18 நிறுவனங்களின் அரங்குகளும், மத்தியஅரசுத்துறையைச் சார்ந்த 6 அரங்குகளும், மத்திய அரசுச் சார்புடைய 14 நிறுவனங்களின் அரங்குகளும் உள்ளன.

ஆந்திரம், கேரளம், கர்நாடகம், உத்திரப் பிரதேசம், மேற்கு வங்கம், இமாசலப் பிரதேசம், மேகாலயா, ஒரிசா, பீகார் முதலிய மாநில அரசுத் துறைகளைச் சார்ந்த 9 அரங்குகளும், தனியார் நிறுவனங்களைச் சார்ந்த 20 அரங்குகளும் பங்கு பெற்றுள்ளன.

எழில்மிகு 'பேரங்காடி' ஒன்றும் இங்கே உருவாக்கப்பட்டுள்ளது. எல்லாப் பொருள்களும் இங்கே கிடைக்கும் என்னும் விளம்பரமில்லாத பல்பொருள் அங்காடி அது.

இவ்வாண்டு, அரங்குகளின் அமைப்பு முறையில் ஒரு புதிய அக்கறை காட்டப்பட்டுள்ளது.

பொதுவாக, அரசின் திட்டங்களையும், ஆக்கப் பணிகளையும் விளம்பரப்படுத்துவதை நோக்கமாகக் கொள்ளாமல், அரசுத் திட்டங்கள் மக்களுக்கு எவ்விதம் பயன்படுகின்றன? மக்கள் எவ்வாறு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பனவற்றையெல்லாம் தெளிவாக விளக்கும் வகையில் அரங்குகளை அமைத்திருக்கும் தனித்திறன் பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

**செய்தித்துறை அரங்கம்**

நூற்றாண்டு காணும் இணையற்ற இருபெரும் மேதைகளான பகுத்தறிவுத் தந்தை பெரியார், இந்திய விடுதலைப் போரின் ஒளிவிளக்காக விளங்கிய மூதறிஞர் இராஜாஜி ஆகியோரை நினைவு கூர்ந்து பாராட்டத் தக்க வகையில் தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி நூற்றாண்டு விழா அரங்கு, தமிழக செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் எழில்மிகு-சிந்தனையரங்கமாகத் திகழ்கிறது.

கோலூன்றி நடந்தாலும் கொள்கையில் கொஞ்சமும் துவளாமல், வயதில் அறிவில் முதிர்ந்தும் நாட்டின் வாய்மைப் போருக்கு இளையாத இளைஞராக இறுதிவரை வாழ்ந்த தந்தை பெரியார், தமிழினப் பாதுகாப்புக்காகவும், உயர்வுக்காகவும் வாழ்நாளில் நடத்திய எண்ணற்ற போராட்டங்களையும், அவரது வாழ்க்கை வரலாற்றையும் நினைவூட்டும் புகைப்படங்களும், ஓவியங்களும் இளைய சமுதாயத்திற்கு எழுச்சியும் புத்துணர்வும் ஊட்டத்தக்க வகையில் இங்கே வகுத்துத் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன.

இதுபோலவே, தெளிந்த சிந்தனையும் நெஞ்சுரமும் கொண்டிருந்தது மூதறிஞர் ராஜாஜிஅவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவர் பங்குபெற்ற பல நிகழ்ச்சிகளையும் விளக்கும் நிழற்படங்களும், திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திலிருந்து, 'மூதறிஞர்' அவர்களால் 1925ல் வெளியிடப்பட்ட - மதுவிலக்கை வலியுறுத்தும் கருத்துச் செறிவுள்ள ஓவியங்களும் இங்கே தொகுத்து வைக்கப்பட்டுள்ளன.

இவை தவிர, தமிழக அரசின் துயர் துடைப்புப் பணிகள், தமிழகத் தலைவர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், ஆகியோருக்குத் தமிழக அரசு எடுத்த சிறப்பான விழாக்களை விளக்கும் நிழற்



படங்கள் ஆகியவற்றை இங்கே காணலாம்.

இருபெரும் பெரியார்கள் பற்றிய திரைப்படங்கள் தொடர்ந்து திரையிடப்படுகின்றன. இவற்றிற்கெல்லாம்மேலாக இவர்கள் இருவரது குரல்களின் ஒலிப்பதிவுகளையும் தொடர்ந்து ஒலிபரப்புகிறார்கள்; இவற்றால் நாம் மெய்சிலிர்த்துத் திரும்புகிறோம்.

**வனத்துறை அரங்கம்**

அடர்ந்த பெருங்காட்டில் யானைகள் அணிவகுத்துச் செல்லும் எழில்மிக்க ஓவியத்தில் இதயத்தைப் பறிகொடுத்து, ஒரு பெரும் மரத்தின் அமைப்புள்ள நுழைவாயிலில் நுழைகிறோம். ஆம். காட்டுக்குள் நுழைவது போன்ற உணர்வு; அத்தகைய காடுபடு பொருள்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளின் வடிவமைப்பு;

தேயிலைத் தோட்டங்களாக மாற்றப்பட்டு வருகிற நீலகிரி மாவட்டக் காடுகளின் வடிவமைப்பு;

சந்தன நாற்றுக்களை நட்டு வளர்த்து மரங்களாக்கி, வெட்டி விற்பனைக்கு அனுப்பும் வரை வரிசைப் படுத்தப்பட்டுள்ள வண்ண நிழற்படங்கள், இப்படி எத்தனை எத்தனையோ காட்சிகளை நாம் கண்டு மகிழ்கிறோம்.

காடு என்றால் கவின்மிகு காட்சிகளும், விலங்குகளும் நிறைந்த இடம் மட்டுமல்ல- கருத்திற்கும் பொருளாதாரத்திற்கும் உயிர்ப்பூட்டக் கூடிய பல்பொருள்களின் விளைவிடம்- செல்வக் களஞ்சியம் என்கிற உணர்வை நாம் பெறுகிறோம்.

அரங்கைச் சுற்றிப் பார்த்துவிட்டு நாம் வெளியே வரும்போது அங்கே எழுதி வைக்கப்பட்டுள்ள

'காடின்றி நாடில்லை
நாடின்றி நாமில்லை;

'காட்டு மரத்தை வெட்டாதே
நாட்டுநலத்தைக் கெடுக்காதே'

என்பன போன்ற வாசகங்களை நம்மையுமறியாமல் நம் வாய்கள் முணுமுணுக்கின்றன!

**சின்கோனாத்துறை அரங்கம்**

வனத்துறையின் மற்றொரு பகுதியாக அமைந்துள்ளது சின்கோனாத்துறை.



தமிழக அரசு அண்மைக்காலத்தில் அனுமதி வழங்கியுள்ள இத்துறையின் வளர்ச்சி நம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்துகிறது.

நீலமலையின் இயற்கைச் செல்வமாக விளங்குவது சின்கோனா என்னும் ஒப்பற்ற மரம். இது, பல்வேறு மருத்துவப் பயனுடைய அரிய மரம்.

சின்கோனாத் துறையினால் உற்பத்தி செய்து விற்கப்படுகிற சிறந்த மருத்துவப் பயனுடைய தைலங்கள் இங்கே கிடைக்கின்றன.

தொட்டபெட்டாமிஸ்ட் என்னும் சிறந்த நறுமணத் தைலம் (செண்ட்), கொசுத் தொல்லையைத் தடுக்க 'ஓடாமஸ்' போலப் பயன்படுத்தப்படுகிற 'சினோமாஸ் பசை' காற்றில் நறுமணம் பரப்புகிற 'சின்ஃபிரெஷ்' இப்படி எத்தனை எத்தனையோ பொருள்களை இத்துறை தயார் செய்கிறது.

'ஓடாமஸ்'ஸில் சேர்ப்பதற்கான சினோமாஸ் தைலத்தை இத்துறையே உற்பத்தி செய்து கொடுக்கிறது.

குடும்ப நலத் திட்டத்திற்குப் பயன்படுகிற 'டயஸ்கோரியா' செடி, 120 ஹெக்டேரில் பயிர் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான திட்டமதிப்பீடு ரூ. 80 இலட்சம். இவற்றையெல்லாம் சின்கோனாத்துறை நமக்கு தெரிவிக்கிறது.

**அறநிலையத்துறை அரங்கம்**

அடுத்து, எந்த ஊரிலும் இல்லாத அளவிற்கு மிகப் பெரிய லிங்கமும், வியக்கத் தக்க வகையில் உள்ள நந்தியும் உடைய தஞ்சைப் பெரிய கோயிலுக்குள் நுழைகின்ற உணர்வோடு இந்து சமய அற நிலைய பாதுகாப்புத் துறை அரங்கிற்குள் அடியெடுத்து வைக்கிறோம். ஆம். அந்த அரங்கம் தஞ்சைப் பெருங்கோயிலின் வடிவில்தான் அமைந்திருக்கிறது.

இந்த அரங்கில், நெட்டியால் சிறப்பான முறையில் செய்யப்பட்ட சுவாமிமலை சுவாமிநாத சுவாமி திருக்கோயில் வடிவமைப்பும் திருவாரூர் கோயிலில் உள்ள பஞ்சமுக வாத்தியமும், வீரபாண்டிய கட்டபொம்மன் வழிபட்ட செப்புத் திருமேனிகளும், திருமலை நாயக்கர் திருரங்கம் திருவரங்கநாதர் திருக்













கோயிலுக்கு வழங்கிய தந்தப் பொம்மைகளும், அழகர் கோயிலில் உள்ள மிகப் பழங்காலத்துத் தந்தக்காவடி, தீச்சட்டி, சந்தனக்கல் ஆகியவையும், கும்பகோணம் ஆதி கும்பபேஸ்வரர் கோயிலில் உள்ள கல் நாதஸ்வரமும், கருமாரியம்மன் திருக்கோயில், சென்ன மல்லீஸ்வரர் திருக்கோயில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில், திருக்குற்றாலநாதர் திருக்கோயில், ஆகியவற்றின் வடிவமைப்புகள் காட்சியின்பம் நல்குகின்றன.

தமிழகத்தில் திருச்செந்தூர் திருத்தணி, சுவாமிமலை, பழநி, ரத்தினகிரி ஆகிய ஐந்து ஊர்களிலும் தங்கரதங்கள் உள்ளன என்ற தகவலை இந்த அரங்கு நமக்குத் தெரிவிக்கிறது.

ஆலயம் என்பது தொழுவதற்கு மட்டுமல்ல-அது மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்த பல்வேறு சிறப்பியல்புகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் சிறப்புமிக்க கலைக்கூடம் என்ற கருத்தையும் நாம் பெறுகிறோம்.

இங்கு அமைக்கப்பட்டுள்ள இராஜ ராஜசோழன் அரங்கில் தமிழகக் கோயில்கள் பற்றிய வண்ணத் திரைப்படம் தினமும் காட்டப்படுகிறது.

**சுற்றுலாத்துறை அரங்கம்**

தஞ்சாவூர் பொம்மைகள் போல வடிவமைக்கப்பட்டுள்ளது தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் அரங்கம்.

ஒரு பொம்மையின் விலாப்புறத்தில் நுழைந்து இன்னொரு பொம்மையில் விலாப்புறத்தின் வழியே வெளியே வருகிறோம். இந்த அரங்கிலே, தமிழகத்தின் சிறந்த சுற்றுலாத் தலங்களாக விளங்கும் மாமல்லபுரம், சிதம்பரம், தஞ்சை, மதுரை, குற்றாலம், ஏர்க்காடு, முதுமலைக்காடு ஆகியவற்றை நாம் ஒலி ஒளிக் காட்சிகளாகக் கண்டு மகிழ்கிறோம்.

**மாநகராட்சி அரங்கம்**

வெள்ளுடை வேந்தர் தியாகராயரை முதல்நகரத் தந்தையாகப் பெற்ற சிறப்பு, சென்னை மாநகராட்சிக்கு உண்டு. அத்தகைய மாநகராட்சியின் எழில் மிகு ரிப்பன் கட்டிட வடிவமைப்போடு அமைந்த ஒரு மாதிரி மாநகராட்சி (Model Corporation) தான் மாநகராட்சி அரங்கம். இந்த அரங்கை நாம் சுற்றிவரும்போது, மாநகராட்சியின் சிறப்பான பணிகள், கடந்த

18 மாதங்களில் மாநகராட்சியின் சாதனைகள், மக்களின் நல்வாழ்வுக்கும் நகரின் அழகுக்கும் அது மேற்கொண்டுள்ள திட்டங்கள், ஆகியவற்றையெல்லாம் தெளிவாக அறிந்து கொள்கிறோம்.

'கழிவிலிருந்து காசு' என்பதை வலியுறுத்தும் வகையில் இங்கு கலவை உரம் 2 கிலோ பாக்கெட் 50 காசு விலையில் விற்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சி மயிலாப்பூரில் நடத்துகிற 'மின்சாரச்சுடுகாடு' இயங்கும் முறை இங்கு வடிவமைக்கப்பட்டு காட்டப்படுகிறது.

மாநகராட்சி அரங்கில், மருத்துவ ஆய்வகம் ஒன்றுள்ளது. இங்கு இரண்டு ரூபாய் செலவில் இரத்தப் பரிசோதனையும், 5 ரூபாய் செலவில் இருதய மின் அலைப் பதிவு (இ.சி.ஜி)ம் நடத்தப்பட்டு, முடிவுகள் உடனடியாகத் தரப்படுகின்றன.

இரண்டு ரூபாய் செலவில் மினி எக்ஸ்ரே எடுக்கப்படுகிறது. இந்தப் படம் மாநகராட்சியின் செலவிலேயே, உரியவர்களுக்கு அஞ்சல் வழி அனுப்பப்படுகிறது.

பிறப்பு இறப்புச் சான்றிதழ் நகல்களும், வெளிநாடுகளுக்குச் செல்வதற்குரிய தேவையான மருத்துவச் சான்றிதழ்களும் இங்கு உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

### தொழிலாளர் நலத்துறை அரங்கம்

தொழிலாளர்களுக்குத் தொழிற்கூடங்களில் ஏற்படும விபத்துக்களைத் தடுக்கவும், அவர்கள் வாழ்வு மேம்பாடடையவும் அரசு ஆற்றி வரும் அரும்பணிகளை விளக்கும் இந்த அரங்கில், சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்த படலத்தினை ஓவியமாக்கி,










உழைப்பின் அயர்வில் ஒய்வு கொண்டதற்குத் தண்டனை அளிக்கப்பட்டது அன்று, இன்றோ, உழைப்பவர்க்கு ஒய்வு வழங்காவிடில் தண்டனை அளிக்கப்படுகிறது' என்று குறிப்பிட்டிருப்பது சுவைபயப்பதாக உள்ளது.

**தொல்பொருள் ஆய்வுத்துறை அரங்கம்**

கற்றறி புலவர் பெருமக்கள் மட்டுமே உரிமை கொண்டாடி வந்த இந்தத் துறையினை, தொடக்கப் படிப்பினரும் பாமர மக்களும் கூடப் பார்த்து மகிழ்வு பயன்பெறத் தக்க வகையில் இவ்வரங்கம் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

**காவல்துறை அரங்கம்**

இத்துறையின் அரங்கில், ஒரு புதை குழியை ஓவியமாக்கி, 'நிற்காமல் சென்ற நீலமேகத்தின் உடல் இங்கே அடக்கமாகியிருக்கிறது' என்றும்

பிறிதோர் ஓவியத்தில்,

'நீர் உமது வாகனத்தில் வேகமாகச் சென்றால், 1980 ஆம் ஆண்டினை அடைவது கடினம்' என்றும் குறித்திருப்பது எண்ணி நினைந்து மகிழத்தக்கது. இப்படியே, இங்கே எத்தனை எத்தனையோ பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

1975ஆம் ஆண்டில் 25 விழுக்காடாக இருந்த சாலை விபத்துக்கள் 1978ஆம் ஆண்டில் 5 விழுக்காடாகக் குறைந்திருக்கிறது என்றால் இத்துறையின் பணிகளைப் பாராட்டுவதில் தவறென்ன?

**நல்வாழ்வு-குடும்பநல அரங்கம்**

மருத்துவக் கல்வி, நல்வாழ்வு, குடும்பநலம் ஆகிய முப்பிரிவுகளும் இணைந்து இவ்வாண்டில் அரங்கம் அமைத்திருப்பது குறிப்பிடத் தக்கது. இப்படி அரங்கமைத்திருப்பது இதுவே முதல் தடவையாகும். இவ்வரங்கின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் கலையரங்கில் நாள்தோறும் திரைப்படங்கள் காட்டப்படுகின்றன.

**போக்குவரத்துத்துறை அரங்கம்**

போக்குவரத்துத் துறையில் இந்தியாவில் பயணிகள் போக்குவரத்து வளர்ச்சி பற்றிய புதிர்களுக்கு நாம் மின்விசையை அழுத்தி எளிதில் விடை காண முடிகிறது.

இந்தியாவிலேயே முதன் முதலாக மலைவாழ் மக்கள் நலனுக்காக என்று உதகையில்தான் சிறு பேருந்து (Mini Bus) விடப்பட்டது. இந்தப் பெருமை சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்ததாகும்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினர், பேருந்துகளின் இருக்கைகள் வளர்ந்த விதத்தை ( Evolution of seats ) பல்வேறு அமைப்புடைய இருக்கைகளைக் காட்சிப் பொருளாக்கி விளக்கிக் காட்டுகின்றனர்.

## கடைசி அட்டையில்

**சென்னையில் நடைபெற்ற குழந்தைகள் திரைப் படவிழாவை 8.2.1979 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைக்கும் காட்சி. அருகில் நிற்பவர் இந்திய குழந்தைகள் திரைப்படச் சங்கத் தலைவர் திரையுலக மேதை திரு வி. சாந்தாராம் அவர்கள்.**

**கூட்டுறவுத்துறை அரங்கம்**

கூட்டுறவே நாட்டுயர்வு என்னும் கொள்கைபரப்பும் கூட்டுறவுத்துறை சமுதாயத்தின் அடித்தளத்தில் உழல்பவர்களை உயர்த்திட ஆற்றிவரும் அரும் பணிகளை இவ்வரங்கில் உள்ள புகைப்படங்களும், கேலிச்சித்திரங்களும் உயிரோட்டமுள்ள சிலைகளும் தெளிவாக்குகின்றன.

வானவில் வண்ணத்தில் அமைந்த முகப்பில் உள்ள எழில் ஓவியங்கள் கூட்டுறவின் நன்மைகளை மட்டுமல்லாமல், கூட்டுறவாளரின் 'கடமை'யையும் உணர்த்துகிறது.

கூட்டுறவு நிறுவனங்களின் 'தயாரிப்புகள்' காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

**மீன்துறை அரங்கம்**

பல்வேறு மீன் வகைகளைப் பார்க்கிறோம்: மீனவர்களுக்கு அரசு வழங்கிய சலுகைகளை அறிகிறோம். கூனிறால் என்றும் ஒருவகையான மீனின் உற்பத்தியும், கலப்பின மீன்களின் உற்பத்தியும் சுவையபயப்பதாக உள்ளது.

இப்படியே,

தமிழக அரசுத் துறையின் 23 அரங்குகளும்,

தமிழக அரசின் சார்புடைய நிறுவனங்களின் 18 அரங்குகளும்

மத்திய அரசுத் துறையின் 6 அரங்குகளும்

மத்திய அரசின் சார்புடைய நிறுவனங்களின் 14 அரங்குகளும்

பிற மாநிலங்களின் அரசுத் துறை-அரசுச் சார்புடைய நிறுவனங்கள் ஆகியவற்றின் 9 அரங்குகளும் காட்சிக்கு மட்டுமல்ல-கருத்துக்கும் விருந்தளித்துப் பொதுமக்களைப் படிப்பிக்கும் வகையில் அமைந்துள்ளன.

இவை தவிர, தனியார் துறையைச் சார்ந்த 20 அரங்குகள் 'அங்காடி'யில் பங்கு பெற்றுள்ளன.

**பால், ஐஸ்கிரீம், கோழிமுட்டை**

முட்டை, கோழி இறைச்சிப் பொருள்கள் ஆகியவற்றினை விற்பனை செய்வதற்கான மொத்த விற்பனையுரிமை, அரசு நிறுவனங்களான பால் வள நிறுவனம், தமிழ்நாடு கோழி வளர்ச்சிக் கழகம் ஆகிவற்றிற்கே வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**பொழுது போக்கு**

பொருட்காட்சிக்கு வருகிறவர்களின் பொழுதுபோக்கிற்காகவும், மனமகிழ்ச்சிக்காகவும் ஏராளமான அம்சங்கள் உள்ளன.

திறந்த வெளிக் கலையரங்கமான அறிஞர் அண்ணா கலையரங்கில், இளைஞர், முதியோர் ஆகிய எப்பாலர்க்கும் மகிழ்ச்சியூட்டத்தக்க எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

பொதுவாக இவ்வாண்டு நடைபெறுகிற இந்த அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி, வெறும் பொருட்காட்சியாக மட்டுமில்லாமல், பொதுமக்கள் பல்துறை அறிவையும் வளர்த்துக்கொள்ள உதவும் ஒரு பல்கலைக் கழகமாகவும் உள்ளது என்றால் அது மிகையாகாது!

பெரும்பொருட் செலவில், பல்வேறிடங்களுக்கும் சென்று பல மாதங்கள் முயன்று பெற வேண்டிய அறிவையும் உணர்வையும் மிகக் குறைந்த கட்டணத்தில் சிலமணி நேரங்களில் நாம் பெறுகிறோம் இந்தப் பொருட்காட்சியின் வாயிலாக!

—சாமி பழனியப்பன்.

# மங்கலப் புத்தாண்டுக்கு மாபெரும் பரிசுகள்!

## தமிழ் புத்தாண்டு சிறப்புக் குலுக்கல்!

**தமிழ்நாடு பரிசுச் சீட்டு வாங்கிடுவீர்**

சிறப்பு முதல் பரிசுகள் இரண்டு
ஒவ்வொன்றும் ரூ. **5** லட்சம்

சிறப்பு இரண்டாவது பரிசுகள் மூன்று
ஒவ்வொன்றும் ரூ.**1,00,000**

மற்றும் ஏராளமான பரிசுகள்.

குலுக்கல் நாள்: **20-4-1979**

பரிசுச் சீட்டின் விலை: ரூ. 1 மட்டுமே.

மொத்தப் பரிசுத் தொகை ரூ. 41 லட்சம்

10 வரிசைகள்—மொத்தப் பரிசுகள் 13,075




இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்,
அரசினர் தோட்டம், சென்னை-600 002



# தமிழகத்தில் சாரண ஜாம்பொரி

சை. வே. சிட்டிபாபு
மாநில முதன்மை ஆணையர்
தமிழ்நாடு சாரணர் சாரணியர் சங்கம்.

கடந்த ஜனவரித் திங்கள் 18-ந் தேதியிலிருந்து 22-ந் தேதிவரை சென்னையை அடுத்த மறைமலைநகர் என்னும் புதுநகரில் நடைபெற்ற பாரத சாரண சாரணியரின் எட்டாவது 'ஜாம்பொரி' வரலாற்றுச் சிறப்பினை எய்திய ஒரு மாபெரும் நிகழ்ச்சியாகும். இதன் பொருட்டு தமிழகத்திற்கே கிடைத்தற்கரிய ஒரு பெருமை ஏற்பட்டது.

'ஜாம்பொரி' என்றால் என்ன?

சாரண இயக்கத்தின் தோற்றுவாய் அதன் வளர்ச்சி, அதன் இலட்சியங்கள், சாதனைகள் இவைகளை நன்குணர்ந்தவர்களுக்கு இதை விளக்கத் தேவையில்லை. ஆனால், அன்று மறைமலை நகரில் கண்ணையும் கருத்தையும் கவர்ந்த பல பேருக்கு 'ஜாம்பொரி' என்னும் சொல் புரியாததாக இருந்தது. ஆனால், இச்சொல் சாரண இயக்கத்தின் இலக்கியத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்று மட்டும் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

''ஜாம்பொரி'' என்ருல் என்ன?'' என்று என் நண்பர் ஒருவர் என்னைக் கேட்டார். ''மிகப் பெரிய அளவிலே சாரண சாரணியர் குதூகலமாக ஒன்று கூடுவதே 'ஜாம்பொரி''' என்று கூறினேன்.

சாரண இயக்கத்தைத் தோற்றுவித்த பேடன்பவல் பிரபு தான் முதன்முதல் 1920-ல் இச்சொல்லைப் பயன்படுத்தினார். 1907-ல் இங்கிலாந்தில் நிறுவப்பட்ட சாரண இயக்கம் உலகில் பல நாடுகளுக்கும் பரவி, 1920-க்குள் பல்லோராலும் பாராட்டப்பட்ட ஒரு இளைஞர் இயக்கமாகத் திகழ ஆரம்பித்தது. இதன் வியத்தகு ஆற்றலை மக்களறிய வேண்டுமென எண்ணி பேடன்-பவல் அவர்கள் உலகில் பல நாடுகளிலிருந்தும் சாரணர்களை 1920-ல் ஒன்றாகக் கூடச் செய்து பல கேளிக்கைகளின் மூலமும், தீரமிகு நிகழ்ச்சிகளின் மூலமும் ஒருவரையொருவர் உள்ளார உணர்ந்து புரிந்து கொள்ளச் செய்தார்.

உலகளவிலே ஏற்பட்ட இப்பேரணி நாட்டளவிலும் ஏற்பட ஒரு முன்னோடியாக அமைந்தது. இதுகாறும் உலகளவிலே 17 'ஜாம்பொரி'கள் நடந்தேறியுள்ளன. நம் நாட்டில் 1950-ல் மூன்று சங்கங்களாக இயங்கின சாரண இயக்கம், பாரத சாரணர், சாரணியர் என்ற புதிய பெயரில் ஒன்றியங்கிய தேசியச் சங்கமாக ஆன பிறகு நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறையென இம்மாதிரியான ஜாம்பொரிகள் நிகழ்ந்துள்ளன. மறைமலை நகரில் நடைபெற்ற 'ஜாம்பொரி' எட்டாவதாகும்.

தமிழகத்திற்கும் சாரண இயக்கத்திற்கும் சரித்திரப் பெருமை மிகு தொடர்பு ஒன்றுண்டு என்பதை எத்துணைப் பேர் அறிவார்கள்? சாரணர் இயக்கம் 1909-ல் ஆங்கில ஆதிக்கத்தின் கீழிருந்த இந்தியாவில் 'பேடன்பவல் சாரணர் சங்கம்' எனும் பெயரில் தொடங்கியபோது, அதில் ஆங்கிலோ-இந்திய, ஐரோப்பிய சிறுவர்களே சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்திய இளைஞர்கள் சேருவதற்குத் தடை விதித்திருந்தனர்.

சென்னையில் நம் தாயக விடுதலைக் காகத் தன் இன்னுயிரையே பணயம் வைத்துப் போராடிய வீராங்கனை டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் இந்த இழிவு செய்யும் தடையை எதிர்த்து 1917-ல் இந்திய சாரணச் சிறுவர்கள் என்ற பெயரில் ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார். இதுவே பிறகு பேடன்பவல் அவர்களால் அகில இந்திய ரீதியில் இந்திய சாரணச் சிறுவர் சங்கம் என அங்கீகரிக்கப்பட்டது.

எனவே, இந்திய சாரண இயக்கமே நம் தமிழகத்தின் தலை நகராம், சென்னையில் தான் முதன் முதல் வேரூன்றி, பிறகுதான் மற்ற மாநிலங்களுக்குப் பரவியது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த வகையில் பெறற்கரிய புகழினைத் தேடிக்கொண்ட தமிழகத்தில் மிக நேர்த்தியாக எட்டாவது 'ஜாம்பொரி' நடைபெற்றதென்றால் நமக்குப் பூரிப்பு ஏற்படத்தானே செய்யும்!

நம் தமிழக அரசின் அழைப்பை ஏற்றுக் கொண்டுதான் டெல்லியிலுள்ள தேசிய பாரத சாரணர் சாரணியர் சங்கம் இந்த ஜாம்பொரியை மறைமலை நகரில் நடத்த முன் வந்தது. இதையொட்டி ஏற்பட்ட செலவு இனத்தில் 60 சதவீத பங்கினை அரசு ஏற்றுக் கொண்டது மிகவும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

நான்காண்டுகளுக்கு முன்பே அப்போது கல்வி அமைச்சராகவிருந்த மாண்புமிகு டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இந்த ஜாம்பொரியைத் தமிழ்நாட்டில் நடத்த வேண்டும் என்று தேசிய நிறுவனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால், சென்ற ஆண்டின் தொடக்கத்தில் தான் நம் தமிழக அரசும் தேசிய நிறுவனமும் கலந்தாலோசித்து ஜாம்பொரியைத் தமிழ்நாட்டில் நடத்துவதென முடிவு செய்தன. இதைத் தொடர்ந்து முதற்கட்டமாக இப்போதைய கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் ஒரு ஜாம்பொரிக் குழு அமைக்கப்பட்டு, அக்குழு மறைமலை நகரில் ஜாம்பொரியை நடத்தத் தீர்மானித்தது.

சென்னைக்கருகே இம்மாதிரியான இடம் கிடைக்கப் பெற்றது ஒரு நற்பேறாகும். ஏதோ நம் பெருவிழாவிற்கெனவே ஆயத்தப் படுத்தப்பட்ட ஒரு பேரிடமாக இது அமைந்து விட்டது. 20,000 சிறுவர் சிறுமியர் சேர்ந்து சுமார் 3,000 கூடாரங்களிலிருந்து கொண்டு பாடி வாழ்க்கை வாழ இது மிகவும் ஏற்றதாகவிருந்தது. சென்னைத் தலைநகர் வளர்ச்சி அதிகாரக்குழு வினால் (MMDA) நிலம் ஏற்கெனவே அனேகமாகச் சமன் செய்யப்பட்டு, சாலைகள் பல அமைக்கப் பட்டிருந்த காரணத்தினால் ஜாம்பொரியை நடத்தத் தேவைப்படும் நீர், மின்சார, சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தரும் பொறுப்பு அதே எம்.எம்.டி.ஏவிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்கான கூடுதல் செலவினை ஈடுசெய்ய ஜாம்பொரிக் குழு ஒப்புதல் தந்தது. தக்க நடவடிக்கைகளை MMDA எடுக்கத்தான் செய்தது. இதற்குத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், தமிழ்நாடு மின் சார வாரியம் ஆகிய மூன்று வாரியங்களும் உதவி செய்ய முன்வந்தன.

ஜாம்பொரியில் கலந்து கொள்ள அநேகமாக எல்லா மாநிலங்களிலிருந்தும் சாரணப் படைகள் ஓரிரண்டு நாட்கள் முன்னதாகவே வந்தன. ராஜஸ்தான், குஜராத் படைகள் ஆரம்ப நாளன்றுதான் வரமுடிந்தன. அவைகளை ஏற்றிக் கொண்டுவந்த தனிப் பட்டப் புகைவண்டித் தொடர்கள் சற்றுத் தாமதமாக இங்கு வந்தடைந்ததே இதற்குக் காரணம்.

பாடி வாழ்க்கைக்குத் தேவைப்பட்ட ஆயிரக்கணக்கான கூடாரங்கள் வாடகைக்கு டெல்லியிலிருந்து தருவிக்கப்பட்டன. மற்றும் என்.சி.சி. இராணுவத் துறையின் மூலமாகவும், காவல் துறையின் மூலமாகவும் 300 கூடாரங்கள் அரசின் துணைகொண்டு பெறப்பட்டன. சிறுவர் சிறுமியர்களுக்குத் தனியாகத் துணைப் பாசறைகள் அமைத்துத் தரப்பட்டன.

நம் தமிழ்நாட்டிலிருந்து வந்த சாரணர்கள் 2300பேர். சாரணியர்கள் 1100 பேர். ஆகும். எண்ணிக்கையில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது இவர்களே மிக அதிகமானவர்கள். இவர்களுள்ளும் சேலம், கோவை, செங்கற்பட்டு மாவட்டங்களிலிருந்து வந்தவர்களே அதிகமானவர்.







ஜாம்பொரி நிர்வாகிகள் உணவு விஷயத்தில் தக்க கவனத்தைச் செலுத்தித் தேவைப்படும் பண்டங்கள் அனைத்தும் தமிழக நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாகவும், செங்கற்பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் பெறப்பட்டது.

ஜாம்பொரி ஆரம்பிப்பதற்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே, கூடாரங்களில் மருத்துவமனையை எல்லா வசதிகளுடன் நிறுவிச் செயல்பட்டனர்.

ஜாம்பொரியின் தொடக்க நாளாகிய ஜனவரி 18-ம் நாளுக்கு முன்னாள் மாலை, சாரண. சாரணியத் தலைவர்களின் தேசிய மன்றம் கூடி, சாரண இயக்கத்தின் புதிய கருத்துக்கள், அனுபவங்கள் திட்டங்கள் ஆகியவை பற்றிப் பேசி நல்ல பல முடிவுகளை எடுத்தது. அடுத்த நாள் காலை தமிழ்நாட்டின் பெருவிழாவான பொங்கல் திருவிழாவை, மற்ற மாநிலங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வந்துள்ள சாரணர் சாரணியர்கள் கண்டுகளிக்கும்வண்ணம் மிக்க ஆரவாரத்துடனும் கட்டுக்கடங்காத உற்சாகத்துடனும் நடத்திக் காட்டினர். நம் மாநிலச் சாரணப்படையினர்.

தமிழ்நாட்டுப் பாடல்களும் ஆடல்களும் அவர்களை வியப்பிலாழ்த்தியதோடு அல்லாமல் அவர்களில் சிலரை நடைபெற்ற கேளிக்கைகளிலும் நேரிடையாகப் பங்கு கொள்ளச் செய்தது. அன்று விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வந்திருந்த டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தமிழ்நாட்டின் பாரம்பரியம் கலைச்செல்வம், மக்கட்பண்பு, பொங்கலின் சிறப்பு ஆகியவை பற்றி அருமையான ஒரு பேருரை ஆற்றினார்.

பொங்கல் விழாவில் கலந்து கொள்ளும் போது சீருடை தரிக்காமல் சிறுவர் சிறுமியர் வண்ணமிகு உடைகளை உடுத்தி வந்திருந்த அக்காட்சி கோலாகலமாக இருந்தது. சந்தனம், பன்னீர், குங்குமத்தோடு விருந்தினர்களை வரவேற்று உபசரித்த நம் தமிழகச் சாரணர்கள் பாராட்டப்பட்டார்கள்.

பொங்கல் விழா முடிந்த பிறகு அன்று மாலை நடக்கவிருக்கும் தொடக்க விழாவிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட குழு ஒத்திகையில் கலந்து கொண்ட சாரணர் சாரணியர், அதைத் தொடர்ந்து ஜாம்பொரி வீரச்செயல் போட்டியில் மிக உற்சாகமாகக் கலந்து கொண்டனர். இந்தப் போட்டியில் முக்கியமான இடம் பெற்ற ஒன்று மறைமலை நகருக்கருகிலுள்ள ரயில்நகர் எனும் இடத்தில் சாலை அமைப்பதாகும். நாள்தோறும் இப்பணியில் 500 பேர் ஈடுபட்டுச் சாலையைச் செம்மையாக முடித்துத் தந்தது, ஜாம்பொரியின் சிறப்புக்கு அணியாக இருந்தது.

தமிழக அரசு நிறுவிய ஜாம்பொரி அவைக்கு மேதகு தமிழக ஆளுநரும், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மாண்புமிகு ஜெகஜீவன்ராம் அவர்களும் புரவலராகவும், மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவராகவும் மற்ற அமைச்சர்களெல்லாம் உறுப்பினர்களாகவும் இருந்தது, ஜாம்பொரிக்குச் சீரிய


*With The Best Compliments From*

*Grcm:* THREELEAVE

*Phone:* 551391
551367

# MAHALAKSHMI
# ROLLER FLOUR MILLS

15, ELLAYA MUDALI STREET,

MADRAS — 600 081

*ALWAYS INSIST ON* **'THREELEAVE'** *BRAN WHEAT PRODUCTS*

**MAIDA SOOJI ATTA & BRAN**

பெருமையைச் சேர்த்ததெனலாம். மேதகு தமிழக ஆளுநர், மாண்புமிகு முதல்வர் ஆகியோருடன் இந்தியப் பிரதமர் மாண்புமிகு மொரார்ஜி தேசாய் அவர்கள் மேடைக்கு வந்தபோது, குழுமியிருந்த குழந்தைகள் எழுப்பிய ஆரவார ஒலி இன்றும் என் செவிகளில் ஒலிக்கின்றது. அவ்வளவு குதூகலம், மகிழ்ச்சிப் பூரிப்பு, உற்சாகம்!

முதலில் ஜாம்பொரிக்குக் கொடி உயர்த்தப்பட்டது. அத்துடன் மற்ற நாடுகளிலிருந்து வந்த அணிகள் தத்தம் கொடிகளை ஏற்றினர். 12 வெளிநாடுகள் நம் ஜாம்பொரியில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து ஒரு ஜீப்பில் இந்தியப் பிரதமர் நம் தேசிய ஆணையர் பின்னிருக்க, கூடியிருந்த எல்லா அணிகளையும் மேற்பார்வையிட்டார். அதன் பிறகு சாரணர் சாரணியர் படைகள் அணிவகுத்து இசைக் கருவியாளர் குழாம் முன் செல்ல பீடு நடை போட்டுக் கொண்டு இந்தியப் பிரதமருக்கு மரியாதைச் செலுத்தினர். வரவேற்புரை நிகழ்த்திய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனம் நெகிழ, அன்பு ததும்பும் சொற்களால் வந்திருந்த இளைஞர்களை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

“உலக சாரண இயக்கம் மொழி, சமயக் கலாசாரத் தடைகளை மீறி, மனித சமுதாயத்திடையே சகோதரப் பாசத்தை வளர்க்கும் ஒரு வலிமைமிகு கருவியாகும். நற்குடிமைக்கு உகந்த மனப்பான்மை, தேசியப் பற்று, தன்னலமற்ற பண்பு, வீர உணர்வு ஆகியவற்றை இளைஞரிடையே அவர்கள் ஏற்கும் இயல்புடைய வயதிலே பயிற்றுவிப்பது சாரண இயக்கமே. இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வந்திருக்கும் பிள்ளைகள் கலந்து ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும், மகிழ்ச்சியாகச் சேர்ந்து வாழவும் இந்த ஜாம்பொரி ஒரு அற்புதமான வாய்ப்பை அளிக்கிறது.” இந்த ஜாம்பொரி அரியதொரு முக்கியத்துவத்தை அடைந்துள்ளது என்பதை எடுத்துக்கூறி நன்றி நவின்றார் மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் அவர்கள்.

இப்படிச் சிறப்பாகத் தொடங்கிய ஜாம்பொரி மறைமலை நகரையே ஒரு சிறு உலகமெனக் காட்சியளிக்கச் செய்தது. நம் தமிழகச் சாரணர் சாரணிய அணிகள் ஜாம்பொரி நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் சுறுசுறுப்பாக, தெம்போடு பங்கு கொண்டு சான்றிதழ்களும், பரிசுகளும் பெற்றன. நம் பிள்ளைகள் ஜாம்பொரி நட்பு விளையாட்டில் கலந்து கொண்டு மற்ற மாநிலங்களிலிருந்து வந்த இவர்கள் அனைவரின் நட்பையும் நன்மதிப்பையும் பெற்றனர். இரண்டுமுறை வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த விருந்தினர்களை அழைத்து நம் தமிழ்நாட்டு விருந்தோம்பலின் சிறப்பினை உணர்ந்து மகிழும்படிச் செய்தனர்.

இரண்டு நாட்கள் காலையில் அனைத்துச் சமய இறைவணக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 10,000-க்கும் மேற்பட்ட பிள்ளைகள் பங்கு கொண்டு தங்களிடையே எவ்வித வேற்றுமையுணர்விற்கும் இடமில்லை என்பதை வெளிப்படுத்தினர். பல்திறன்கள் போட்டி சிறுவர் சிறுமியரின் வியத்தகு



ஆற்றல்களைப் பறை சாற்றியது. ஆக்கக் கலைகள், சமைத்தல், பொருட்களைப் பழுது பார்த்தல், கோலமிடுதல் போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்கள் பார்ப்போரைப் பிரமிக்க வைத்தனர்.

சங்கு முழங்க, குத்துவிளக்கொன்றினை ஏற்றி வைத்து பாரதப் பிரதமர் அவர்கள் தம் தொடக்கவுரையில் சாரண இயக்கம் ஆற்றிவரும் சீரிய பணியைப் போற்றிப் பேசினார். “தொண்டு, ஒற்றுமை, தேசாபிமானம், பெரியோர்களிடம் பணிவு, அச்சமற்ற தன்மை - இவைகளே சாரணியம் புகட்டும் அருமையான பாடங்கள். அச்சத்தினின்றும் விடுபடவில்லை என்றால் செம்மையான சமூக சேவை ஆற்ற முடியாது. ஒருவரது மகிழ்ச்சி மற்றவர்களை மகிழ்வுறச் செய்வதில்தான் உள்ளது. நாள்தோறும் ஒரு நல்ல செயல் புரியவேண்டும். மற்றவர்களால் அது நல்லது என்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருத்தல் வேண்டும். இதற்குச் சன்மானம் ஏதும் எதிர்பார்க்கக் கூடாது. இவ்வண்ணம் சிறுவயதிலிருந்தே இளைஞர்கள் பேணி வளர்க்கப்பட்டால் இந்தியாவிலும், உலகத்திலுள்ள மற்ற பாகங்களிலும் தக்கதொரு சமுதாயம் உருவாகும் என்பதில் எனக்கு ஐயமில்லை” என்று அறிவுறுத்தினார்.

இந்திய எரிபொருள் அமைச்சர் மாண்புமிகு பா. ராமச்சந்திரன் அவர்கள் ஜாம்பொரி நினைவு மலரினை வெளியிட்டார்.

இந்திய தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் வகையில் ஜாம்பொரி தங்கள் கைவினைத் திறமைகளைக் கண்டு புகழும்படிச் செய்தது.

ஜம்மு-காஷ்மீரிலிருந்து வந்த ஒரு சிறுவன் சொன்னான்: “இம்மாதிரியான வேலைகள் எனக்கு. மனவமைதியைத் தருகின்றன. மற்றும் என் கைச்செலவி

சிறிது பணமும் கிடைக்கிறது. என் பெற்றோர்களுக்கு என்பொருட்டு சுமையும் சற்றுக் குறைகிறது.''

ஜாம்பொரியில் ஏற்பாடு செய்யப்பட்ட கலைப்பொருட்காட்சி மிக்க கவர்ச்சிகரமாக இருந்தது. மற்ற மாநிலங்களோடு ஸ்ரீலங்காவும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டது ஒவ்வொரு மாநிலத்தின் சரித்திர, கலாச்சார ஒலிபரப்புகள் இங்கு பிரதிபலித்தன.

நம் தமிழகத்தின் கலைச் செல்வங்கள், வரலாற்றுச் சின்னங்கள், சாரண இயக்கத்தின் செயல் திட்டங்களைப் பற்றி விளக்கப் படங்கள், அட்டவணைகள் கைவினைப் பொருட்கள் யாவும் ஒரு எழிலோவியமாக ஒளிர்ந்தது. இந்தியாவிலே பேசப்படும் பல மொழிகள், பின்பற்றப்படும் பல கலைப் பண்பாடுகள், உடுத்தப்படும் பலவித ஆடைகள், உண்ணப்படும் பல வகை உணவு வகைகள்-இவைகளெல்லாம் நம் நாடு ஒரு விசித்திர வண்ணக் கலவை என எடுத்துக் காட்டின.

இரண்டு நாட்கள் மாலையில் நடந்த நாட்டுப் பாடல் ஆடல் நிகழ்ச்சியைக் காண பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து குவிந்தனர். இந்நிகழ்ச்சியிலும், விழுமிய தோற்ற முடைய பாடித் தீ நிகழ்ச்சியிலும் நம் கண்களுக்கும் செவிகளுக்கும் விவரிக்க முடியாத இன்பத்தைப் பொழிந்த சாரணச் செல்வங்களை எப்படிப் புகழ்வதென்று தெரியவில்லை.

மலேசியா, ஸ்ரீலங்காவைச் சார்ந்த அணிகள் அளித்த களியாட்டங்கள் சுவையாக இருந்தன. ஆடல் பாடல் நிகழ்ச்சியில் இரண்டாம் நாள் அன்று கர்நாடக மாநில முதல்வர் மாண்புமிகு தேவராஜ் அர்ஸ் அவர்கள் வந்திருந்ததுஇளைஞர்களுக்குப் பெருமையாக இருந்தது.

தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு எஸ். ராகவானந்தம் அவர்கள் தொடங்கிவைத்த அணி வரிசைக் காட்சி மறக்க முடியாத ஒன்றாகும்.

பாரதப் பண்பாட்டின் தொன்மை, அதன் வளர்ச்சி, அதன் தனிச்சிறப்புக்கள் ஆகியவைகளைக் கலைநோக்கோடு வெளிப்படுத்தும் தன்மையில் இது அமைந்திருந்தது. விதவிதமான திருவிழாக்கள், நாட்டு வரலாற்றில், புகழ்குவித்த பெரியோர்களின் வாழ்க்கை விளக்கங்கள், கிராமியக் கலைகள் என எண்ணிறந்த கருத்தைக் கவரும் பகுதிகள் அணி வரிசையில் இடம் பெற்றிருந்தன.

குறிப்பாக நம் தமிழ்நாட்டுக் குழுவினர் அளித்த 'அழகர் திருவிழா' நிகழ்ச்சி ஆரவார ஒப்பனை மிகுந்ததாக இருந்தது. பஜனை கோஷ்டிராஜாராணி குதிரையாட்டம், சிலம்பாட்டம், புலியாட்டம், ஒயிலாட்டம், காவடி, கரகம், நையாண்டி மேளம், தாரை தப்பட்டை சாட்டையுடன் சாமி ஆடுபவர், தீச்சட்டி, முளைப்பாரி எனப் பல்வகைக் கூறுகளுடன் இறுதியில் குதிரைமேல் சவாரி செய்து கொண்டு ஆரோகணமாக எழுந்தருளிய அழகர் பெருமான், ஏதோ வைகையாற்றை மறந்து, மறைமலை நகருக்குள் நுழைந்து விட்டரோ என்று எண்ணத் தோன்றியது.

கிராமச்சந்தை எனும் மற்றொரு நிகழ்ச்சி ஜாம்பொரியில் பலரின் கவனத்தை ஈர்த்தது. இன்றும், நாட்டுப்புறங்களில் நடக்கும் விளையாட்டு, ஓட்டப் பந்தயங்கள், பண்டவிற்பனைகள், ஆடல், பாடல்கள், செப்பிடு வித்தைகள், ஏராளம் ஏராளம். இவைகளை எல்லாம் சாரணச் சிறுவர் சிறுமியர் அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போல் வியத்தகு வகையில் செய்து காட்டினார்கள்.

பிள்ளைகள் மகாபலிபுரத்திற்கும் சென்னைக்கும் கல்வி உலாவாகச் சென்று வர நல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் ஒத்துழைப்போடு தேவைப்படும் பேருந்துகளை வாடகைக்கு எடுத்துச் சொற்பச் செலவில் இந்த வசதி செய்யப்பட்டது. இதற்கு ரயில்வே அதிகாரிகளும் தனிப்பட்ட முறையில் உதவி செய்தார்கள்.

சாரணர் சாரணியர் ஒரு பக்கம் தங்கள் நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருக்கும்போது, சாரண சாரணியத் தலைவர்களுக்கென சில கூட்டங்கள் நடத்தப் பெற்றன. ''சமூக வளர்ச்சிக்காக'' எனும் தலைப்பிலே இரண்டு சிறப்புக் கருத்தரங்குகள் நடந்தேறின. 'அனைத்து நாடுகள் குழந்தை ஆண்டு'' மற்றும் ''முதியோர் கல்வி'' ஆகிய இரண்டு தலைப்களின்கீழ் சாரண இயக்கம் எவ்வண்ணம் சமுதாயத்திற்குச் செயலாக்கத் திட்டங்களின் மூலம் சீர்சால் தொண்டாற்ற முடியுமென்று விவாதிக்கப்பட்டு, தேசிய இயக்கம் இதற்காகத் தயாரித்துள்ள திட்டக்கூறுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. நம் தமிழகக் கல்வி அமைச்சர் முதியோர் கல்வி கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து, முதியோர் கல்வித் திட்டத்தைச் சாரண இயக்கம் செயல்படுத்த அரசு இயன்று உதவி செய்ய முன்வரும் என்று எடுத்துச் சொன்னார்கள்.

ஜனவரி 22-ஆம் நாள் ஜாம்பொரியின் இறுதிநாளாகும். அன்று மாலை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பிரிவு உபசாரச் சொற்பொழிவை ஆற்ற மன முவந்து வந்தார்கள். மீண்டும் அவரைக் காணுவதில் பிள்ளைகள் பெற்ற மகிழ்ச்சி கொஞ்ச நஞ்சமல்ல.

முதல்நாள் நடந்ததுபோல முதலில் பிரதம விருந்தினர், திறந்த வெளி அரங்கிலுள்ள அணிகளை மேற்பார்வையிட்டார். பிறகு இசைவாத்தியங்கள் முழங்க அணி வகுத்து வீரநடை போட்டுக் கொண்டு சென்ற சாரணச் சிறுவர் சிறுமியர்களின் மரியாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

தான் நிகழ்த்திய இறுதியுரையில் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான பிள்ளைகளுக்கும், அவர்களுடன் வந்திருந்த தலைவர்களுக்கும் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்து, ஜாம்பொரி வெற்றிகரமாக முடிந்தது பற்றி மிகவும் மகிழ்ச்சியடைந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

''சாரண இயக்கம் ஆரம்பத்தில் பல இடர்ப்பாடுகள், சோதனைகளுக்கிடையில் டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார், பண்டித மதன் மோகன் மாளவியர் போன்ற நாட்

டுக்குழைத்த மேதைகளின் தீரமிகுத் தொண்டாற்றலினால் உலக நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெற்றது ஒரு வரலாற்றுச் சிறப்பாகும். சாரணர் சாரணியர் ஒற்றுமைக்கும், மனத் திட்பத்திற்கும், ஒழுங்கு, கட்டுப்பாட்டிற்கும், நாணயத்திற்கும், தியாக உள்ளத்திற்கும் எடுத்துக்காட்டாக நிற்பவர்கள். அவர்கள் தங்கள் இலட்சியப் பாதையில் என்றும் நிலைத்துத் திகழ வேண்டும். நாட்டின் மேம்பாட்டிற்கும், நலியுற்றோரின் புனர்வாழ்விற்கும் என்றும் பாடுபட வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் சாரண இயக்கத்திற்குத் தொடர்ந்து ஆதரவையும், நிதியுதவியையும் மற்றும் எல்லா வகைகளில் ஊக்கத்தையும் தந்து பெருமை சேர்க்கும்'' என்றார்.

ஜாம்பொரிக்காகவும், பொதுவாக சாரண இயக்கத்திற்கு மகத்தான உதவி செய்தமைக்கும் தேசிய இயக்கத்தின் மிக உயர்ந்த விருதாகிய ''வெள்ளியானை'' மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகத்திற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டது. அத்துடன் திரு எச். சி. கோத்தாரிக்கும் இவ்விருது அளிக்கப்படுகிறது எனவும் அறிவிக்கப்பட்டது.

தேசிய ஆணையர் திருமதி லட்சுமி மஜூம்தார் தமிழக அரசுக்கு நன்றி கூறி, நிரந்தரமாகத் தென்னிந்தியப் பகுதியில் ஒரு பயிற்சி முகாம் நிறுவப்படத் தேவைப்படும் 50 ஏக்கர் நிலத்தை இலவசமாக அளிக்குமாறு மாண்புமிகு முதல்வரைக் கேட்டுக் கொண்டார். ஜாம்பொரியின் வெற்றிக்காக அயராது பாடுபட்ட அனைவர்க்கும் மாநில முதன்மை ஆணையர் நன்றி கூறினார்.

அமெரிக்க நாட்டிலிருந்து வந்த சாரண தூதுவர் 1975-ல் நடந்த உலக ஜாம்பொரி பாடித் தீயிலிருந்து எடுத்து வைக்கப்பட்டிருந்த சாம்பலின் ஒரு பகுதியை, மறைமலை நகரில் விமரிசையாக நடந்த ஜாம்பொரிப் பாடித்தீயில் தூவி ஆசி கூறினார்.

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று நம் தமிழ்நாட்டுப் புலவன் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லிப்போந்தான். அவனது கூற்றின் தத்துவத்தை நம் ஜாம்பொரி மீண்டும் கோடிட்டுக் காட்டியது போலிருந்தது.

தமிழகம் அன்புகனிந்த கனிவாகவும், இன்ப முதிர்ந்த முதிர்வாகவும், விண்ணை அளக்கும் விரிவாகவும் உள்ளத் தொளிரும் விளக்காகவும் விளங்கியது என ஜெனிவாவிலிருந்து வந்திருந்த உலகச் சாரணப் பணியரங்கின் முதன்மைச் செயலாளர் திரு லாஸ்லோ நாஷ் என்பவர் பாராட்டிப் பேசியதிலிருந்து புரிந்தது.

தமிழகத்திற்கு ஜாம்பொரி ஓர் அபூர்வமான வெற்றி என்று மலேசியாவிலிருந்த வந்த சாரணியர் அணியின் தலைவர் மனந்திறந்து புகழ்ந்தார்.

ஜனவரி 23-ந் தேதி காலை மாநில அணிகளின் தலைவர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னங்களும், பல போட்டிகளில் வெற்றி பெற்ற சாரணர் சாரணியர் அணிகளுக்குச் சான்றிதழ்களும் தேசிய ஆணையரால் வழங்கப்பட்டன. நினைவுச் சின்னம், தக்கையினால் அழகாகத் தயாரிக்கப்பட்ட மகாபலிபுர கோபுரந்தான் ஒரு கண்ணாடிக் கூடுக்குள் பொருத்தப்பட்ட ஒன்றாகும். இந்த மகாபலிபுரம்தான் நம் ஜாம்பொரியின் அடையாளச் சின்னமாக ஏற்றுக் கொண்டிருந்தோம்.

நுழை வாயிலில் இந்தக் கோபுரமே பகட்டாகப் பார்ப்போர்க் கண்களைக் கவர்ந்தது. சாரணர் அணிந்து கொள்ளும் கழுத்துப் பட்டிக்கான குழையில்கூட இந்தக் கோபுரமே பளிச்சிட்டது. இந்தக் கோபுர முத்திரையுடன்தான் ஒவ்வொரு நாளும் ஜாம்பொரியின் நாளிதழ் வெளிவந்தது.

பத்து நாட்களுக்கு வானம்பாடிகளென இருந்த அந்த 20,000 சிறுவர் சிறுமியர்களுக்கு மறைமலை நகரை விட்டுப் பிரியும்போது கண்களில் நீர் துளித்தது. ஆனால், அவர்கள் பெற்ற புதிய அனுபவங்கள் அவர் நினைவில் என்றும் பசுமையாக நிலைத்து நிற்கும் என்பது உறுதி!

## முதல்வரின்  முத்துக்கள்

தென்னை மரத்தை நட்டுப் பயிராக்கி வளர்க்கிறவர்கள், எப்படிப் பிற்காலச் சந்ததியின் நலனுக்காகச் செயல்படுகிறார்களோ, அதுபோல தமிழக அரசு வருங்கால நலனை மனத்தில் கொண்டு திட்டம் தீட்டிச் செயல்படுகிறது.

* * *

புகழ்பெறவேண்டும் என்பதற்காக எந்த ஒரு காரியத்தையும் செய்யக்கூடாது. நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியத்திற்கும் புகழ் கிடைத்தே தீரும் என்கின்ற அகந்தை உணர்வும் கூடாது.

நல்ல ஒரு இலட்சியத்திற்காகக் கடமையுணர்வோடு மேற்கொள்ளப்படும் எந்த ஒரு செயலுக்கும் நிச்சயம் புகழ் கிடைக்கும்.

* * *

ஒரு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும் என்ற லட்சியத்துடன் நல்லவர்கள் பலர் சேர்ந்து, நல்ல தியாக உணர்வோடு, நல்ல முறையில் மேற்கொள்கின்ற எந்த ஒரு உழைப்பும், முயற்சியும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன்—ஆதரவுடன் வெற்றி அடையும் என்பது நிச்சயம்.



குழந்தைகளுக்குத் தேவை
சத்தான உணவு
பயிர்களுக்குத் தேவை
விஜய்



குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.




ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017




MFL-1517

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002












அகில இந்திய சுற்றுலா
வர்த்தகப் பொருட்காட்சி







பதிவு எண். M. 8676

